## ஹரிகதாம்ருதசாரம்
## சந்தி 3 : வியாப்தி சந்தி

**புருஷரூபத்[1]ரய பு[1]ராத[1]ன**
**புருஷ புருஷோத்த[1]ம க்ஷராக்ஷர**
**புருஷபூஜிதபாத[3] பூர்ணானந்த[3] ஞானமய |**
**புருஷசூக்த[1]சுமேய தத்த**
**த்[1] பு[1]ருஷஹ்ருத் புஷ்க[3]ர நிலய மஹ**
**புருஷ ஜாண்டந்த[1]ரதி[3] ப[3]ஹிரதி[3] வ்யாப்த[1] நிர்லிப்த[1] ||1**

புருஷரூப த்ரய = மூன்று புருஷ ரூபங்களை தரித்த
புராதன புருஷ = ஆதி புருஷனான
புருஷோத்தம = க்ஷராக்ஷர புருஷர்களைவிட சிறந்தவனான
க்ஷராக்ஷர புருஷ பூஜிதபாத = க்ஷர = பிரம்மாதி தேவதைகள். அக்ஷர = ரமாதேவி. இந்த இரண்டுவித புருஷர்களால் பூஜிக்கப்படும் பாதங்களைக் கொண்ட
பூர்ணானந்த ஞானமய = முழுமையான ஆனந்தத்தையும், ஞானத்தையும் ஸ்வரூபமாகக் கொண்ட
புருஷசூக்த சுமேய = புருஷசூக்தத்தினால் நன்றாக விளக்கப்படும்
தத்தத்புருஷ ஹ்ருத்புஷ்கர நிலய = க்ஷர அக்ஷர புருஷர்களின் இதயங்களை தன் வீடாகக் கொண்ட, அவர்களின் நடுவில்
மஹாபுருஷ = புருஷர்களின் சிறந்தவர்களான ஸ்ரீபரமாத்மனால்
ஜாண்டந்தரதி பஹிரதி = உருவாக்கப்பட்ட பிரம்மாண்டத்தின் உள்ளேயும் வெளியேயும்
வியாப்த = வியாப்தனாக இருந்தாலும்
நிர்லிப்த = அதற்கும் அவனுக்கும் சம்மந்தம் இல்லாதவனைப் போல இருக்கிறான்.

ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்ரீபரமாத்மன் மூன்று புருஷ ரூபங்களை தரித்தான். இவன் புராண புருஷன். ரமா பிரம்மாதி, அனைத்து தேவதைகளையும்விட, கருட சேஷ கந்தர்வ ஆகிய எல்லோர்களையும்விட உத்தமன். க்ஷரா அக்ஷரர்களாகிய ரமா பிரம்மாதிகளால் வணங்கப்படும் பாதங்களைக் கொண்டவன். பூர்ணானந்த ஞானத்தைக் கொண்டவன். புருஷ சூக்தத்தினால் விளங்கிக் கொள்ளப்படுபவன். அந்தந்த புருஷர்களின் இதய கமலத்தில் வசித்திருப்பவன். பிரம்மாண்டத்தின் வெளியேயும் உள்ளேயும் என அனைத்து இடங்களிலும் வியாப்தனாக இருந்தாலும், எதற்கும் சம்பந்தப்படாதவன்போல இருப்பவன்.

புருஷரூபத்ரய - ஸ்ரீபரமாத்மன், மூன்று புருஷ ரூபங்களை தரித்த சந்தர்ப்பம் எப்போது என்றால்: பாகவத மூன்றாம் ஸ்கந்தம், ஆறாம் அத்தியாயத்தில்: 'பகவானேக ஆஸேதமக்ர ஆத்மாத்மனாம் விபு:' - அனைத்து ஜீவராசிகளுக்கும் பிரபுவான ஸ்ரீபரமாத்மன், ஸ்ருஷ்டிக்கு முன்னர் தான் ஒருவனே இருந்தான் என்று சொல்லி, அப்போது இந்த உலகத்தை படைக்க வேண்டும் என்று சிந்தித்தான் என்னும் விஷயத்தை 2ம் & 3ம் ஸ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

4ம் ஸ்லோகம்:
காலவ்ருத்யாந்து மாயாயாம் குணமய்யா மதோக்ஷஜ: |
புருஷேணாத்ம பூதேன வீர்யமாதத்த வீர்யர்வா ததோபவன் மஹத்தத்வ அவ்யக்தாத்கால ஜோதிதாத் ||

காலத்திற்கேற்ப பகவத்சேவை செய்துகொண்டிருக்கும் சத்வரஜோதமோ குணங்களைக் கொண்ட மாயா என்னும் பெயரைக் கொண்ட ப்ரக்ருதியில் தானே புருஷ ரூபத்தை ஸ்வீகரித்த ஸ்ரீபரமாத்மன் வீர்யதானம் செய்தான். அப்போது அவ்யக்த தத்வமும், ப்ரக்ருதியிலிருந்து மஹத் தத்வமும் பிறந்தது என்று

சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி முதல் ஸ்ருஷ்டியின் சமயத்தில், மஹத் தத்வாதிகளை படைக்க எடுத்த ரூபமே முதலாம் புருஷரூபம். பிறகு மஹத்தத்வத்திலிருந்து வைகாரிக, தைஜஸ, தாமஸ என்னும் மூன்று விதமான அஹங்கார தத்வம் பிறந்தது. அதன்பிறகு பஞ்சமஹா பூதங்கள், தன்மாத்ர குணங்கள், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், சித்தபுத்தி, மனஸ், அஹங்காரம் என்னும் 24 தத்வங்களும், அதன் அபிமானி தேவதைகளும் பிறந்தனர். அந்த தேவதைகள் அனைவரும் சேர்ந்து வசிப்பதற்கு ஒரு இடத்தை படைப்பதற்கு முயற்சித்து, அது முடியாமல், பரமாத்மனை ஸ்தோத்திரம் செய்த விஷயத்தை இந்த அத்தியாயத்தில் விளக்கியிருக்கிறார்.

ஆறாம் அத்தியாயத்தில், ஸ்ரீபரமாத்மன், தத்வாபிமானி தேவதைகளால் வணங்கப்பட்டு, சித்தாபிமானியான வாயுதேவருடன் சேர்ந்து, 23 தத்வங்களிலும் ஒரே நேரத்தில் நுழைந்து, அவர்களில் நிலைத்திருந்தான். ‘

ப்ரபுத்த கர்மாதெய்வேன த்ரயோவிம்ஷதிகோகண: |
ப்ரேரிதோ ஜனயத் ஸ்வாபிர்மாத்ராபிரபி புருஷம் ஹிரண்மய: ஸபுருஷ: சஹஸ்ர பரிவத்ஸர்யா அண்டகோஷ உவாஸாப்ஸு சர்வ சர்வோபப்ரும்ஹித: ||

பரமாத்மன் நுழைந்ததால் இந்த 23 தத்வங்களும், பகவத் ப்ரேரணையினாலும், தன்மாத்ரா குணங்களின் உதவியுடனும், ஒரு புருஷ ரூபத்தை ஸ்ருஷ்டித்தது. அந்த தங்க மயமான புருஷ ரூபமே, பிரம்மாண்டத்தின் உள்ளே இருந்து, ஓராயிரம் ஆண்டுகள் வரை தண்ணீரில் இருந்தது. அதன் பிறகு, பிரம்மாண்டத்தை 14 உலகங்களாக பிரித்தான் என்று சொல்கிறார்கள். இதிலிருந்து, பிரம்மாண்டத்தில் நுழைந்த புருஷ ரூபம் இரண்டாவது என்று தெரிகிறது.

முதலாம் ஸ்கந்தத்தில்:

ஜக்ருஹேபௌருஷம் ரூபம் பகவான் மஹதாதிபி: |
சம்பூதம் ஷோடஷ கலமாதௌ லோக ஸிஸ்ருக்ஷயா |
யஸ்யாம்பஸி ஷயானஸ்ய யோகனித்ராம் விதன்வத: |
நாபி ஹ்ருதாம்புஜாதாஸீத்பிரம்மா விஸ்வஸ்ருஜாம் பதி: |
பஷ்யாந்ததொரூப மதப்ரசக்ஷுஷ: சஹஸ்ரபாதோரு புஜானனாத்புதம் |
சஹஸ்ர மூர்த்த ஸ்ரவணாக்ஷினாஸிகம் சஹஸ்ர மௌல்யம்பர குண்டலோல்லஸத் ||

ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூல ஸ்ருஷ்டியை செய்வதற்கு, மஹத்தத்வ மஹாபூதங்கள் 5, ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, மஹத் தத்வாதி 16 கலைகளைக் கொண்ட புருஷ சம்பந்தமான ரூபத்தை தரித்தான். இந்த புருஷரூபியான ஸ்ரீபரமாத்மன், பிரளயோதய காலத்தில் படுத்து, யோக நித்திரையை முடிக்கும் காலத்தில், அவனின் நாபியிலிருந்து தோன்றிய தாமரையிலிருந்து, பிரஜைகளை ஸ்ருஷ்டிப்பவனான பிரம்மதேவர் தோன்றினார். அத்தகைய ‘சஹஸ்ர சீர்ஷாபுருஷ:’ என்னும் புருஷ சூக்தத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் போல, ஆயிரம் பாதங்கள், தோள்கள், காதுகள், கண்கள், மூக்குகள், ஆயிரம் கிரீடங்கள், குண்டலங்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ பரமாத்மனின் புருஷரூபத்தை, அல்பஞானிகள் அல்லாத, மகாத்மர்களான பிரம்மாதிகள் தற்போதும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி மஹத்தத்வாதிகளின் படைப்பிற்குக் காரணமான புருஷரூபம் 1, பிரம்மாண்டத்தில் நுழைந்த ரூபம் 2, நாபி கமலத்திலிருந்து பிரம்மதேவரைப் படைத்து, பத்பனாப என்னும் பெயரைப் பெற்ற புருஷ சூக்தத்தில் புகழப்பட்டுள்ள ரூபம் 3, என மூன்று புருஷ ரூபங்களை பாகவதம் விளக்குகிறது. இதே

விஷயத்தை ‘பிரதமம் மஹதஸ்ருஷ்டு த்விதீயம் த்வண்ட ஸம்ஸ்திதம் | த்ருதீயம் தேஹினாந்தேஹே’ என்று விஷ்ணு புராண வசனம் சொல்கிறது. இந்த வாக்கியத்தில் முதலாவது மஹத் தத்வத்தை ஸ்ருஷ்டித்த ரூபம் என்றும், இரண்டாவது பிரம்மாண்டத்தில் நுழைந்த ரூபம் என்றும் சொல்கிறது. இந்த இரண்டு ரூபங்களும் பாகவதத்தின் விளக்கத்திற்கு சரியாக பொருந்துகிறது. மூன்றாவது மட்டும் ‘தேஹினாம் தேஹே’ அனைத்து தேஹிகளின் தேகத்திலும் இருக்கும் புருஷ ரூபம் என்கிறது. ஆனால் பாகவதத்தில் பிரம்மதேவருக்கு மூலபூதமான சரீரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக இந்த மூன்றாவது தேகத்தின் விஷயத்தில் இங்கு வேறுபாடு வருகிறது என்றால்: முதலாம் ஸ்கந்தத்தில் இதற்கு சம்பந்தமாக:

ஏதன்மானாவதாராணாம் நிதானம் பீஜமவ்யயம் |
யஸ்யாம்ஷாம்ஷேன ஸ்ருஜ்யந்தெ தேவதியக்ஞனராதய: ||

’நாபியில் கமலம் இருப்பதால் பத்பனாபன் என்று பெயர் பெற்றுள்ள இந்த புருஷ ரூபம், அனைத்து அவதாரங்களுக்கும் விதையைப் போலவும், நிரந்தரமானதாகவும் இருக்கிறது. இந்த பரமாத்மனின் அம்சங்களிலிருந்தே, தேவதைகள், பறவை, மிருகங்கள், மனிதர்கள் ஆகியவை படைக்கப்பட்டிருக்கின்றன’ என்று சொல்கிறது. இதனால், ரமா பிரம்மாதி அனைத்து ஜீவராசிகளிலும், பின்ன-அம்சத்தினால் புருஷ ரூபத்தினால் ஸ்ரீபரமாத்மன் நிலைத்திருக்கிறான் என்று நிரூபணம் ஆகிறது. இதன் சுருக்கம் என்னவென்றால், எந்த புருஷரூபமானது, பிரம்மதேவர் உருவாக காரணமாக, பத்பனாபன் என்று பெயர் பெற்றதோ, அந்த ரூபமே அனைத்து ஜீவராசிகளிலும் இருக்கிறது என்று தெரியவருகிறது. ஆகையால், பாகவத வாக்கியத்திற்கும், விஷ்ணு புராண வாக்கியத்திற்கும் வேறுபாடு இல்லை என்று அறியவேண்டும்.

அல்லது புருஷரூபத்ரய என்பதை புருஷ, ரூபத்ரய என்று பிரித்தும் படிக்கலாம். புருஷ என்றால் ‘பூர்ண ஷட்குணத்வாத்புருஷ:’ ஆறு நற்குணங்களால் நிரம்பியவனாகையால் அவனுக்கு புருஷன் என்று பெயர். அல்லது ‘புருஸரதீதி புருஷ:’ புர என்றால் தேகம். அவன் மத்ஸ்ய, கூர்மாதி, கிருஷ்ண ரூபங்களை எடுத்திருப்பதால் புருஷன் என்று பெயர் பெறுகிறான். ரூபத்ரய = உலகப்புகழ் பெற்ற மூன்று ரூபங்களை தரித்தவன்.

பாகவத முதலாம் ஸ்கந்த தாத்பர்யத்தில்

பிரம்மா விஷ்ண்வேஷ ரூபாணித்ரீணி விஷ்ணோர்மஹாத்மன: |
பிரம்மணி பிரம்மருபஸன் ஷிவரூபீ ஷிவேஸ்தித: ||

ஸ்ரீவிஷ்ணுவிற்கு ’பிரம்ம விஷ்ணு மஹேஸ்வர’ என்று மூன்று ரூபங்கள் உண்டு. பிரம்மதேவரில் பிரம்ம ரூபத்திலும், ருத்ர தேவரில் ருத்ரரூபத்திலும் இருந்து, ஸ்ருஷ்டி சம்ஹாரங்களை செய்கிறார். ஸ்வயம் விஷ்ணு ரூபத்தில் இருந்து அனைத்தையும் நிர்வகிக்கிறான். இப்படியாக ரூப த்ரயங்கள் பரமாத்மனுக்கு இருக்கிறது. அல்லது, பரமாத்மனின் அவதாரங்களில் மூன்று விதங்கள் உண்டு. பாகவத எட்டாம் ஸ்கந்த 3ம் அத்தியாயத்தில் - ‘நம: ஷாந்தாய கோராய மூடாய குணகர்மணே’ என்று சொல்வதால், சாந்தமான, கோரமான, மூடாவதாம் என்று மூன்று விதங்கள் இருக்கிறது என்பதை அறியலாம். வாசுதேவாதி ரூபங்கள் சாந்தமான ரூபங்கள். பரசுராமாதி அவதாரங்கள் கோரமான ரூபங்கள். மத்ஸ்யாதி அவதாரங்கள் மூடாவதாரங்கள். இந்த அவதாரங்களில் பரஸ்பரம் வேறுபாடுகள் இல்லை என்றாலும், இடம் காலத்திற்கேற்ப இப்படி சொல்லலாம். இங்கு ரூபத்ரய

என்றால், மொத்தம் மூன்றே ரூபங்கள் என்று பொருளல்ல. அனேக ரூபங்கள் என்று நினைக்க வேண்டும்.

'புராதன புருஷ' என்றால் - 'ஏகோ நாராயண ஆஸீன்ன பிரம்மானச சங்கர:' என்னும் வசனத்திலிருந்து பிரம்மாதிகள் அனைவரும் பிறப்பதற்கு முன்னரும்கூட ஸ்ரீபரமாத்மன் இருந்தார் என்றதால் தாசராயர் 'புராதன புருஷ' என்றார். புருஷோத்தமன் என்னும் சொல்லுக்கு பொதுவாக

த்வாவியௌ புருஷௌ லோகே க்ஷரஷாக்ஷர ஏவச |
க்ஷரஸ்ஸர்வாணி பூதானி கூடஸ்தோக்ஷர உச்யதே |
உத்தம: புருஷஸ்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: ||

உலகத்தில் புருஷ என்னும் சொல்லால் அழைக்கப்படுபவர்கள் - க்ஷர மற்றும் அக்ஷர என்று இருவர் இருக்கின்றனர். க்ஷர என்றால் ஸ்தூல சரீரத்தைப் பெற்று, அதை இழக்கும் நிலையைப் பெறுபவர்கள். சரீர நாசம் இல்லாதவர்கள் அக்ஷரர். அது ரமாதேவி மட்டுமே.

ஸ்த்ரி ஸ்வரூபளான ரமாதேவிக்கு புருஷ என்று எப்படி சொல்வது என்றால், சாந்தோக்ய பாஷ்யத்தில் 'புல்லீங்கேனோச்யதே ஸ்த்ரீபும்வசத்புகிமதீயத:' ரமாதேவி ஸ்த்ரீயாக இருந்தாலும், புருஷ சக்தி உள்ளவளாகையால், புல்லிங்க (ஆண்பால் பெயர்) பொருந்துகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி க்ஷர புருஷர்களான பிரம்ம, சிவாதிகளைவிட, அக்ஷரளான ரமா தேவியைவிட உத்தமனான புருஷன் இன்னொருவன் இருக்கிறான், அவனே புருஷோத்தமன். கீதையில் சொல்லியபடி, க்ஷராக்ஷர புருஷர்களான ரமா பிரம்மாதிகளைவிட உத்தமனாகையால் அவன் புருஷோத்தமன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த இடத்தில் அர்த்தம் சரியாக பொருந்தவில்லை எனலாம்.

தாசராயர் சொல்லும் 'க்ஷராக்ஷர புருஷ பூஜித பாத' என்னும் வாக்கியத்தால் க்ஷராக்ஷர புருஷரான ரமா பிரம்மாதிகளால் வணங்கப்படுபவனான பாதங்களைக் கொண்டவன் என்னும் அர்த்தம் வருவதால் புனருக்தி தோஷம் (இரு முறை விளக்கும்) வருகிறது. க்ஷராக்ஷர புருஷர்களால் வணங்கப்படும் பாதங்களைக் கொண்டவன் என்று சொன்னபிறகு, க்ஷராக்ஷர புருஷர்களைவிட உத்தமன் என்பது தானாகவே தெளிவாகிறது. ஆகையால், புருஷோத்தமன் என்னும் சொல் இங்கு தேவையேயில்லை. புருஷோத்தம என்னும் சொல்லாலேயே க்ஷராக்ஷர புருஷர்களால் வணங்கப்படுபவன் என்று தெரிந்தபிறகு, மறுபடி 'க்ஷராக்ஷர புருஷ பூஜித பாத' என்று ஏன் இரண்டாம் முறை சொல்லவேண்டும்? இந்த காரணத்தால், புருஷோத்தமன் என்னும் சொல்லுக்கு வேறொரு அர்த்தம் சொல்லவேண்டியதாகிறது. 24 தத்வாபிமானி தேவதைகளுக்கும் புருஷ என்னும் பெயர் உண்டு. எப்படியெனில், புருஷரூபியான பரமாத்மன், ஆதியில் அவர்களில் நுழைந்து பிரம்மாண்டத்தை ஸ்ருஷ்டித்ததால், அவர்களுக்கு புருஷ என்று பெயர் வந்தது. அல்லது 'புருஷ பஹுஷு ஷீதீதி புருஷ:' என்னும் வாக்கியத்தால் அனைத்து பஞ்ச-பௌதிக சரீரத்திலும் தத்வாபிமானிகள் இருந்தே இருக்கின்றனர். ஆகையால், தத்வாபிமானி தேவதைகளுக்கு புருஷ என்று பெயர்.

ஸ்ரீபரமாத்மன் அந்த 24 தத்வாபிமானி தேவதைகளைவிட உத்தமனாக தான் இருப்பதால், புருஷோத்தமன் என்று பெயர் பெற்றான். அல்லது புருஷோத்தம என்னும் சொல்லுக்கு, கீதையின்படி 'க்ஷரஸ்ஸர்வாணி பூதானி' என்று பிரம்மரிலிருந்து துவங்கி அனைவருமே க்ஷர என அழைக்கப்படுகின்றனர். அக்ஷர என்றால் அது ரமாதேவி. பரமாத்மன் இவர்களைவிட உத்தமன் என்று அர்த்தம் சொல்லி, 'க்ஷராக்ஷர பூஜித பாத' என்னும் சொல்லுக்கு அர்த்தம் சொல்லவேண்டும். எப்படியெனில், விஷ்ணு தத்வ நிர்ணயத்தில் :

பிரம்மா ஷிவஸ்ஸுரேஷாத்யா: ஷரீர க்ஷரணாத்க்ஷரா: |
லட்சுமீரக்ஷர தேஹத்வாத க்ஷராத்பரதோ ஹரி: ||

பிரம்மா ருத்ர இந்திராதிகள், சரீர நாசம் கொண்டவர்கள் ஆகையால், க்ஷர என்று அழைக்கப்படுகிறார்கள். ரமாதேவியருக்கு சரீர நாசம் இல்லாததால் அவருக்கு அக்ஷர என்று பெயர். இவர்களைவிட உத்தமன் பரமாத்மன். இந்த ஆதாரத்தினால், க்ஷர சொல்லுக்கு, பிரம்ம ருத்ராதி ஜீவர்களை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும். கீதையின்படி, கலி முதலான தமோ யோக்யர்களைவிட பரமாத்மன் உத்தமனே ஆகியிருந்தாலும், அவர்களால் வணங்கப்படும் பாதங்களைக் கொண்டவன் அல்ல. தைத்யர்கள் பரமாத்மனை த்வேஷிக்கின்றனரே தவிர, பூஜிப்பதில்லை. ஆகையால், ரமா பிரம்மாதி ஜீவர்களால் பூஜிக்கப்படும் பாதங்களைக் கொண்டவன் என்று மட்டுமே பொருள். இப்படி புருஷோத்தம என்னும் சொல்லுக்கு ரமா பிரம்மாதி தகுதி உள்ளவர்களால் மட்டுமே வணங்கப்படும் பாதங்களைக் கொண்டவன் என்று பொருள் கொண்டால், அதில் புனருக்ஷி தோஷம் வருவதில்லை.

பூர்ணானந்த ஞானமய = முழுமையான ஆனந்த மற்றும் ஞானத்தைக் கொண்டவன். மணிமஞ்சரியில் - 'வந்தே கோவிந்தமானந்த ஞானதேஹம் பதிம் ஸ்ரிய:' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் 'ஆனந்தோ பிரம்மேதி வ்யஜானாத் விக்ஞானம் பிரம்மேதி வ்யஜானாத்' என்னும் உபநிஷத் வாக்கியங்களால் ஆனந்த ஸ்வரூபன் பிரம்மன், விக்ஞான ஸ்வரூபன் பிரம்மன் என்று தனித்தனியாக சொல்லியிருக்கும் பிரம்ம ஸ்வரூபத்தை இங்கு தாசராயர், ஒரே வாக்கியத்தில் 'பூர்ணானந்த ஞானமய' என்று சொல்கிறார். அனைத்து சூக்தங்களும் பரமாத்மனின் ஸ்வரூபத்தையே விளக்குகின்றன என்றாலும்,

யதைவ பௌருஷம் சூக்தம் விஷ்ணோரேவாபிதாயக |
ந ததா சர்வவேதாஷ்ச வேதாங்கானி ச நாரத ||

எப்படி புருஷ சூக்தமானது வெறும் விஷ்ணு ஸ்வரூபத்தை மட்டுமே வர்ணிக்கிறதோ அது போல, அனைத்து வேத வேதாங்கங்களும்கூட சொல்வதில்லை என்று பிரம்மசூத்ர பாஷ்ய பிரமாணத்தின் அர்த்தத்திலிருந்து மேற்சொன்ன விஷயம் புரிகிறது. ஆகையால் தாசராயர் 'புருஷசூக்த சுமேய' என்றார்.

'தத்தத்புருஷ ஹ்ருத்புஷ்கர நிலய' அந்தந்த புருஷர்களின் இதய கமலங்களில் வாசம் செய்பவன் என்று பொருள். பரமாத்மன் அனைவரின் இதய கமலங்களில் கண்டிப்பாக இருந்தாலும், முதல் சந்தியின் இறுதி பத்யத்தில் 'பரிமளவு சுமனதொளகனலனு அரணியொளகிப்பந்தெ தாமோதரனு பிரம்மாதிகள மனதலி தோரிதோரதலெ இருதிஹனு' என்று சொன்னதைப் போல, பிரம்மாதி ஞானிகளுக்கும், யோகிகளுக்கும் தரிசனம் அளித்து, பிறருக்கு தரிசனம் கொடுக்காதிருப்பவன். ஞானிகள் அனைவரும் அவனை கண்டிப்பாக காண்பர். பாகவத நான்காம் ஸ்கந்தம் 9ம் அத்தியாயத்தில், நாரதர் த்ருவனுக்கு உபதேசம் செய்த சமயத்தில்:

ஸ்ரீவத்ஸாங்கம் கனஷ்யாமம் புருஷம் வனமாலிகம் |
ஷங்க சக்ர கதாபத்யைரபிவ்யக்த சதுர்புஜம் |
கிரீடினம் குண்டலினம் கேயூர மலயான்விதம் |
கௌஸ்துபாபரண க்ரீவம் பீதகௌஷேயவாஸம் ஸம் |
பத்ப்யாம் நகமணிஸ்ரேண்யா விலஸத்ப்யாம் சமர்ச்சதாம் |
ஹ்ருத்பத்ம கர்ணிகாதிஷ்ண்ய மாக்ரம்யாத்ம ந்யவஸ்திதம் |

ஸ்மயமானமபித்யாயேத் ஸாதுராகாவலோகனம் ||

மேகத்தைப் போன்ற கருப்பானவனும், அனைவரின் இதயத்தில் நிலைத்திருப்பவனும், வனமாலையை தரித்திருப்பவனும், சங்கு சக்ர கதா பத்மங்களை வைத்திருக்கும் நான்கு கரங்களைக் கொண்டவனும், கிரீட குண்டலங்களை ஆபரணங்களாக ஏந்தியிருப்பவனும், கௌஸ்துப ஆபரணங்களை அணிந்த கழுத்தினைக் கொண்டவனும், பீதாம்பரத்தை தரித்திருப்பவனும், மணி போன்ற அழகான நகங்களைக் கொண்ட பாதங்களைக் கொண்டவனுமான பரமாத்மன், தன்னை அர்ச்சிப்பவர்களின் இதய கமலங்களை ஆக்ரமித்து, எப்போதும் புன்னகைத்தவாறு அவர்களை பார்த்துக் கொண்டிருப்பான் என்று நினைத்தவாறு அவனை தியானம் செய்யவேண்டும் - என்று நாரதர் த்ருவனுக்கு உபதேசிக்கிறார். த்ருவனும் அப்படியே செய்ததால், பரமாத்மனை அவனது இதய கமலத்தில் கண்டான்.

அதே ஸ்கந்தத்தில் 10ம் அத்தியாயத்தில்:

ஸவைதியாயோக விபாகதீவ்ரயா ஹ்ருத்பத்மகோஷேஸ்புரிதம் தடித்ப்ரபம் |
திரோஹிதம் ஸஹஸைடோபலக்ஷ்யை பஹிஸ்திதம் ததவஸ்தந்ததர்ஷ ||

த்ருவன் தன் தியானத்தினால், பக்குவத்தை அடைந்து, அதனால் தன் இதய கமலத்தில் மின்னலைப் போல பிரகாசிக்கும், தான் பார்த்திருந்த ரூபமே தன் எதிரில் நின்றிருப்பதைக் கண்டான். பரமாத்மனை த்ருவனுக்கு வரத்தைக் கொடுப்பதற்காக அவன் எதிரில் நின்று - 'வத்ஸ, எழுந்திரு. உனக்கு வரமளிப்பதற்காக நான் வந்திருக்கிறேன்' என்று சொல்ல, த்ருவனுக்கு தன் இதயத்தில் கண்டு வந்த பகவத் ரூபமானது மறைந்தது. அதே ரூபமானது, தன் எதிரிலேயே நின்றிருப்பதைக் கண்டு, பரமாத்மனை வணங்கினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி, பரமாத்மன் தன்னை தியானிப்பவர்களின் கண்ணிற்கு தெரிந்து, மற்றவர்களுக்கு தரிசனம் அளிக்காமல் இருக்கிறான் என்று அறியவேண்டும்.

மஹாபுருஷ ஜாண்டந்தரதி பஹிரதி வியாப்த - மகாபுருஷனான ஸ்ரீபரமாத்மனிடமிருந்து பிறந்த பிரம்மாண்டத்தின் உள்ளே மற்றும் வெளியே, எல்லா இடங்களிலும், மிகச் சிறிய பொருட்களிலிருந்து மிகப் பெரிய பொருட்கள் வரை அனைத்திலும், தேவ தைத்ய, பறவை விலங்குகளில் நிலைத்திருக்கிறான். 'அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வியாப்த நாராயணஸ்தித:' என்னும் வேத வாக்கியம் இதற்கு ஆதாரமாக இருக்கிறது. ஆனாலும், சம்பந்தப்பட்ட குண தோஷங்களிலிருந்து சம்பந்தப்படாமல் இருக்கிறான். இதற்கு ஆதாரமாக பாகவத 11ம் ஸ்கந்தத்தில்:

தேஜோப்பன்ன மமைர்பாவைர்மே கோகைர்வாயுனேரிதை: |
நஸ்ப்ருஷ்யதே நபஸ்தத்வத் கால ஸ்ருஷ்டைர்குணை: புர்மா ||

நெருப்பினாலும், தண்ணீரினாலும், நிலத்தினாலும், காற்றினால் நகர்த்தப்படும் மேகங்களினாலும், ஆகாயமானது எப்படி தோஷங்கள் அற்றதாக இருக்கிறதோ, அது போலவே பரமாத்மன், நர, மிருக போன்ற அனைத்து பிராணிகளிலும், அவற்றின் சம்பந்தப்பட்ட குண தோஷங்களின் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறான் என்று பொருள். இதிலிருந்து 'நிர்லிப்த' என்னும் சொல்லுக்கு அர்த்தம் விளங்குகிறது.

இந்த சந்தியில் எந்தெந்த இடங்களில், எந்தெந்த ரூபங்களால் பரமாத்மன் வியாப்தனாக இருந்து, என்னென்ன விஷயங்களை செய்கிறான் என்னும்

விஷயங்களை சொல்கிறார் தாசராயர். இந்த விஷயத்தையே இந்த பத்யத்தில் விளக்கியிருக்கிறார்.

**ஸ்த்ரீ நபு$^{1}$ம்சக$^{1}$ புருஷ பூ$^{4}$ சலி**
**லானலானில க$^{3}$க$^{3}$ன மன ஷஷி**
**பா$^{4}$னு கா$^{1}$ல கு$^{3}$ண ப்ரக்ருதியொளகொ$^{3}$ந்து$^{3}$ தா$^{1}$னல்ல |**
**ஏனு இவன மஹாமஹிமெ கடெ$^{3}$**
**கா$^{3}$ணரஜ ப$^{4}$வ ஷக்ரமுக$^{2}$ரு நி**
**தா$^{3}$னிஸலு மானவரிக$^{3}$ள வடு$^{3}$வதே விசாரிசலு ||2**

ஸ்த்ரி, நபும்சகன், புருஷ, பூ = பூமி, ஸலில = தண்ணீர், அனல = நெருப்பு, அனில = வாயு, ககன = ஆகாயம், மன = மனஸ். மன என்னும் சொல்லில், சித்த, புத்தி, அஹங்கார, ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, இவை அனைத்தையும் குறிக்க வேண்டும். மேலும், ஷஷி = சந்திரன், பானு = சூரியன், கால, குண = சத்வ ரஜஸ் தமோ குணங்கள், ப்ரக்ருதி = குளாத்மகளான ப்ரக்ருதி, இவற்றில், ஒந்து = எவையும் இவன் அல்ல.

இவற்றிலிருந்து வேறுபட்டு, அவற்றின் அந்தர்யாமியாக இருக்கிறான். இவன மஹாமஹிமெ = மகாமகிமைகளை என்னவென்று வர்ணிப்பேன்? (அல்லது இவனது மகாமகிமை என்ன என்று வியப்புடன் பார்ப்பது).

அஜ பவ ஷக்ர முகரு = பிரம்ம, ருத்ர, இந்திர ஆகியோர்.
நிதானிஸலு = எவ்வளவு சிந்தித்தாலும்
கடெகாணரு = இறுதியை பார்க்க முடியாது
விசாரிசலு = சிந்தித்துப் பார்த்தால்
மானவரிகெ = மனிதர்களுக்கு
அளவடுவுதெ = சாத்தியம் ஆகுமா? (என்றும் சாத்தியமே இல்லை).

ஸ்ரீபரமாத்மனின் ஸ்வரூபம் எத்தகையது என்றால், அவன் ஸ்த்ரி அல்ல, நபும்ஸகன் அல்ல, புருஷன் அல்ல, ப்ருத்வி, அபு, முதலான பஞ்ச பூதங்கள் அல்ல, தன்மாத்ர குணங்களில் ஒன்றுக்கும்கூட சம்பந்தப்பட்டவன் அல்ல. சித்த, புத்தி, மனஸ், அஹங்கார ஆகியவற்றில் எதற்கும் சம்பந்தப்பட்டவன் அல்ல. அவன் சந்திரனும் அல்ல. சூரியனும் அல்ல. காலனும் அல்ல. குணப்ரக்ருதியும் அல்ல. இவற்றிலிருந்து வேறுபட்டவன். இவற்றைத் தவிர வேறு எது மீந்திருக்கிறதோ, அதுவே பகவத் ஸ்வரூபம். அவனின் மகிமைகளை என்னவென்று வர்ணிப்பேன்? எவ்வளவு யோசித்தாலும், பிரம்மா ருத்ராதி தேவதைகளும்கூட அவனது ஸ்வரூபத்தைப் பற்றி முழுமையாக அறியார். என்று சொன்னபிறகு மனிதர்களால் அது சாத்தியமாகுமா? என்றும் முடியாது என்பதே சொல்ல வந்த விஷயம்.

முந்தைய ஸ்லோகத்தில், பிரம்மாண்டத்தின் உள்ளேயும், வெளியேயும் நிலைத்திருந்து, அதற்கு சம்பந்தப்படாமல் ஸ்ரீபரமாத்மன் இருக்கிறான் என்று சொல்லிவிட்டு, இந்த ஸ்லோகத்தில் அவன் ஸ்த்ரி அல்ல, புருஷன் அல்ல என்கிறார். இதே அர்த்தத்தை பாகவதம் எட்டாம் ஸ்கந்தம் ‘ஸவ்யேன தேவாசுர மர்த்ய திர்யங்னஸ்த்ரி நஷண்டோ நபுமான்னஜந்து:’ என்னும் ஸ்லோகத்தில் சொல்லியிருக்கின்றனர். இந்த இரண்டு ஸ்லோகங்களுக்கும் வேறுபாடு இருப்பதுபோல தெரிகிறது. ஏனென்றால், ஸ்ரீபரமாத்மன், அனைத்து இடங்களிலும் வியாப்தனாக இருப்பதால், சர்வஷப்த வாச்யனாக இருக்கிறான். பாகவத 11ம் ஸ்கந்தத்தில்:

கம்வாயு மக்னிம் ஸலிலம் மஹீஞ்ச ஜ்யோதீம்ஷி சத்வானி விஷோத்ருமார்தீ |
சரித்ஸமுத்ராம்ஸ்ச ஹரே:ஷரீரம் யத்கிஞ்ச பூதம் ப்ரணமேதனன்யம் ||

என்னும் ஸ்லோகத்தில், ஆகாயம், வாயு, அக்னி, தண்ணீர், பூமி, ஆகிய அனைத்தும் பகவந்தனின் சரீரம் என்று நினைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எட்டாம் ஸ்கந்தத்தில் 'ஸவைனதேவா' என்னும் ஸ்லோகத்தினாலும், 'ஸ்த்ரி நபும்சக' என்னும் பத்யத்தினாலும், இவை பரமாத்மனல்ல என்று சொல்லியிருக்கின்றனர். அப்படியெனில், இதில் எது உண்மை என்று நம்ப வேண்டும்?

அதாவது, 11ம் ஸ்கந்த ஸ்லோகத்தின்படி, ஸ்த்ரி, புருஷ, ஆகாச, வாயு ஆகியவற்றில், அந்த பொருட்களின் பெயரில், அதன் வடிவத்தில், அவற்றில் இருப்பதால், அவற்றில் இருக்கும் பகவத்ரூபங்களை சிந்தித்து பூஜிக்கவேண்டும். 8ம் ஸ்கந்த ஸ்லோகத்தின்படி மற்றும் இந்த பத்யத்தின்படியும், பரமாத்மன் ஆகாயம் முதலானவற்றில் இருந்தாலும், அதற்கு சம்பந்தப்பட்ட குண தோஷங்களுக்கு சம்பந்தப்படாமல் நிர்லிப்தனாக இருக்கிறான். அதுமட்டுமல்லாமல், அந்த ஆகாயங்களே பரமாத்மன் அல்ல. அவற்றிலிருந்து வேறுபட்டு, அவற்றின் உருவத்தைப் பெற்று மட்டும் இருக்கிறான். அவனது உண்மையான ஸ்வரூபம், அந்த ஆகாயம் முதலான ப்ராக்ருத வஸ்துகளில் எதுவும் அல்ல. பரமாத்மன் அப்ராக்ருதன் என்பதை சொல்லியிருக்கின்றனர். ஆகையால், இந்த இரண்டு வாக்கியங்களுக்கும் வேறுபாடு இல்லை என்பதை அறியவேண்டும்.

இவன மஹாமஹிமெ கடெகாணரஜபவ ஷக்ரமுகரு நிதானிஸலு - இப்படி இருக்கையில், மனிதர்கள் இவனின் மகிமைகளை காண்பரே? இதே அர்த்தத்தையே பாகவத 7ம் ஸ்கந்த 9ம் அத்தியாயம்

பிரம்மாதயஸ்ஸுரகணா முனயோத ஸித்தா: ஸத்வைக தானமதயோ வசஸாந்த்ரவாஹ்யை: |
நாந்தம் பரஸ்ய பரதோப்யதுனாபியாந்தி கிந்தோஷ்புமர்ஹதி ஸமே ஹரிருக்ரஜாதே: ||

பிரம்மாதி அனைத்து தேவதா கணங்கள், ரிஷிகள், சித்தர்கள் ஆகிய மஹனீயர்கள் உன் மகாமகிமைகளை, அவர்களது பிரவாகமான வாக்கினால் எவ்வளவு துதித்தாலும், இன்னும் அதன் இறுதியைக் காணமுடியாமல் இருக்கின்றனரோ, அத்தகைய நீ தைத்ய குலத்தில் பிறந்த எனக்கு நீ தரிசனம் அளித்தது உன் விருப்பத்தினாலேயே தவிர வேறு காரணம் எதுவுமில்லை என்று பிரகலாதன் சொல்கிறான். இதே அர்த்தத்தையே தாசராயர் இங்கு சொல்லியிருக்கிறார்.

**கந்த4 ரஸ ரூப1 ஸ்பர்ஷ ஷ**
**ப்தொ3ந்து3 தா1னல்லத3ரத3ர பெச**
**ரிந்த3 க1ரெசுத ஜீவரிகெ3 த1ர்பக1னு தா1னாகி3 |**
**பொ1ந்தி3 கொ1ண்டி3ஹ பரமக1ருணா**
**சிந்து4 சாஸ்வத1 மனவெ மொத3லா**
**திந்த்ரியக3ளொளகி3த்து3 போ4கி3சுதி1ஹனு விஷயக3ள ||3**

கந்த ரஸ ரூப ஸ்பர்ஷ ஷப்த = இந்த ஐந்து தன்மாத்ரா குணங்களுக்கு
ஒந்து தானல்ல = ஸ்ரீபரமாத்மன் இவை எவற்றிற்கும் சம்பந்தப்பட்டவன் அல்ல
அதரதர = அந்தந்த
பெஸரினிந்த = பெயர்களில்
கரெஸுத = அழைத்துக்கொண்டு
ஜீவரிகெ = ஜீவர்களுக்கு
தர்பகனு = திருப்தியைக் கொடுக்கிறான்
பொந்திகொண்டிஹ = சேர்த்துக் கொண்டிருக்கிறான்

ஷாஸ்வத = நிரந்தரமானவன்
பரமகருணாசிந்து = பரம கருணைக்கடலான ஸ்ரீஹரி
மனவெ மொதலாதிந்த்ரியகளொளகித்து = மனஸ், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் ஆகியவற்றில் இருந்து
விஷயாதிகள = விஷய போகங்களை
போகிஸுதிஹனு = ஜீவர்களின் சுகத்திற்காக தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

கந்த, ரஸ, ரூப, ஸ்பர்ஷ, ஷப்த என்னும் ஐந்து தன்மாத்ரா குணங்களில் ஸ்ரீபரமாத்மன் எதுவும் இல்லை. ஆனாலும், அவன் அவற்றில் இருந்து அவற்றினால் ஆகும் செயல்களை தானே செய்து, செய்விப்பதால் பரமாத்மனே கந்த ரஸாதி சொற்களால் அழைக்கப்படுகிறான் என்று வேதங்கள் சொல்கின்றன. ஆக, இந்த ஐந்து தன்மாத்ரங்களில் இருந்து, அவற்றினால் ஆகும் சுகங்களை ஜீவர்களுக்குக் கொடுத்து, திருப்திப்படுத்துகிறான். கருணைக்கடலான ஸ்வாமி, மனஸ், கண், காது ஆகிய இந்திரியங்களுக்குள் அதன் வடிவமாகவே இருந்து பார்க்கிறான், கேட்கிறான் - ஜீவர்களின் கர்மங்களுக்கேற்ப செயல்களை செய்வித்து, சுகங்களை மட்டும் தான் அனுபவிக்கிறான். அதுவும்கூட ஜீவர்களின் நலனுக்காகவே ஆகும். பூர்ணகாமனான ஸ்ரீஹரிக்கு இந்த சுகங்களினால் ஆவதென்ன? (எதுவும் இல்லை). பரமாத்மன், அந்த சுகங்களை ஸ்வீகரிக்காதிருந்தால், ஜீவர்களுக்கு சுகம் கிடைக்காது. ஆகையாலேயே, அவற்றை ஸ்வீகரிக்கிறான் என்று அறியவேண்டும்.

கந்தரஸாதி மாத்ரா குணங்களின் விவரம்:

பஞ்ச மஹாபூதங்களில், பூததத்வ மாத்ரா குணம் - கந்த. இந்த பூத-தத்வம், ஞானேந்திரியங்களில் ஒன்றான மூக்கில் இருக்கிறது. இதன் மாத்ரா குணமே கந்தம் ஆகையால், மனிதர்கள் நறுமணத்தையும், துர்மணத்தையும் வித்தியாசம் அறிகின்றனர். ஆகையால், கந்தகுணம் சிறந்த பூத-தத்வ குணம் என்று அறியவேண்டும். ஸ்ரீபரமாத்மன், மூக்கு இந்திரியத்தில், அதே உருவமாக, அதே பெயரில், அதில் அடங்கியிருக்கும் பூததத்வத்திலும், தன்மாத்ரா குணமான கந்தத்திலும் இருந்து, சுகந்தத்தை தான் ஸ்வீகரித்து, அதன் மூலம் ஜீவர்களை திருப்திப்படுத்துகிறான். துர்மணத்திலிருந்து வரும் துக்கத்தை, தான் ஏற்றுக்கொள்ளாமல், அதனை ஜீவர்களுக்கு அவர்களின் கர்மத்திற்கேற்ப கொடுக்கிறான்.

அது ஏனெனில், பரமாத்மனுக்கு ஏதோவொரு புண்ணியத்தைக் கொடுத்தால் ‘மரளிதனகர்ப்பிஸலு கொட்டுதனந்த மடிமாடி’ என்று தாசராயர் முன்னர் சொல்லியிருப்பதைப் போல, அந்த புண்ணியத்தை அவன் ஏற்றுக்கொண்டு, அதனை பன்மடங்காக்கி திருப்பிக் கொடுக்கிறான். இப்படி பக்தர்கள் கொடுக்கும் பாவங்களை தான் ஏற்றுக்கொண்டால், அதையே பன்மடங்காக்கி திருப்பி அவர்களுக்கே கொடுக்க வேண்டியிருப்பதால், பரமாத்மன், பக்தர்கள் தாங்கள் செய்த புண்ணிய பாவங்களை தனக்கு சமர்ப்பித்தால், அந்த பாவங்களை தான் ஏற்றுக்கொள்ளாமல் அவற்றை பஸ்மம் ஆக்கிவிடுகிறான்.

இதுமட்டுமல்லாமல், பரமாத்மன், ஆனந்தஸ்வரூபமானவன் ஆகையால், ஜீவர்கள் கொடுக்கும் ஆனந்தத்தை மட்டும் ஏற்றுக்கொள்கிறான். துக்கங்கள் இல்லாதவன் ஆகையால், பக்தர்கள் தனக்கு சமர்ப்பிக்கும் பாவங்களை சுட்டு பொடிப்பொடியாக்கி விடுகிறான். அந்த பக்தர்கள் செய்யும் பாவங்களினால் வரும் பலன்களை, அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கிறான். அவர்கள் கொடுக்கும் சுகங்களை, பக்தர்களின் நலனுக்காக, தன் விருப்பப்படி தான் ஸ்வீகரிக்கிறானே தவிர, அந்த புண்ணிய பாவங்கள், பரமாத்மனை எதுவும் செய்வதில்லை.

தண்ணீரானது அனைத்தையும் நனைக்கும் / மூழ்கடிக்கும் சக்தி கொண்டதாக இருந்தாலும், எப்படி தாமரை இலையை அது நனைப்பதில்லையோ, அப்படியே, கண் காது முதலான இந்திரியங்களால் வரும் சுகதுக்கங்கள் பரமாத்மனை பாதிப்பதில்லை. பரமாத்மன் எதற்கும் சம்பந்தப்படாதவனாக இருக்கிறான். இப்படியே மற்ற கர்மேந்திரியங்களின் செயல்களும் இருக்கின்றன என்று அறியவேண்டும். இந்த கண், காது ஆகியவற்றின் செயல்களுக்கு முக்கிய காரணம் - மனஸ். மனஸ் இல்லாமல் அந்த இந்திரியங்களின் செயல்கள் எதுவும் நடைபெறுவதில்லை.

நம் மனம் நம்மிடம் இல்லாதிருந்தால், நம் எதிரில் யார் இருந்தாலும் அவர் நமக்குத் தெரிவதில்லை. யார் எது சொன்னாலும், அது நமக்குக் கேட்பதில்லை. இது அனைவருக்குமே அனுபவத்தில் வந்த விஷயம்தான். ஆகையாலேயே, பாகவதத்தில் ‘மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:’ என்று சொல்லியிருக்கின்றனர். ஆகையால், அனைத்து இந்திரியங்களையும்விட மனஸ் என்னும் இந்திரியமே பெரியது. ஸ்ரீபரமாத்மன் மனோ-நாமகனாகி மனதில் இருந்து, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களால், கர்மங்களை செய்வித்து சுகங்களை தான் ஏற்றுக்கொண்டு, ஜீவர்களை திருப்திப்படுத்தி, துக்கங்களை ஜீவர்களுக்குக் கொடுத்து தான் எதற்கும் சம்பந்தப்படாமல் இருக்கிறான்.

**ஸ்ரவண நயன க்4ராண த்வக்3ரஸ**
**நிவுக3ளலி வாக்பா1ணி பா1தா3**
**த்யவயவக3ளலி தத்கு3ணகளலி தத்ப1தி1க3ளொளகெ3 |**
**ப்ரதி1த1த1னு தா1னாகி3 க்ருதி1பதி1**
**விவித4க1ர்மவ மாடி3 மாடி3ஸி**
**ப4வகெ1 கா1ரணனாகி தி1ருகி3ஸுதி1ஹனு தி1ளிசத3லெ ||4**

ஸ்ரவண நயன க்ராணத்வக்ரஸ = காது, கண், முக்கு, தோல், நாக்கு
இவுகளலி = இவற்றில்
வாக்பாணி பாதாதவயவகளலி = வாய், கை, கால், ஆகிய சொற்களால்
அவயவகளலி = அந்த உறுப்புகளில்
தத்குணகளலி = கேட்பது, பார்ப்பது, செய்வது, நடப்பது ஆகிய குணங்களில்
தத்பதிகளொளகெ = கண் முதலான இந்திரியாபிமானி தேவதைகளில்
ப்ரவிததனு = நிலைத்திருக்கிறான்
க்ருதிபதி = க்ருதி நாமகளான லட்சுமிதேவியின் பதியான ப்ரத்யும்ன நாமக ஸ்ரீபரமாத்மன்
விவிதகர்மவ = பற்பல (அனைத்து) செயல்களையும் செய்து, செய்வித்து
பவகெ = சம்சார பந்தனத்திற்கு
காரணனாகி = நிமித்த காரணனாகி
திளிஸதலெ = ஜீவர்களுக்கு தெரியாமல்
திருகுதிஹனு = பூ, ஸ்வர்க்க, நரகாதி உலகங்களில் திரிந்து கொண்டிருக்கிறான்.

காது, கண், மூக்கு, மெய், நாக்கு என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும், வாய், கை, பாதம், மல ஜல உறுப்புகள் என ஐந்து கர்மேந்திரியங்களும், அவுகள குணகள என்றால் கேட்பது, பார்ப்பது, குளிர் வெயில் மாற்றங்களை அனுபவிப்பது, உப்பு காரம் முதலான அறுசுவைகளை அறிவது, பேசுவது, நடப்பது, மலஜல விசர்ஜனங்களை செய்வது என இவையே பத்து இந்திரியங்களின் குணங்கள் ஆகும். இவுகளலி தத்பதிகள் என்றால், காதுக்கு அபிமானி தேவதைகள், திக்தேவதைகள், கண்ணிற்கு அபிமானி தேவதை சூரியன், மூக்கிற்கு அஸ்வினி தேவதைகள், மெய்க்கு வாயு, முகத்திற்கு அக்னி, கைகளுக்கு தேவேந்திரன், பாதங்களுக்கு ஜயந்த, மல ஜல உறுப்புகளுக்கு முறையே மித்ர, தக்ஷ ஆகிய

தத்வாபிமானி தேவதைகளிலும் நிலைத்திருந்து, க்ருதிபதியான ப்ரத்யும்ன நாமக ஸ்ரீபரமாத்மன், ஜீவர்களின் அனாதி கர்மங்களுக்கேற்ப, சம்சாரத்திற்குக் காரணமான கர்மங்களை, தானும் செய்து, செய்வித்து, சம்சாரத்திலேயே ஜீவர்களை இருத்தி, அவர்களுக்குத் தெரியாமலேயே, அவர்களின் கர்மங்களுக்கேற்ப, அவர்களை பூமியில் பிறக்க வைப்பது, நரகத்தில் தள்ளுவது, ஸ்வர்க்கத்திற்கு போவது மறுபடி சம்சாரத்திற்கே வருவது என திரிந்து கொண்டிருக்கிறான்.

தத்வாபிமானி தேவதைகள் யார்யார் என்பதை பாகவத மூன்றாம் ஸ்கந்தம் ஏழாம் அத்தியாயத்தில்:

தஸ்யாக்னிராஸ்யம் நிர்பின்னம் லோகபாலோவிஷத்பதம் |
நிர்பின்னம் தாலுவருணோ லோகபாலோ விஷத்தரே: ||

இப்படி 12ம் ஸ்லோகத்தில் துவங்கி, 'பாதாவஸ்ய வினிர்பின்னௌ' என்னும் 22ம் ஸ்லோகத்தின் வரைக்கும் சொல்லியிருக்கின்றனர். அந்த ஆதாரத்தின் பேரிலேயே, தத்வாபிமானி தேவதைகளின் ஸ்தானம், குணங்கள் ஆகியவை எழுதப்பட்டிருக்கின்றன. கிருதிபதியான பிரத்யும்ன நாமக ஸ்ரீபரமாத்மன், இந்திரியங்களிலும், அவற்றின் குணங்களிலும், தத்வாபிமானி தேவதைகளிலும் நிலைத்திருந்து, ஜீவர்களின் அனாதி பிராரப்த கர்மங்களுக்கேற்ப, அறிவைக் கொடுத்து, அதற்கேற்ப செயல்களை செய்து, அவர்கள் மூலமாக செய்விக்கிறான். அவர்கள் மூலமாக சஞ்சித, ஆகாமி என அனைத்துவித கர்மங்களையும் செய்வித்து, ஸ்வர்க்க நரகாதி போகங்களைக் கொடுக்கிறான். சஞ்சித என்றால் அனாதியான பிராரப்த கர்மங்களை செய்துகொண்டிருக்கும்போதே, ஜீவன், மனோ வாக் காயங்களால், மறுபடி பத்து பிறவிகளை எடுக்கத் தேவையான கர்மங்களை செய்கிறான். முன்னர் செய்த கர்மங்களுக்கு சஞ்சித என்றும் பின்னர் செய்யப்போகும் கர்மங்களுக்கு ஆகாமி என்றும் பெயர்.

ஆக, தற்போது இந்த பிறவியில் நாம் அனுபவித்துக்கொண்டிருப்பது, சஞ்சித கர்மங்களின் பலன் என்றும், தற்போது செய்து கொண்டிருக்கும் கர்மங்களின் பலன்களை அடுத்த பிறவிகளில் அனுபவிப்போம் என்றும் அறியவேண்டும். இந்த கர்மங்கள் அனைத்தையும் செய்வித்து, ஜீவர்களை மறுபடி மறுபடி சம்சாரத்தில் அனுப்புவதற்கு பிரத்யும்ன நாமக பரமாத்மனே காரணம். இதன் காரணங்களை ஜீவர்கள் அறியமாட்டார்கள். ஸ்ரீபரமாத்மனுக்கு மட்டுமே தெரியும். ஆனால், பரமாத்மனே சம்சாரத்திற்குத் தேவையான கர்மங்களை ஜீவர்களால் செய்வித்தாலும், அவரவர்களின் அனாதி கர்மங்களுக்கேற்ப அவற்றை செய்விப்பதால், பரமாத்மனுக்கு வைஷம்யாதி எவ்வித தோஷங்களும் இல்லை என்று அறியவேண்டும்.

**கு³ணி கு³ணகளொளகி³த்து³ கு³ணி கு³ண**
**நெனிசுவனு கு³ணபத்த⁴னாக³தெ³**
**கு³ணஜ புண்யாபுண்ய ப2ல பிரம்மாதி சேதனக்கெ |**
**உணிசுதவரொளகி³த்து³ வ்ருஜினா**
**ர்த்த³ன சிதானந்தைக¹ தே³ஹனு**
**கொ¹னெகெ³ ஸசராசர ஜக³த்புகு⁴யெனிப னவ்யயனு ||5**

குணி குணகளொளகித்து = குணங்கள் உள்ளவர்களில் (சாத்விக, ராஜஸ, தாமஸ என்னும் ஜீவர்களில்)
குணபத்தனாகதெ = அந்த குணங்களுக்கு கட்டுப்படாமல்
குணிகுணனெனிஸுவனு = அந்த குணம் என்றே அழைக்கப்படுகிறான்
குணஜ = சத்வரஜஸ்தமோ குணங்கள் உள்ளவர்கள், அந்த குணங்களுக்கேற்ப செய்யும் செயல்கள்

புண்யாபுண்யபல = புண்ய, பாவ பலன்களை
பிரம்மாதி சேதனக்கெ = பிரம்மனில் தொடங்கி கலி வரைக்குமான சேதன சமூகத்திற்கு
அவரொளகிர்து = பிரம்மாதி ஜீவர்களில் இருந்து
உணிஸூத = சத்வ குணங்களால் வரும் புண்ய பலன்களை பிரம்மாதி தேவதா சேதனர்களுக்கும்; ரஜோ குணத்தால் வரும் சுகதுக்கம் கலந்த பலன்களை ராஜஸர்களான மனிதர்களுக்கும்; தமோகுணங்களால் வரும் பாவ பலன்களை தைத்ய தானவர்களுக்கும் கொடுத்தவாறு,
வ்ருஜினார்த்தன = பாவங்களை நாசம் செய்யும் (போக்கும்)
சிதானந்தைக தேஹனு = ஞானம், ஆனந்தம் இவற்றையே தேகமாகக் கொண்டிருக்கும் பரமாத்மன்
கொனெகெ = பிரளய காலத்தில் (ருத்ராந்தர்யாமியாக சங்கர்ஷண ரூபத்தில்)
ஸசராசரஜகத்புக் = சராசர பிராணிகளைக் கொண்ட உலகத்தை விழுங்கி (ருத்ரதேவரின் மூன்றாம் கண்ணிலிருந்து வந்த அக்னியால் சுடுகிறான் என்று பொருள்)
யெனிப = ஸசராசர என்னும் பெயரைப் பெறுகிறான்
அவ்யயனு = பிரளய காலத்திலும்கூட நாசம் இல்லாத பரமாத்மன்,
ஜகத்புக் = சராசர உயிரினங்களைக் கொண்ட இந்த உலகத்தை விழுங்கி, தன் உதரத்தில் வைத்துக்கொண்டு, ஸ்ரீமன் நாராயணன்
எனிப = என்று அழைத்துக் கொள்கிறான்.

குணங்கள் உள்ளவர்களுக்கு குணி என்று பெயர். இதில் சத்குணங்கள் அதிகமாக இருப்பவர்கள் சாத்விகர் எனப்படுகின்றனர் (பிரம்மாதி தேவதைகள்). ராஜஸர்களான மனிதர்கள் ரஜோகுணங்களைக் கொண்டவர்கள். தாமஸர் என்றால் தமோகுணம் கொண்ட தைத்ய தானவர்கள். இத்தகைய குணிகளான தேவ, மனுஷ்ய, தைத்யர்களிலும், சத்யரஜஸ்தமோ குணங்களிலும் நிலைத்திருந்து, அந்தந்த பெயர்களைப் பெறுகிறான். அதாவது, பிரம்ம தேவரில் பிரம்ம எனும் பெயரில் இருந்து, ருத்ர தேவரில் ருத்ர என்னும் பெயரில் இருந்து, இப்படியே இந்திராதி தேவதைகளிலும் இருந்து அந்தந்த பெயர்களில் அழைத்துக் கொள்கிறான். அப்படியே மனிதர்களிலும் இருந்து, அவர்களின் பெயர்களில் அழைக்கப்படுகிறான். தைத்ய தானவர்களில் இருந்து, அந்த பெயர்களில் அழைக்கப்படுகிறான்.

சத்குணத்தில் இருந்து சத்குணம் என்றும், ரஜோகுணத்தில் இருந்து ரஜோகுணன் என்றும், தமோகுணத்தில் இருந்து தமோகுணன் என்றும், பெயர் பெறுகிறான். இப்படி ப்ராக்ருதமான சத்வாதி குணங்களில் இருந்து, அந்தந்த பெயர்களைப் பெறுகிறானே தவிர, அந்த குணங்களினால் என்றைக்கும் தான் சிக்கமாட்டான்.

சாத்விகர்களான பிரம்மாதி தேவதைகளில் இருந்து, சத்வகுணத்தால் வரும் பலன்களை, அவரவர்களின் தகுதிக்கேற்ப அவர்களுக்கே கொடுக்கிறான். ராஜஸர்களான மனிதர்களில் இருந்து, ரஜோகுணத்தால் வரும் சுக-துக்கம் கலந்த பலன்களை, அவரவர்களின் தகுதிக்கேற்ப அவர்களுக்கே கொடுக்கிறான். தாமஸர்களான தைத்ய தானவர்களில் இருந்து, தமோகுணத்தால் வரும் பாப பலன்களை, அவரவர்களின் தகுதிக்கேற்ப அவர்களுக்கே கொடுக்கிறான். பிறரின் பாவங்களைப் பரிகரிப்பதால், பரமாத்மனுக்கு வ்ருஜினார்த்தன என்று பெயர். தானே பாவியாக இருந்தால், மற்றவர்களின் பாவங்களை எப்படி பரிகரிப்பது? பிறரின் பாவங்களைப் போக்குகிறான் என்று சொன்னதால், ஸ்வத: பாவங்கள் இல்லாதவன் என்று சொல்லத் தேவையேயில்லை. பாவங்கள் இல்லாதவனாகவும், ஞானானந்த ஸ்வரூபனாகவும் இருக்கிறான்.

ரமாபிரம்மாதிகளும்கூட ஞானாந்த ஸ்வரூபர்களே ஆகியிருந்தாலும், அவர்களின் ஞானானந்தத்திற்கு எல்லைகள் உண்டு. பரமாத்மனின் ஞானானந்தம் எல்லைகள் அற்றது. ஒப்புமைக்கு அப்பாற்பட்டது. அதுமட்டுமல்லாமல், வேறு ஒருவரின் உதவி இல்லாமலேயே, ஸ்வதந்த்ரமாக அனுபவிக்கக்கூடியது பரமாத்மனின் ஞானானந்தம். ரமாதிகளின் ஞானானந்தம், பரமாத்மனுக்குக் கட்டுப்பட்டவை. ஆகையால், பரமாத்மன் ஒருவனே, ஞானானந்த ஸ்வரூபர்களில் முக்கியமானவன் என்று அறியவேண்டும்.

ஸ்ரீபரமாத்மன், பிரளயம் துவங்கும்போது, ருத்ரனின் அந்தர்யாமியாக இருந்து, சங்கர்ஷண நாமகனாகி பிரபஞ்சத்தை எரிக்கிறான். இதற்கு ஆதாரமாக பாகவத 10ம் ஸ்கந்தத்தில் :

தத: ஸாம்வர்தகோ வன்ஹி சங்கர்ஷண முகோத்தித: |
தஹத்யனிலவேகோத்த: சூன்யான்பூவிவராந்ததா ||

பிறகு, சங்கர்ஷணனின் முகத்திலிருந்து வந்த அக்னி, சூன்யமான பூமியை தகிக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சர பிராணிகள் என்றால் நடமாடிக்கொண்டிருக்கும் அனைத்து பிராணிகளும் என்று பொருள். அசல என்றால் நடமாடாத பிராணிகள் என்று பொருள். இவற்றைக் கொண்ட அனைத்து உலகங்களையும், பிரளய காலத்தில் பரமாத்மன் விழுங்கி, தன் வயிற்றில் வைத்துக்கொண்டு, வடபத்ரசாயியாக (ஆல இலை) படுத்திருக்கிறான். ஆகையால், பரமாத்மன் ‘ஸசராசர ஜகத்புக்’ என்று அழைத்துக் கொள்கிறான். ஆனாலும், அவனுக்கு எந்தவிதமான நாசமும் இல்லாத காரணத்தால் ‘அவ்யயன்’ என்றும் பெயர் பெறுகிறான்.

**வித்$^{3}$யெ தா$^{1}$னெந் தெனிஸிகொ$^{1}$ம்ப$^{3}$ னி**
**ருத்த$^{4}$தே$^{3}$வனு சர்வஜீவர**
**பு$^{3}$த்தி$^{4}$யொளு நெலெசித்து$^{3}$ க்$^{1}$ருதி$^{1}$பதி$^{1}$ பு$^{3}$த்தி$^{4}$யெனிசுவனு |**
**சித்தி$^{4}$யெனிசுவ சங்கருஷண ப்ர**
**சித்த$^{4}$னாமக வாசுதேவ ன**
**வத்$^{3}$ய ரூப சதுஷ்டயக$^{3}$ளரித$^{1}$வனெ ப$^{1}$ண்டித$^{1}$னு ||6**

அனிருத்த தேவரு = அனிருத்த நாமக பரமாத்மன்
வித்யயந்து = ஜீவ பரமாத்மருக்கு பரஸ்பரம் பேதம் சொல்லும் வித்யை என்று அழைத்துக் கொள்கிறான்
க்ருதிபதி = க்ருதிதேவியின் பதியான பிரத்யும்ன ரூபி பரமாத்மன்
சர்வஜீவர = அனைத்து ஜீவர்களின்
புத்தியொள் = புத்தியில்
நெலெசித்து = நிலைத்திருந்து
புத்தியெனிஸுவனு = புத்தி என்று அழைத்துக் கொள்கிறான்
சங்கர்ஷண = சங்கர்ஷண நாமக பரமாத்மன்
சித்தியெனிஸுவ = சித்தி என்று அழைத்துக் கொள்ளும்
வாசுதேவ = வாசுதேவ என்று அழைக்கப்படும் ஸ்ரீபரமாத்மன்
ப்ரசித்தனாமக = புகழ்பெற்றவனான
அனவத்யரூப சதுஷ்டயகள = தோஷங்கள் அற்ற இந்த நான்கு ரூபங்களை
அரிதவனெ = அறிந்தவனே, பண்டிதன்.

வித்யைக்குள் இருந்து, அனிருத்த தேவன், வித்யை என்று அழைக்கப்படுகிறான். வித்யை என்றால் ‘வித்யாத்மனிபிதாபோத:’ என்னும் வாக்கியத்தினால், ஜீவ பரமாத்மரில் பரஸ்பர பேத சிந்தனை செய்வது. இந்த ஞானமானது பொதுவாக,

வாயுமதத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கு மட்டுமே இருக்கிறது. ஜீவ பிரம்ம ஐக்யத்தை சொல்வது, அவித்யை என்று அறியவேண்டும். கீதையில் :

தெய்வோ விஸ்தரஷ: ப்ரோக்த: ஆ ஸுரீம் பார்த்தமேஸ்ருணு |
ஈஷ்வரோஹ மஹம் போகீ சித்தோஹம் பலவான் சுகீ ||
ஆட்யோபிஜினவானஸ்மி கோன்யோஸ்தி ஸத்ருஷோமயா |
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்யெ இத்யஞான விமோஹிதா: ||

'மேலும் தெய்வ விஷயங்களை சொல்கிறேன் கேள்! - நானே பரமேஸ்வரன். நானே போகி. நானே சித்தன். பலசாலி. சுகி. பாக்யவந்தன். ஜனவந்தன். எனக்கு சமம் என்று யார் இருக்கின்றனர்? யாகத்தை செய்வேன். தானத்தைக் கொடுப்பேன். மகிழ்ச்சியடைவேன். என்று இத்தகைய அஞ்ஞானத்தினால் இருப்பவர்களே அசுரர்கள்' என்று பல வாக்கியங்களால் பார்த்தனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் உபதேசம் செய்கிறான். இதுவே அவித்யை. இந்த வித்யை, அவித்யை இரண்டுமே அகங்காரத்தினாலேயே பிறக்கின்றன. நான் சேவகன். பரமாத்மன் ஜகத்பிரபு என்று அறிவதற்கும் அகங்காரமே காரணம். ஜீவ பிரம்மருக்கு பேதத்தை சொலும் வித்யைக்குள் இருந்து வித்யை என்னும் பெயரைப் பெறுபவன், அனிருத்த நாமக பரமாத்மன் என்று அறியவேண்டும்.

க்ருதிபதியான பிரத்யும்னன், புத்தியில் நிலைத்திருந்து புத்தி என்னும் பெயரைப் பெறுகிறான். புத்தி என்றால் 'புத்த்யா ஸ்வாம்ஷேனயேனாஸௌ நிஸ்சயம் ப்ரதிபத்யதே' என்னும் பாகவத வாக்கியத்தால் - இதோ, அதோ என்று ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாமல், இதுவே அல்லது அதுவே என்னும் நிச்சய ஞானத்திற்கு புத்தி என்று பெயர். சங்கர்ஷண நாமக பரமாத்மன் சித்தி என்று பெயர் பெற்றிருக்கிறான். சித்தி என்றால், தூய்மையான சித்தத்தினால் உண்டான பகவத் ப்ரசாதமாகும். சத்விஷயங்களில் ஸ்திரமாக நிற்பதே சித்தம். இதிலிருந்து உண்டாகும் பகவத் பிரசாதமே சித்தி. இத்தகைய சித்தியில் சங்கர்ஷணன் இருந்து, சித்தி என்னும் பெயரைப் பெற்றிருக்கிறான்.

அனைத்து இந்திரியங்களுக்கும் மனமே காரணம். பத்து இந்திரியங்களின் செயல்கள் நடைபெற வேண்டுமெனில், மனஸ் இல்லாமல் எந்த வேலையும் நடைபெறுவதில்லை. மனோ நிக்ரஹத்தினாலேயே மனிதன், ஜிதேந்திரியன் என்று ஆகிறான். மனோ நிக்ரஹம் செய்யாமல், தன் இஷ்டம் போல செயல்களை செய்பவன் பாவியாகிறான். இத்தகைய மனதைக் கட்டுப்படுத்தும் விஷயங்களில், வாசுதேவ நாமக பரமாத்மன் இருந்து, பிரசித்தன் என்னும் பெயரைப் பெறுகிறான்.

இப்படி அகங்காரத்தினால் வரும் வித்யை, புத்தியினால் வரும் நிச்சய ஞானம், சித்தத்தினால் ஆகும் சித்தி, மனதினால் ஆகும் பிரசித்தி என்னும் நான்கு இடங்களில் அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ என்னும் நான்கு ரூபங்களால் ஸ்ரீபரமாத்மன், வித்யை, புத்தி, சித்தி, ப்ரசித்தி என்னும் நான்கு பெயர்களைப் பெற்று, அனவத்யனாக (யாராலும் வெல்லப்பட முடியாதவனாக) இருக்கிறான். மேலும், எவற்றின் சம்பந்தம் இல்லாமல், தோஷங்கள் அற்றவனாகவும் இருக்கிறான். இத்தகைய நான்கு ரூபங்களை அறிந்தவனே பண்டிதன் ஆகிறான்.

**த¹னு சதுஷ்டயக³ளொளு நாரா**
**யணனு ஹ்ருத்க¹மலாக்ய சிம்ஹா**
**சனதொளு அனிருத்தாதி ரூபக³ளிந்த ஷோபிசுத |**
**தனகெ³ தா¹னே சேவ்ய சேவக**
**நெனிஸி சேவாசக்த சுரரொள**
**க³னவரத நெலெசித்து சேவெய கொம்பனவரந்தே ||7**

தனு சதுஷ்டயகளொளு = அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ என்னும் நான்கு ரூபங்களைக் கொண்ட தன் சரீரங்களில்
நாராயணனு ஹ்ருத்கமலாக்ய சிம்ஹாசனதொளு = இதயக் கமலம் என்னும் சிம்மாசனத்தில்
அனிருத்தாதி ரூபகளிந்த ஷோபிஸுத = அனிருத்தாதி ரூபங்களால் நிலைத்திருந்து
தானே = நாராயண ரூபியான தானே
சேவ்ய சேவ்யகனெனிஸி = நாராயண ரூபத்தினால் வணங்கப்படுபவனாகவும்; அனிருத்தாதி ரூபங்களினால் வணங்குபவனாகவும் இருந்து
சேவாசக்த சுரரொளு = தன்னையே வணங்குபவர்களான ரமா பிரம்மாதி தேவதைகளில்
அனவரத = எப்போதும்
நெலெஸித்து = நிலைத்திருத்து
அவரந்தெ = ரமா பிரம்மாதிகளைப் போலவே
சேவெயகொம்ப = சேவையை ஸ்வீகரிக்கிறான்
அல்லது, அவரந்தெ = ரமா பிரம்மாதிகள், இந்திராதிகளிடமிருந்து சேவையைப் பெற்றுக் கொள்வதைப் போல, தானும் அனைத்து தேவதைகளிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்கிறான்.

ஸ்ரீபரமாத்மன், நாராயண ரூபத்தினால் செய்யும் வேலைகள் என்னவெனில்:

அனிருத்த, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ எனும் நான்கு ரூபங்கள் உள்ள தன் சரீரங்களின் இதய கமலங்கள் என்னும் சிம்மாசனத்தில் அமர்ந்து, அவற்றின் நடுவில் காட்சியளிக்கிறான். அதாவது அனிருத்த நாமக பரமாத்மனின் தேகத்தின் இதய கமலத்தில் நாராயணன், அனிருத்தாதி நான்கு ரூபங்களால் சேவையை ஸ்வீகரித்தவாறு காட்சியளிக்கிறான். இதைப் போலவே, பிரத்யும்ன, சங்கர்ஷண, வாசுதேவ ரூபங்களின் நடுவில், ஒவ்வொரு ரூபத்தின் இதய கமலம் என்னும் சிம்மாசனத்திலும், நாராயண ரூபத்தில் நிலைத்திருந்து, அனிருத்தாதி நான்கு ரூபங்களால் வணங்கப்பட்டு காட்சியளிக்கிறான் என்று அறியவேண்டும்.

இப்படி அனிருத்தாதி ரூபங்களால் சேவை செய்தவாறு, நாராயண ரூபத்தினால் அந்த சேவையைப் பெற்றவாறு, தானே சேவ்ய சேவகன் என்று பெயர் பெற்றிருக்கிறான். இதுமட்டுமல்லாமல், தன்னை எப்போதும் வணங்கிக் கொண்டிருக்கும், ரமா பிரம்மாதி தேவதைகளின் இதய கமலம் என்னும் சிம்மாசனத்திலும், அனிருத்தாதி நான்கு ரூபங்களில் நிலைத்திருந்து காட்சியளித்தவாறு, ரமா பிரம்மாதிகளால் சேவையைப் பெற்று, அந்தர்யாமி ரூபத்தினால் சேவையைப் பெற்றுக் கொள்கிறான்.

தனுசதுஷ்டயகளொளு - என்னும் சொல்லுக்கு அனிருத்தாதி நான்கு தேகங்களில் என்று பொருள் சொல்வதோடு மட்டுமல்லாமல் இன்னொரு பொருளும் சொல்லலாம். ஒவ்வொரு ஜீவனுக்கும் தேகாவரணம் (மூடி) உண்டு. அதாவது ; முதலில் ஜீவனின் ஸ்வரூப தேகம், இரண்டாவது லிங்கதேகம். இது ஜீவனின் ஸ்வரூப தேகத்திற்கு மேல் மூடியைப் போல உள்ளது. இதன் மேல் அனிருத்த தேகம் மூடிக் கொண்டிருக்கிறது. இதன் மேல் இந்த ஸ்தூல தேகம் இருக்கிறது. ஸ்ரீமன் நாராயணன், இந்த நான்கு தேகங்களிலும், இதய கமல சிம்மாசனத்தின் மேல், அனிருத்தாதி நான்கு ரூபங்களால் காட்சியளித்தவாறு நிலைத்திருந்து, ஜீவனின் ரூபமாக ஜீவனில் இருந்து சேவை செய்து, ஸ்ரீநாராயண ரூபத்தினால் சேவையை ஏற்றுக்கொள்கிறான்.

ஜாக³ர ஸ்வப்னங்களொளு வர

போ$^{4}$கிஷயன பஹுப்ரகார வி
பா$^{4}$க$^{3}$கை$^{3}$ஸி நிரம்ஷஜீவர சிச்சரீரவனு |
போ$^{4}$கவித்து சுஷுப்தி கா$^{1}$லதி$^{3}$
சாக$^{3}$ரவ நதிகூ$^{1}$டுவந்தெ$^{1}$ வி
யோக$^{3}$ ரஹிதனு அம்ஷக$^{3}$ளனேகத்ர வைதிசுவ ||8

வரபோகிஷயன = உத்தமமான, சர்ப்பம் அதாவது சேஷதேவரே படுக்கையாக உள்ள ஸ்ரீபரமாத்மன்
ஜாகரஸ்வப்னங்களொளு = ஜீவர்கள் முழித்திருக்கும்போதும், ஸ்வப்ன அவஸ்தையிலும்
நிரம்ஷஜீவர = அம்சம் இல்லாத மனித ஜீவர்களின்
பஹுப்ரகார = பல விதங்களில்
விபாககையிஸி = பகுத்து (பிரித்து)
போகவித்து = போகங்களைக் கொடுத்து
சுஷுப்திகாலதி = தூங்கும்போது
வியோக ரஹிதனு = பிரியாமல் இருந்தாலும்
சாகரவ நதிகூடுவந்தெ = கடலை ஆறுகள் போய் சேர்வதைப் போல
அம்ஷகள = ஜீவர்களின் அம்சங்களை
ஏகத்ர = ஒரே இடத்தில்
ஐதிசுவ = சேர்த்து விடுவான்.

சேஷசயனனான ஸ்ரீபரமாத்மன், மனிதர்களுக்கு, ஜாக்ர அவஸ்தையில் அதாவது முழித்திருந்து வேலைகளை செய்திருக்கும் காலங்களில், நிரம்ஷ என்றால், மனிதர்கள் முதல் கிருமிகள் வரையில் என்று பொருள். இத்தகைய ஜீவர்களின் ஞானஸ்வரூபமான ஸ்வரூப தேகத்தை, மனிதன், யானை, குதிரை, பசு, எருமை ஆகியவையாக பிரித்து, ஜீவர்களின் யோக்யதைக்கேற்ப அவரவர்களுக்கு மனைவி, குழந்தைகள், தன தான்யங்கள் ஆகியவற்றைக் கொடுத்து போகங்களைக் கொடுக்கிறான்.

அதே பரமாத்மன், ஸ்வப்னாவஸ்தையில் நாம் காணும் இடங்களை, மக்கள், யானை, குதிரை ஆகிய நிரம்ஷ ஜீவர்களின் ஸ்வரூப தேகங்களை, ஸ்தூல தேகங்களை அம்சங்களாக பிரிக்கிறான். அதாவது, நாம் நம் கனவில் எந்த உறவினர்களைப் பார்க்கிறோமோ, யானை, குதிரைகளை பார்க்கிறோமோ, அவை உண்மையல்ல. அந்த கனவில் மட்டும் அவை உண்மையாக தெரிகின்றன. இதன் காரணம் என்னவெனில், ஸ்ரீபரமாத்மன், நாம் கனவில் பார்க்கும் மக்களின் அல்லது யானை, குதிரை ஆகிய ஜீவர்களின் அம்சங்களை பிரித்து, அவர்களின் ஸ்தூல தேகங்களைப் போல வேறு தேகங்களை ஸ்ருஷ்டித்து, அவற்றை கனவில் காட்டி போகங்களைக் கொடுக்கிறான்.

மறுபடி ஆழ்ந்த தூக்கம் வந்தபோது, தான் பிரித்த ஜீவர்களின் அம்சங்களை, எங்கிருந்து அந்த அம்சங்கள் பிரித்தெடுக்கப்பட்டனவோ, அங்கேயே மறுபடி சேர்த்துவிடுகிறான். அது எப்படியெனில், கடல் நீர் சூரிய ஒளியினால் ஆவியாகி, மேகங்களில் சேர்ந்து, மழையாக பெய்து, மறுபடி அதே நீரே கடலில் போய் சேர்கிறதோ, அது போலவே, பரமாத்மனிலிருந்து ஸ்ருஷ்டியான அம்சங்கள் மறுபடி ஜீவர்களிடமே போய் சேர்கின்றன என்று பொருள்.

சிறப்புப் பொருள்:
ஜீவர்களின் சாம்ஷர், நிரம்ஷர் என்று இரு விதங்கள் உண்டு. ஒரு அம்சத்தினால் தம் உலகங்களில் ஸ்தூல தேகங்களால் வசிப்பதோடு மட்டுமல்லாமல், தத்வாபிமானிகளாக சூக்ஷ்ம ரூபங்களால் அனைவரின் தேகங்களிலும் தனித்தனியாக வசிக்கின்றனர் அல்லது ஒரு ரூபத்தினால் தம் உலகங்களில்

இருந்துகொண்டு, பூமியில் ஒரு அம்சத்தினால் பிறக்கின்றனர். இந்த குணங்களைப் பெற்றவர்கள் சாம்ஷ ஜீவர்கள் என்று அறிய வேண்டும்.

உதாரணம்:
வாயுதேவர் மூலரூபத்தினால் தம் உலகத்தில் இருந்தாலும், அம்சத்தினால் ஹனும, பீம, மத்வ அவதாரங்களை எடுத்து, பூமியிலும் இருந்தார். அதே சமயத்தில், அனைவரின் சித்தத்திலும், சித்தாபிமானிகளாக வசித்திருந்தார். இப்படியே, இந்திரதேவரும் ஸ்வர்க்கத்தை காத்தவாறு அங்கு இருந்தாலும், அர்ஜுனனாகவும், வாலியாகவும் பிறந்தார். இது மட்டுமல்லாமல், அனைவரின் கரங்களுக்கு அபிமானியாகவும் அனைவரின் கரங்களில் சூக்ஷ்ம ரூபங்களில் இருந்து, கைகளால் செய்யப்படும் செயல்களை செய்து வருகிறார். இவர்கள் அனைவ்ரும் சாம்ஷர்களே.

மேலும் கலி முதலான தைத்யர்கள், ஸ்தூல தேகத்தினால் தம் உலகத்தில் இருந்தாலும், இந்திரியாபிமானிகளாக அனைவரின் இந்திரியங்களில் சூக்ஷ்ம ரூபத்தினாலும், துரியோதனாதிகளாக பூமியில் பிறந்தும் இருந்தனர். ஆகையால், இத்தகைய தைத்யர்கள்கூட சாம்ஷ ஜீவர்களே. மனிதன் முதல் கிருமி வரை மட்டும் இப்படி சாம்ஷர் அல்ல. அங்கு இருந்தால் இங்கு இல்லை. இங்கு இருந்தால் அங்கு இல்லை. ஆகையால், இவர்கள் நிரம்ஷ ஜீவர்கள் இல்லை என்று அறியவேண்டும். ஆனால், இவர்களுக்கும்கூட சில சமயங்களில் சாம்ஷத்வம் வருகிறது.

ஆதாரம்:
வாமன புராணத்தில்:
நிரம்ஷானாஞ்ச ஜீவானாம் க்வசித்ஸாம்ஷத்வமிஷ்யதே ।
லோகாந்தரேஷு சாம்ஷத்வம் சுகாதேவ பவிஷ்யதி ।।

நிரம்ஷரான ஜீவர்களுக்கும்கூட சில சமயங்களில் சாம்ஷத்வம் வருகிறது. இவர்கள் புண்ணிய சாதனங்களை செய்துகொண்டு, ஸ்வர்க்க லோகத்தில் வாசம் செய்தவாறு, தன் புண்ணிய பலன்களை போகித்திருக்கும்போது, சாம்ஷர்கள் ஆவர். பூலோகத்தில் என்றைக்கும் சாம்ஷர்கள் ஆகமாட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், பரமாத்மன், ஜீவர்களுக்கு கனவில், சுகதுக்கங்களைக் கொடுக்க விருப்பப்பட்டபோது, நிரம்ஷ ஜீவர்களைக்கூட, தன் விருப்பத்தின்பேரில் சாம்ஷ ஜீவர்களாக மாற்றுகிறான்.

அனம்ஷஸ்யாபி ஜீவஸ்ய விபாகம் பஹுதாஹரி: ।
க்ருத்வாபோகான்ப்ரதாயைவ சைக்யமாபத்யதே புன: ।।

நிரம்ஷரான ஜீவர்களுக்கு கனவில் இருக்கும்போது, படுத்திருக்கும் ஜீவனின் அம்சத்தை, ஸ்தூல தேகங்களைக் கொடுத்து, வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று, அங்கு யானை குதிரைகளின் அம்சத்தைப் பிரித்து, அவற்றின் ரூபங்களைக் கொடுத்து, பரஸ்பர சம்பந்தத்தினால் சுக துக்காதிகளைக் கொடுத்து, மறுபடி அந்தந்த ஜீவர்களின் அம்சத்தை அங்கேயே திரும்ப சேர்க்கிறான். இதுவே மேற்சொன்ன ஸ்லோகத்தின் அர்த்தமாகும். பிம்பக்ரியைகளை செய்தவாறு எப்போதும் ஜீவர்களில் இருப்பதால், பரமாத்மனுக்கு ‘வியோக ரஹிதனு’ என்று பெயர்.

**பா4ர்யரிந்தொ3டகூ3டி3 காரண**
**கார்ய வஸ்துகளல்லி ப்ரேரக**
**ப்ரேர்ய ரூபகளிந்த ப1ட1த1ந்து1கள வொலித்து3 ।**
**சூர்ய கிரணக3ளந்தெ1 தன்னய**

**வீர்யதிந்தலெ கொ$^{1}$டு$^{3}$த$^{1}$ கொ$^{1}$ளுதிஹ**
**நார்யரிகெ ஈதன விஹாரவு கோ$^{3}$சரிபு$^{1}$தே$^{3}$னு ||9**

பார்யரிந்த = ஸ்ரீ பூ துர்கா என்னும் மனைவியர்களுடன்.
ஒடகூடி = சமேதனாக.
காரண = ஸ்ருஷ்டிக்குக் காரணமான ஜட ப்ரக்ருதியிலும்.
கார்யவஸ்துகளல்லி = காரியங்களை செய்யும் இடங்களான உலகங்களிலும்.
ப்ரேரக ப்ரேர்ய ரூபகளிந்த = தீர்மானம் செய்யும், நிறைவேற்றும் ரூபங்களிலும்
படதந்துகளவொல் = துணியில் இருக்கும் நூல்களைப் போல இருந்து
சூர்யகிரணகளந்தெ = சூரிய கிரணங்கள், கடல் நீரைக் குடித்து, மேகங்களில் வைத்து, மறுபடி மழையின் ரூபத்தில் கடலில் போய் சேர்ப்பதைப் போல
தன்னய வீர்யதிந்தலி = தன் சாமர்த்தியத்தாலேயே
கொடுத = ஜீவர்களுக்கு புண்ணிய பாவங்களின் பலன்களைக் கொடுத்து
கொடுதிஹனு = சேவையை ஸ்வீகரிக்கிறான்.
அனார்யரிகெ = நீசர்களுக்கு
இவன விஹாரவு = இவனின் விளையாட்டு
கோசரிபுதேனோ = தெரியுமோ?, அல்லது, 'கொடுதிஹனு ஆர்யரிகெ' என்று படித்தால், பிரம்மாதிகளுக்காவது முழுமையாக புரியுமோ? - அதாவது அவரவர்களின் யோக்யதைக்கேற்பவே பகவத் மகிமைகளை அவர்கள் அறிவர் என்று பொருள்.

பரமாத்மன், ஸ்ரீ பூ துர்கா என்னும் தன் மனைவிகளுடன்கூடி, காரண கார்யவஸ்துகளில் அதாவது, இந்த உலகத்தின் ஸ்ருஷ்டி காரணள் ஜடப்ரக்ருதி. மனிதர்களின் உற்பத்திக்காக சுக்லஷோணியான மனிதர்கள் கார்யம். மரங்கள் முதலான உற்பத்திக்கு விதை, மண், நீர் ஆகியவை காரணம். கார்யம் மரங்கள். இப்படி ஒவ்வொரு வஸ்துகளிலும் காரண காரியங்கள் வெவ்வேறாக இருப்பதுண்டு. காரண வஸ்துகளில் தீர்மானம் செய்பவனாகவும், கார்ய வஸ்துகளில் அதை நிறைவேற்றுபவனாகவும் இருந்து; நூலை குறுக்கும் நெடுக்குமாக நெய்வதால், அந்த நூலே ஆடையாக ஆவதைப் போல, பரமாத்மன் கார்ய காரண வஸ்துகளில் நிலைத்திருந்து, பிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டு, பிரபஞ்ச ரூபியாக இருக்கிறான்.

மேலும், சூரியன் தன் கிரணங்களால், கடலில் இருக்கும் தண்ணீரை ஸ்வீகரித்து, மேகங்களில் வைத்து, மழையைப் பெய்ய வைத்து, அதன் மூலம் மறுபடி கடலை நிரப்பச் செய்வது போல, பரமாத்மன் தன் சாமர்த்தியத்தினால் பக்தர்களின் சேவையைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு அந்த பலன்களைக் கொடுக்கிறான். சாமான்யரான மக்களுக்கு இவனின் மகிமைகள் எப்படி புரியும்? புரியாது. பிரம்மாதி தேவதைகளுக்கே இவனின் மகிமைகளை முழுமையாக அறிந்துகொள்ள முடிகிறதா? அவரவர்களின் தகுதிக்கேற்பவே காண்கின்றனர்.

**ஜனக தன்னாத்மஜகெ$^{3}$ வரபூ$^{4}$**
**ஷண து$^{3}$கூ$^{1}$லவ தொ$^{1}$டி$^{3}$ஸி தா$^{1}$ வ**
**ந்தனெய கைகொளுதவன ஹரசுத ஹருஷப$^{1}$டுவந்தெ |**
**வனருஹேக்ஷண பூஜ்ய பூஜக$^{1}$**
**நெனெஸி பூ$^{1}$ஜாஸாத$^{4}$னபதா$^{3}$**
**ர்த்த$^{2}$னுதனகெ$^{3}$ தா$^{1}$னாகி$^{3}$ ப$^{2}$லகள$^{3}$னீவ ப$^{4}$ஜக$^{1}$ரிகெ$^{3}$ ||10**

ஜனக = தந்தை.
தன்னாத்மஜகெ = தன் மகனுக்கு.
வரபூஷண துகூலவ = சிறந்த ஆடை அணிகலன்களை
தொடிஸி = கொடுத்து

வந்தெனய = நமஸ்காரங்களை
கைகொளுத = ஏற்றுக்கொண்டு
அவன = அந்த மகனை
ஹரஸுத = ஆசிர்வாதம் செய்து
ஹருஷபடுவந்தெ = மகிழ்ந்திருப்பதைப் போல
வனருஹேக்ஷண = தாமரைக் கண்ணனான ஸ்ரீபரமாத்மன்
பூஜ்யபூஜகனெனிஸி = ஒருவனில் இருந்து வணங்கப்பட்டும்; இன்னொருவனில் வணங்குபவனாகவும் இருந்து
பூஜாஸாதன பதார்த்தனு = கந்த, புஷ்பாதி பூஜைக்குத் தேவையான பதார்த்தங்களை
தனகெ = தனது பூஜைக்கு
தானாகி = தானே ஆகி
பஜகரிகெ = தன்னை பஜனை செய்பவர்களுக்கு
பலகளனு = பலன்களை
ஈவ = கொடுக்கிறான்.

தந்தையானவர், தனது மக்களுக்கு உத்தமமான (மிகச் சிறந்த) ஆடைகளைக் கொடுத்து, அந்த மக்களிடமிருந்து நமஸ்காரங்களைப் பெற்று, அவர்களுக்கு ஆசிர்வாதங்களை செய்து, மகிழ்ச்சியடைவதைப் போல, ஸ்ரீபரமாத்மன் குருகளிடமிருந்து கொண்டு, பூஜைகளை ஏற்றுக்கொள்கிறான். சிஷ்யர்களிடம் இருந்துகொண்டு, பூஜைகளை செய்கிறான். தன்னால் ஸ்ருஷ்டி செய்யப்பட்ட மக்களாக இருக்கும் தன் பக்தர்களில் இருந்து, பூஜையை செய்து, அவர்களைவிட உத்தம மக்களில் இருந்து, ராம கிருஷ்ணாதி பிரதிமா ரூபத்திலும் பூஜையை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு அதன் பலன்களாக, அன்ன ஆடை அணிகலன்களால் சௌக்யங்களைக் கொடுத்து, தந்தை மக்களிடமிருந்து நமஸ்காரங்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு ஆசிர்வாதம் செய்வதைப் போல, பக்தர்களுக்கு வரங்களைக் கொடுத்து, அவர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறான். மேலும், பூஜைக்குத் தேவையான உபகரணங்கள், பழம், புஷ்பம், கந்த, அக்ஷதை, தாம்பூலம் ஆகியவற்றில் இருந்து, அதன் ரூபியாக தானே இருந்து, தன் பூஜைக்கு தானே பொருட்களாகிறான். பூஜை செய்த பலன்களை மட்டும் ஜீவர்களுக்குக் கொடுக்கிறான்.

சிறப்புப் பொருள்:
மேற்கண்ட இரு பத்யங்களால், ஸ்ரீபரமாத்மனே விஷயங்களை தீர்மானிப்பராகவும், செய்பவராகவும், பூஜ்யனாகவும், பூஜை செய்பவனாகவும், பூஜைக்குத் தேவையான பொருட்களிலும் இருந்து, பூஜையை செய்து, செய்வித்து, பலன்களை ஜீவர்களுக்குக் கொடுக்கிறான் என்று சொல்வதிலிருந்து, ஜீவனுக்கு கர்த்ருத்வம் கொஞ்சம்கூட இல்லை என்றே தாசராயர் சொல்கிறார். ஆனால், அவரது அபிப்பிராயம் அப்படியில்லை. ஏனெனில், அது ஸ்ரீமதாசார்யரின் சித்தாந்தத்திற்கு எதிரானதாகும். சித்தாந்தத்திற்கு எதிராக தாசராயர் என்றும், எதையும் சொன்னதில்லை.

பகவத்கீதை 18ம் அத்தியாயத்தில்:

ஆதிஷ்டானம் ததா கர்ம காரணஞ்ச ப்ருதக்விதம் |
விவிதாச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் |
ஷரீர வாங்மனோபிர்யத்கர்ம ப்ராரபதெ நர: |
ந்யாய்யம்வா விபரீதம்வா பஞ்சைதே தஸ்யஹேதவ: ||

எண் கணித சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதைப் போல, ஜீவர்கள் புண்ய பாவங்கள் அனைத்தையும் செய்வதற்கு ஐந்து காரணங்கள் உண்டு. அவை என்னவென்றால்:

1. அதிஷ்டானம், அதாவது தேகம், பூமி ஆகியன.
2. கர்த்தா - விஷ்ணு
3. வேறு காரணங்கள் அதாவது இந்திரியங்கள், ஸ்ருக் ஸ்ருவங்கள்
4. பல்வேறு செயல்கள் அதாவது கை முதலான இந்திரியங்களால் செய்யப்படுவன, நடப்பது ஆகியன
5. தெய்வ அதாவது அதிர்ஷ்டம் அல்லது கர்த்தா - ஜீவ, தெய்வ அதாவது விஷ்ணு என்று பொருள்.

மனிதனின் மனோ வாக் காயங்களினால் செய்யப்படும் புண்ய காரியங்களாகட்டும், பாவ காரியங்களாகட்டும் அதற்கு மேற்சொன்ன ஐந்து காரணங்களே உண்டு.

தத்ரைவம் சதிகர்த்தாரமாத்மானம் கேவலந்துய: |
பஷ்யத்யக்ருத புத்தித்வான்னஸ பஷ்யதி துர்மதி: ||

இது இப்படியிருக்கையில், யாரொருவன், தானே கர்த்தன் என்று நினைத்துக் கொள்கிறானோ, அவன் புத்தி இல்லாதவனாகையால், அந்த துர்மதியை எதுவும் அறியாதவன் என்று நினைக்க வேண்டும்.

யஸ்யனாஹம் க்ருதோபாவோ புத்திர்யஸ்யனலிப்யதே |
ஹத்வாபிஸ இமானோகான்ன ஹந்தி நனிபத்யதே ||

யாருக்கு நான் என்னும் அகங்காரம் இருப்பதில்லையோ, யாருடைய புத்தி பலன்களில் விருப்பமில்லாமல், அதற்கு சம்பந்தப்படாமல் இருக்கிறதோ, அவன் இந்த உலகத்தையே அழித்தாலும், அதற்கான பாவம் அவனைச் சேர்வதில்லை. இப்படி பிரபஞ்சத்தை அழிக்கப் பிறந்தவர் ருத்ரதேவர், யமதேவர். இவர்களுக்கு ஸ்வ-கர்த்ருத்வ-அபிமானம் இல்லாததினால், உலகத்தை அழிக்கும் பாவம் இவர்களை சேர்வதில்லை. இந்திரன், வ்ருத்ராசுரனைக் கொன்று பாவத்தை அடைந்தான் என்று பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மூலகாரணம் அவர்களின், சிறிதேயான, தற்காலிக அகங்காரமே ஆகும். இப்படி 14ம் ஸ்லோகத்தில் துவங்கி, 18ம் ஸ்லோகம் வரைக்கும் பகவத் கர்த்ருத்வத்தை அறிந்து, தன் கர்த்ருத்வ புத்தியை விடவேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

18ம் ஸ்லோகத்தின் பொருள் (ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் இயற்றிய கீதாவிவ்ருத்தி):

நனு ஜீவஸ்யஸ்வத: கர்த்ருத்வாபாவெ யஜேதேத்யாதி விதீனாம் தையர்த்யம் ஸ்யாத் |
ஜடேஷ்வர யுக்தானாம் தத்விஷயத்வாதித்யத அஹ ஞானமிதி ||

இந்த வாக்கியத்தின் ஆதாரத்தினால் ஜீவனுக்கு கர்த்ருத்வமே இல்லாதிருந்தால், 'ஸ்வர்க காமோயஜேத, அஹரஹஸ் சந்த்யாமுபாஸீத' ஸ்வர்க்கத்தை விரும்புபவன், ஜ்யோதிஷ்டோம என்னும் பாகத்தை செய்யவேண்டும். காலை மாலையில் சந்தியாவந்தனத்தை செய்யவேண்டும் - என்னும் விதி வாக்கியங்கள் அர்த்தமில்லாமல் போகும். ஜட பதார்த்தங்களுக்கும், ஈஷ்வரனுக்கும், முக்தர்களுக்கும் இந்த யாகங்கள் செய்யவேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஜீவர்களுக்காகவே இந்த விதி வாக்கியங்கள் வந்திருக்கவேண்டும். அவர்களுக்கும் ஸ்வத: கர்த்ருத்வம் இல்லை என்றபிறகு, இந்த வாக்கியங்கள் வெளிவந்திருக்காது.

ஞானம்ஞேயம் பரிஞாதா த்ரிவிதா கர்ம ஜோதனா |
கரணம் கர்மகர்தேதி த்ரிவித: கர்மசங்க்ரஹ: ||

யாகாதிகளை செய்யவேண்டும் என்னும் கர்மஜோதனா என்றால், கர்மங்களை தீர்மானித்தல், ஞானம், ஞேயம், பரிஞாதா என்று மூன்று விதங்கள் ஆகும். ஞானம் என்றால் விதி வாக்கியங்களுக்கு உட்பட்டு செய்யவேண்டியவை. அதாவது 'யஜீத' தியாகம் செய்யவேண்டும். 'உபாசீத' உபாசனை செய்யவேண்டும். 'ஞேயம்' என்றால் முயற்சி செய்வது. 'பரிஞாதா' யாரென்றால், சர்வக்ஞனும், சர்வ ப்ரேரகனுமான ஸ்ரீபரமாத்மன் நிலைத்திருக்கும் ஜீவராசிகள். இந்த மூன்று விஷயங்களாலேயே, செயல்கள் நடக்கின்றன.

ததித்ரபு சம்ப்ரத்ய க்ஷோஜ்வர இத்யாதாவிவனிமித்த நிமித்தினோர பேதோபசாரேண நிமித்த த்ரைவித்யேன நைமித்திக ஜோதனாபி த்ரிவிதேத்யுபசர்யதே |
யஜதேத்யாதி ஷ்ரௌதஸ்மார்த்தவிதௌஸதி ஸ்வாப்ரவ்ருத்தி விஷய ப்ரேரணாஞானம்பவதி |
ததஷ்வேச்சாப்ரயத்னரூப ப்ரவ்ருத்திராத்ம சன்னிஹிதேஷ்வர ப்ரேரணயா புமர்த்தமுத்திஷ்ய கர்மணி ஜீவஸ்ய பவதி இதி விதிஞானாதே: |
கர்ம ஜோதனயாஷ்ச நிமித்தனிமித்தி பாவோத்யேய: ||

உலகத்தில் ஜுரம் வந்த ஒருவன், தன் ஜுரத்திற்கான காரணத்தை ஆராய்கையில், தான் அதிகமாக தயிர் சேர்த்துக் கொண்டதே அதற்கான காரணம் என்று அறிகிறான். இதில் எது ஞானம்? தயிர். அதற்கு ஞேயம் என்றால் ஆதாரம் எது? தயிர் ஊற்றிக்கொண்ட ஈய பாத்திரம். தயிர் தானாக ஒரு ஆதாரம் ஆகமுடியாத காரணத்தால், அது போட்டு வைத்திருந்த ஈய பாத்திரமும் ஒரு நிமித்தமாயிற்று. இப்படி, ஜுரத்திற்கு காரணம் தயிராக இருந்தாலும், அதற்கு ஆதாரபூதமாக இருந்தது, அது போட்டு வைத்திருந்த ஈய பாத்திரம் ஆகும். இப்படியே விதி வாக்கியங்களின் பொருள், ஞானமானாலும், ஞேயமான தேகம் என்னும் பாத்திரம் இல்லாமல், அது செயல்பட முடியாது.

யாகாதிகளை செய்யவேண்டும் என்னும் விதி இருப்பதால், பரமாத்மன் ஸ்ருஷ்டி காலத்திலேயே, ஜீவனுக்கு கொடுத்திருக்கும் ஸ்வாதந்த்ர்யத்தினால், அவற்றை செய்யவேண்டும் என்னும் விருப்பம் மட்டும் பிறக்கிறது. அதன்பிறகு, ஜீவனில் இருக்கும் பரமாத்மன், ஜீவனின் சம்ஸ்காரத்திற்கேற்ப, அவனின் விருப்பத்தின்படி, அவனது புருஷார்த்தத்திற்கு சாதனமான கர்மத்தை செய்யத் தீர்மானிக்கிறான். அதாவது, ஜீவனின் அனாதி கர்மத்தையும், ஜீவனின் சம்ஸ்காரத்தையும் பார்த்து, தீர்மானிக்கிறான். அப்போது, ஜீவன், பரமாத்மனின் தீர்மானத்திற்கேற்ப அவற்றை செய்ய முற்பட்டால், உள்ளேயிருக்கும் தத்வாபிமானி தேவதைகளுக்கு பரமாத்மன் ஆணையிட்டு, அவர்களுக்குள் தான் இருந்து, செய்து, ஜீவனிடமிருந்து செய்விக்கிறான்.

இப்படியே, ஞானம் என்றால் விதிவாக்கியம், ஞேயம் என்றால் தேகம் மற்றும் பகவத் விருப்பம். பரிஞாதா என்றால் ஜீவன். ஆக, ஸ்வதந்த்ர கர்த்தா - பரமாத்மன். ஜீவனுக்கு விதிவாக்கியமும், பகவத் ப்ரேரணையும்கூட நிமித்த காரணங்களாக இருக்கின்றன என்று அறியவேண்டும்.

நசஸ்வத: கர்த்ருத்வாபாவாத்வராதீன கர்த்ரு ஜீவஸ்ய விதிஞானத்வாராகதம் ப்ரவ்ருத்யாத்யர்த்தம் விதிவிஷயத்வமிதிம் ஷக்யம்|
அபராதீன கர்த்ருத்வஸ்ய விதிவிஷயதாயாம் ப்ரயோஜகத்வேன க்யாப்யனுபலம்பேனான்வய வ்யதிரேகாப்யாம் பராதீன கர்த்ருஷக்திகஸ்யேவ விதிவிஷயத்வாவஷ்யம் பாவாத் ||

ஆனால் ஜீவன் எதையும் ஸ்வதந்த்ரமாக செய்வதற்கு சாத்தியம் இல்லை. பராதீனனாக இருந்து, பரமாத்மன் செய்வித்தபடியெல்லாம் செய்யும் ஜீவனுக்கு,

விதிவாக்கியத்தால் என்ன பயன் என்று சந்தேகம் வரக்கூடாது. ஏனெனில், உலகத்தில் ஸ்வதந்த்ர கர்த்ருகளான ராஜர்களை விதிவாக்கியங்கள் என்றும் கட்டுப்படுத்துவதில்லை. பராதீனன் என்றால் தன் கட்டுப்பாட்டில் இருப்பவர்களை, இப்படி செய்யுங்கள், அப்படி செய்யுங்கள் என்று சொல்வதற்காகவே விதி வாக்கியங்கள் இருக்கின்றன என்று அனைவருக்கும் தெரியும். அதுபோலவே, ஜடர், ஈஷ்வர மற்றும் முக்தர்கள் இவர்கள் மூவருக்கும் விதிக்கு கட்டுப்பட்டவர்கள் இல்லை என்று தெரிவதால், அது ஜீவர்களுக்கு மட்டுமானதாகும் என்று தெரிகிறது. ஆகையால், ஜீவன் பராதீன கர்த்ரு ஆகிறான். ஆகையால், விதிகள் அவனுக்காகவே சொல்லப்பட்டிருக்கின்றன என்று தீர்மானம் ஆகிறது. இப்படியே கீதா வ்யாக்யானத்தை இயற்றிய ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் சொல்லியிருக்கிறார். ஆகையால், தாசராயரின் அபிப்பிராயம் என்னவெனில், ஜீவனுக்கு ஸ்வதந்த்ர கர்த்ருத்வ மட்டுமே இல்லையே தவிர, அதனால் அவன் கர்த்தன் இல்லை என்று சொல்லக்கூடாது.

**தந்தெ பஹுஸம்ப்4ரமதி3 த1ன்னய**
**ப3ந்து4ப3ளக3வ நெரெஹி மது3வெய**
**நந்த3னகெ3 தா1 மாடி3 மனெயொளகி3டு3வ தெ1ரனந்தெ1 |**
**இந்திராத4வ தன்ன இச்செ க3**
**ளிந்த3 கு3ணகள சேதனக்கெ ச**
**ம்ப3ந்த4கை3ஸி சுகா2சுகா2த்மக1 சம்ஸ்ருதியொளிடு3வ ||11**

தந்தெ = தந்தை
பஹு சம்ப்ரமதி = வெகு விமரிசையுடன்
தன்னய பந்துபளகவ = தன் உற்றார் உறவினர்களை
நெரஹி = அழைத்து
நந்தனகெ = தன் மகனுக்கு
மதுவெய = திருமணத்தை
தா = தான்
மாடி மனெயொளகிடுவ தெரனந்தெ = சம்சாரியாக மாற்றி வீட்டில் வைப்பது போல
இந்திராதவ = லட்சுமிபதியானவன்
தன்ன இச்செகளிந்த குணகள = சத்வ ரஜஸ் தமோ என்னும் மூன்று குணங்களின் சம்பந்தமான ப்ராக்ருத ஸ்தூல தேகங்களை
சேதனக்கெ = ஸ்வரூபதேக, லிங்கதேகங்களால் ஆன ஜீவனுக்கு
சம்பந்தகெயிஸி = சம்பந்தம் செய்து (கொடுத்து)
சுகாசுகாத்மக சம்ஸ்க்ருதியலி = சுகதுக்கங்களின் கலவையான சம்சாரத்தில் வைப்பான்.

தந்தையானவர், தன் மகனுக்கு திருமணத்தை செய்யவேண்டுமென்று சிந்தித்து, தன் உற்றார் உறவினர்களையெல்லாம் அழைத்து, வெகு விமரிசையுடன் திருமணத்தை செய்து, அந்த தம்பதிகளை ஒரு வீட்டில் வைத்து சம்சாரிகளாக்கி எப்படி பார்த்துக் கொள்கிறாரோ அப்படியே, ஸ்ரீலட்சுமிபதி தன் விருப்பத்திற்கேற்ப தன் மக்களைப் போல இருக்கும், சாத்விக, ராஜஸ, தாமஸ எனும் மூன்று வித ஜீவராசிகளுக்கும் புத்தி என்னும் மனைவியுடன் திருமணம் செய்விக்கிறான். தத்வாபிமானி தேவதைகளே உற்றார் உறவினர். ஸ்தூல சரீரமே வீடு. இதில், சாத்விகர்களுக்கு தேவதாதி சரீரங்களையும், ராஜஸர்களுக்கு மனித சரீரங்களையும், தாமஸர்களுக்கு தைத்யாதி சரீரங்களையும் கொடுத்து, அவரவர்களின் சாதனைகளை நிறைவேற்றுவதற்காக சுகதுக்கங்களின் கலவையான சம்சாரத்தில் அவர்களை வைக்கிறான்.

சிறப்புப் பொருள்:

இங்கு தாசராயர் 'குணகள சேதனகெ சம்பந்த கெய்ஸி சுகா சுகாத்மக சம்ஸ்க்ருதியொலிடுவ' என்கிறார். சத்வ ரஜஸ் தமோ குணங்களை சேதனர்களுக்கு சம்பந்தப்படுத்தி என்று அர்த்தம் கொண்டால், ஜீவர்கள் அனாதி காலத்திலிருந்தே சத்வாதி குண சம்பந்தமான ஸ்வரூப தேகத்தினால் கூடியிருக்கின்றனர். குணங்களை விட்டு சேதனர்கள் இல்லை என்று ஸ்ரீமதாசார்யரின் வாக்கியம் இருக்கிறது. மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில்

த்ருஷ்ட்வாஸசேதன கர்ணா ஜடரேஷயனானானந்த மாத்ரவ புஷ:ஸ்ருதி விப்ரமுர்க்தா |
த்யானங்கர்த்தா ஸ்ருதிகதாம்ஸ்ச சுஷுப்தி சம்ஸ்தா பிரம்மாதிர்கா கலிபர்ரா மனுஜாம்ஸ்ததைக்ஷத் ||

அதாவது, ஸ்ரீபரமாத்மன், தன் வயிற்றில் சயனம் கொண்டிருக்கும் பிரம்மதேவர் முதலான தேவதைகள், கலி வரைக்குமான தைத்யர்கள், மனிதர்கள் இந்த மூன்று வித ஜீவராசிகளையும், வெறும் மகிழ்ச்சியை மட்டும் கொண்ட முக்தர்களையும் பார்த்து, ஸ்ருஷ்டி செய்வதற்கு விருப்பப்பட்டான். இதிலிருந்து, அனாதி காலத்திலிருந்து ஜீவர்கள் த்ரிவிதர் என்று நிர்ணயம் ஆகிறது. மேலும் விஷ்ணு ரகசியத்தில் :

ஸ்ருஷ்ட்யாதிகுருதே சர்வமன்யதா தத்தயாளுதா |
வ்யாஹன்யேத ததாப்யன்யான் ஜீவான்மதாமர்ஸா |
ஸ்ருஜத்யவதி ஹந்த்யேவ பக்தானாம் பக்திவ்ருத்தயே |
ஏவம் சாத்விக மத்யஸ்த தாமஸாம்ஸ்த்ரி விதானபி |
ஸ்ருஜத்யவதி ஹந்தீஷோலீலயா பக்தவத்ஸல ||
அனாதிகால தத்ஸ்த்யேவ சங்கல்போ ஜகதீஷிது: ||

தயாளுவான ஸ்ரீபரமாத்மன் சர்வ ஜகத்தையும் ஸ்ருஷ்டி செய்கிறான். இது இல்லையென்றால், பரமாத்மனின் தயாளுத்வத்திற்கு கேடு வருகிறது. ஆகையால், பிரம்மாதி ஸாத்விகர்களை மட்டும் ஸ்ருஷ்டிக்காமல், மற்றவர்களான தாமஸர்களைக்கூட ஸ்ருஷ்டித்து, காப்பாற்றி, இறுதியில் சம்ஹரிக்கிறான்.

அனாதி காலத்திலிருந்து இதுவே அவனது சங்கல்பமாக இருக்கிறது என்கிறார். இந்த ஆதாரங்களின்படி ஜீவர்கள் அனாதியிலிருந்து த்ரிவிதர்கள் என்று தெரிகிறது. இப்படியிருக்கையில், ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மன் ஜீவர்களுக்கு குணங்களை சம்பந்தப்படுத்துகிறான் என்று தாசராயர் சொல்வதால், பரமாத்மன் ஜீவர்கள் சில பேரை சாத்விகர்களாகவும், சிலரை ராஜஸர்களாகவும், வேறு சிலரை தாமஸர்களாகவும் தன் இஷ்டத்திற்கேற்ப படைக்கிறான் என்று அர்த்தம் கொண்டால், அது ஸ்ரீமதாசார்யரின் சித்தாந்தத்திற்கு விரோதமாகிறது. ஆகையால், 'குணகள' என்றால், அது சம்பந்தமான ஸ்தூல ஷரீரங்கள் என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

சாத்விக ஜீவர்களுக்கு சத்வகுண சம்பந்தமான தேவாதி சரீரங்களையும், ராஜஸர்களுக்கு ரஜோகுண சம்பந்தமான மனித சரீரங்களையும், தாமஸர்களுக்கு தமோகுண சம்பந்தமான தைத்யாதி சரீரங்களையும் கொடுக்கிறான் என்று அர்த்தம் கொண்டால், நிர்ணய வாக்கியத்திற்கும், விஷ்ணு ரகசிய வாக்கியத்திற்கும் சரியாக பொருந்தி வருகிறது. அல்லது, 'குணகள' என்றால் ஷப்த ஸ்பர்ஷாதி தன்மாத்ரா குணங்கள் என்றும் அர்த்தம் சொல்லலாம். தத்வ தேவதைகள் என்னும் உறவினர்களுடன் கூடிய சரீரங்கள் என்னும் வீட்டில் வைத்து, ஜீவர்களுக்கு ஷப்த, ஸ்பர்ஷாதி குணங்களைக் கொடுத்து, சுக துக்கங்களின் கலவையான சம்சாரத்தில் வைத்து, அவர்களின் சாதனை முடிந்தபிறகு, சாத்விகர்களுக்கு சுகாத்மகமான

முக்தியைக் கொடுத்து, தாமஸருக்கு துக்காத்மகமான தமஸ்ஸைக் கொடுத்து, மத்யமருக்கு கலவையான நித்ய சம்சாரத்தைக் கொடுக்கிறான் என்று பொருள்.

**த்$^1$ருணக்$^1$ருதா$^1$லய தொ$^3$ளகெ$^3$ பொ$^1$கெ$^3$ ச**
**ந்தணிஸி ப்ரதி$^1$சி$^1$த்ரத$^3$லி பொ$^1$ரம**
**ட்ட$^1$னலனிரவனு தோ$^1$ரி தோ$^1$ரத$^3$லிப்ப$^1$ தெ$^1$ரனந்தெ$^1$ |**
**வனஜஜாண்டதொளகி$^2$ல ஜீவர**
**த$^1$னுவினொளஹொரகி$^3$த்து$^3$ கா$^1$ணிச**
**தனிமேசேஷனு சகலகர்மவ மாள்பனவரந்தே ||12**

த்ருணக்ருதாலயதொளகெ = புல்லால் செய்யப்பட்ட வீட்டில்.
பொகெ = புகை
சந்தணிஸி = பரவி
ப்ரதிசித்ரதலி = ஒவ்வொரு இடத்திலும்
பொரமட்டு = வெளியே வந்து
அனலன = நெருப்பின்
இருவனு = இருப்பை
தோரி = காட்டுகிறது
தோரதலெ = பிரத்யட்சமாகத் தெரியாமல்
இப்பதெரனந்தெ = இருப்பதைப் போல
வனஜஜாண்டதொளு = பிரம்மாண்டத்தில்
அகிள ஜீவர = அனைத்து ஜீவர்களின்
தனுவின = தேகங்களின்
ஒளஹொரகித்து = உள்ளேயும் வெளியேயும் இருந்து
காணிஸதெ = ஜீவருக்குத் தெரியாமல்
அனிமிசேஷனு = தேவோத்தமனான ஸ்ரீபரமாத்மன்
சகல கர்மவ = அனைத்து புண்ய பாபாதி கர்மங்களை
அவரந்தெ = அந்த ஜீவனைப் போல
மாள்பனு = செய்கிறான்.

புல்லால் கட்டிய குடிசை வீட்டினுள் நெருப்பை வைத்தால், அது ஒவ்வொரு இடைவெளியிலும் புறப்பட்டு வெளியில் வந்து, உள்ளேயும் வெளியேயும் பரவியிருக்கும் புகையைப் பார்த்து, அந்த வீட்டில் நெருப்பு இருக்கிறது என்று நினைக்கலாம். ஆனால் நெருப்பைப் பார்க்கமுடியாமல் போகலாம். அதுபோலவே, பரமாத்மனும், பிரம்மாண்டத்தில் இருக்கும் ஜீவர்களின் ஸ்வரூப தேகங்களிலும், ஸ்தூல தேகங்களிலும், மற்றும் பிற அனைத்து இடங்களிலும், உள்ளேயும் வெளியேயும் வியாப்தனாக இருந்து, அந்த ஜீவர்களின் கண்களுக்குத் தெரியாமல், சாதாரண மனிதர்களைப் போலவே தானும் கர்மங்களை செய்கிறான். இந்த புகை உதாரணத்தால், அவன் அனைத்து இடங்களில் வியாப்தனாக இருந்தாலும், எதற்கும் சம்பந்தப்படாமல் இருக்கிறான் என்பதையும் காட்டுகிறார்.

**பா$^1$த$^3$ப$^1$க$^3$ளடி$^3$கெ$^3$ரெயெ சலிலவு**
**தோ$^1$து$^3$ கொ$^1$ம்பெ$^3$களுப்பி$^3$ பு$^1$ஷ்ப$^1$**
**ஸ்வாது$^3$ ப$^2$லவீவந்த$^3$த$^3$லி சர்வேஸ்வரனு ஜனரா**
**ராதனெய கைகொண்டு பி$^3$ரம்ம ப$^4$**
**வாதி$^3$க$^3$ள நாமத$^3$லி ப$^2$லவி**
**த்தா$^1$த$^3$ரிசுவனு த$^1$ன்ன மஹிமெய தோ$^1$ரகொ$^3$ட$^3$ ஜகக்கெ ||13**

பாதபகள = மரங்களின்
அடிகெ = வேருக்கு
ஸலிலவு = நீரினை

எரியெ = ஊற்றினால்
தோது = பூமி நனைந்து
கொம்பெகளுப்பி = அதன் கிளைகள் வளர்ந்து
புஷ்ப = பூக்களை
ஸ்வாது பல = சுவையான பழங்களை
ஈவந்ததலி = கொடுப்பதைப் போல
சர்வேஷ்வரனு = அனைத்து உலகங்களுக்கும் ஈஸ்வரனான பரமாத்மன்
ஜனர = மக்கள் செய்யும்
ஆராதனெய = பூஜைகளை
கைகொண்டு = ஏற்றுக்கொண்டு
பிரம்ம பவாதிகள நாமதலி = பிரம்ம ருத்ராதி பெயர்களால்
பலவித்து = பலன்களைக் கொடுத்து அருள்கிறான்
ஜகசெ = உலகிற்கு, (இந்த தத்வத்தை)
தோரகொட = காட்டிக் கொள்ள மாட்டான்.

பாகவத நான்காம் ஸ்கந்தத்தில் :

யதா தரோர்மூல நிஷேசனேன த்ருப்யந்தி தத் ஸ்கந்த புஜோபஷாகா: |
ப்ராணோபஹாராச்ச யதேந்த்ரியாணாம் ததைவ சர்வார்ஹணமச்யுதேஜ்யா ||

ஒரு மரத்தில் வேருக்கு நீர் ஊற்றினால், எப்படி அதன் கிளைகள் மகிழ்ந்து, வளர்கிறதோ, மற்றும் ஜீவாதாரத்திற்காக உணவு உண்டால், எப்படி கை கால்கள் முதலான இந்திரியங்கள் வளர்ந்து திடமாகிறதோ, அது போலவே, நமக்கு மூலபூதனான அதாவது வேர் போல இருக்கும் பிம்பரூபியான ஸ்ரீபரமாத்மனை பூஜித்தால், அதனால் உலகிற்கு சுகம் உண்டாகும்.

ஜனராராதனெய கைகொண்டு பிரம்ம பவாதிகள நாமதலி பலவித்தாதரிசுவனு - ஜீவர்களில் சாத்விகர், ராஜஸர் மற்றும் தாமஸர் என்று மூன்று வகையினர் உண்டு. அதில் சாத்விகர்களான த்ருவன், பிரகலாதன் ஆகியோர் நிஷ்காமர். விஷ்ணுவையே பஜிப்பவர்கள். ராஜஸர், சகாமர் என்றால் பலன்களை எதிர்பார்த்து பஜிப்பவர்கள். மற்றவர்களை துன்புறுத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் பஜிப்பவர்கள் தாமஸர்கள். பாகவத 11ம் ஸ்கந்தத்தில் வரும் இந்த ஸ்லோகமே இதற்கு ஆதாரமானதாகும்.

மதர்பணம் நிஷ்பலம்வா சாத்விகம் நிஜகர்மதத் |
ராஜஸம் பலசங்கல்பம் ஹிம்ஸா ப்ராயாதி தாமஸம் ||

பலன்களை எதிர்பார்த்து பூஜிப்பவர்களாகட்டும், பிறரை இம்சிக்க வேண்டும் என்று நினைத்து பூஜிப்பவர்களாகட்டும், அவர்கள் விஷ்ணுவை பஜிப்பதில்லை. பிரம்மனையோ, ஈஸ்வரனையோ பஜிக்கிறார்கள். அது ஏனெனில்: பாகவத 10ம் ஸ்கந்தத்தில் :

ஷாபப்ரஸாதயோரீஷா: பிரம்மா விஷ்ணு ஷிவாதய: |
ஸத்ய: ஷாபப்ரஸாதோங்கஷிவ பிரம்மாச நாச்யுத: ||

சாபத்தைக் கொடுக்க வேண்டுமென்றாலும், வரங்களைக் கொடுக்க வேண்டுமென்றாலும், பிரம்ம, விஷ்ணு, சிவ ஆகியோரையே நினைக்க வேண்டும். இவர்கள் அனைவரும் அதிபதிகளே. ஆனால், சீக்கிரத்தில் தரிசனம் கொடுத்து, வரங்களைக் கொடுக்க வேண்டுமென்றாலும், சிறிய அபராதத்திற்கு கோபத்துடன் சாபத்தைக் கொடுப்பதானாலும், பிரம்ம ருத்ரரே அப்படி செய்வர். ஆனால், விஷ்ணு அப்படி அல்ல. (கஷ்டப்பட்டு வெகு காலம் ஆராதனை செய்தால், நிரந்தரமான

பலன்களைக் கொடுப்பவர் விஷ்ணு). இப்படி இருக்கையில், மற்றவர்களை துன்புறுத்த வேண்டும் என்னும் விருப்பத்தில், விரைவாக பலன்களைப் பெற வேண்டும் என்ற எண்ணம் இருப்பவர்கள், பிரம்ம ருத்ராதிகளை பஜிக்கிறார்கள். இவர்கள் எவ்வளவு விரைவாக பலன்களைப் பெறுகின்றனரோ, அவ்வளவு விரைவாக நாசமும் அடைகிறார்கள். சீக்கிரத்தில் கிடைக்கும் பலன்கள் அனைத்தும் தற்காலிகமே ஆகின்றன.

தற்போது சமூகத்தில், ஒரு வேலை ஆவதற்காக, ஒரு சாதாரண வேலையில் இருப்பவரையோ, அல்லது மிகப்பெரிய வேலயில் இருப்பவரையோ பார்க்க வேண்டுமெனில், அதற்கான பலன்களைப் பெறவேண்டுமெனில், எப்படி வித்தியாசம் இருக்கின்றதோ, அதுபோலவே, இதர தேவதைகளைக் கண்டு பலன்களைப் பெறுவதும், ஸ்ரீபரமாத்மனைக் கண்டு வரங்களைப் பெறுவதிலும்கூட வித்தியாசங்கள் இருக்கின்றன.

பாகவத 10ம் ஸ்கந்தத்தில், வ்ருகாசுரன் (பஸ்மாசுரன்) நாரதரிடம் கேள்வி கேட்டபோது,

வ்ருகோனாமாஸுர: புத்ரஷகுனே: பதினாரதம் த்ருஷ்ட்வாஷுதோஷம் பப்ரச்ச தேவேஷுத்ரி ஷுதுர்மதி: |
ச ஆதிதேஷகிரிஷ முபாதாவ ஸ்வஸித்தயே ||
ஸோல்பாப்யாம் குணதோஷாப்யாமாஷு துஷ்யதி குப்யதி ||

சகுனியின் மகனான வ்ருகாசுரன், நாரதரைக் கண்டு - 'ஸ்வாமி, நாரதரே, பிரம்ம விஷ்ணு சிவன் இவர்களில் விரைவாக வரங்களைக் கொடுப்பவர் யார்?' என்று கேட்டார். அதற்கு நாரதர் - 'ஹே அசுரனே, ருத்ரதேவரை பூஜிப்பாயாக. அவரே விரைவாக பலன்களைக் கொடுப்பவர். சிறிய தவறுகளுக்கும் தண்டனை கொடுப்பார். பாணாசுரன் முதலானவர் செய்த தவத்திற்கு மெச்சி, அவனின் வீட்டு வாயிலை காத்தவர் அவர்' என்று பதிலளித்தார். இந்த காரணத்தினாலேயே ராஜஸ தாமஸர்கள் பிரம்ம ருத்ராதிகளை வணங்குகின்றனர்.

ஆகாஷத் பதிதம் தோயம் யதா கச்சதி சாகரம் |
சர்வதேவ நமஸ்கார: கேஷவம் ப்ரதிகச்சதி ||

இந்த ஸ்லோகத்தின்படி, ஆகாயத்திலிருந்து விழும் நீர் அனைத்தும் எப்படி இறுதியில் கடலுக்குப் போய் சேர்கிறதோ, அது போலவே, எந்த தேவதையை நினைத்து வணங்கினாலும், அது ஸ்ரீபரமாத்மனையே போய் சேர்கிறது. அதாவது, ஸ்ரீபரமாத்மனே அந்த தேவதையின் ரூபத்தில், தேவதைகளில் இருந்து, பூஜையை ஏற்று, அவர்களுக்கு தக்க பலன்களைக் கொடுக்கிறார். இதே அபிப்பிராயத்தினாலேயே தாசராயர் - 'பிரம்ம பவாதிகள நாமதலி பலவித்து' என்று சொல்கிறார்.

ராவண, ஹிரண்யகசிபு ஆகியோர் பிரம்மதேவரைக் குறித்து தவம் செய்ய, ஸ்ரீபரமாத்மன், பிரம்மனின் அந்தர்யாமியாக இருந்து, தரிசனம் அளித்து, அவர்களுக்கு வரம் அளித்தான். வ்ருகாசுரன் முதலானோர் ருத்ரதேவரைக் குறித்து தவம் செய்ய, ஸ்ரீபரமாத்மன், ருத்ரரில் அந்தர்யாமியாக இருந்து, தரிசனம் அளித்து, வரங்களை அளித்தான் என்பது பொருள். யோக்யரோ, அயோக்யரோ, அவர்களின் தவத்திற்கு தக்க வரங்களைக் கொடுத்து ஆதரிக்கிறான். ஆனால், பிரம்ம ருத்ரர்களில் இருந்து, வரங்களை அளித்தவன் தானே என்று யாரிடமும் சொல்லிக் கொள்ளாதவன். இந்த ரகசியங்களை ஞானிகள் மட்டுமே அறிவர்.

ஸ்ருதிததிகளிகெ கோ³சரிசத³

பிரதிமஜா னந்தா3த்மனச்யுத
விதத விஷ்வாதா4ர வித்4யாதீ4ஷ விதி4ஜனக1 |
பிரதிதிவச சேதனரொளகெ ப்ரா
க்ருத புருஷனந்த3த3லி சஞ்சரி
சுத நியம்ய நியாமகனு தானாகி3 சந்தெய்ப ||14

ஸ்ருதிததிகளிகெ = வேத சமூகங்களுக்கு
கோசரிஸத = முழுமையாக தரிசனமளிக்காத
அப்ரதிம = சமானம் இல்லாத
ஆனந்தாத்மனு = ஆனந்த ஸ்வரூபனான
அச்யுத = நாசம் இல்லாதவனான
விதத = அனைத்து இடங்களிலும் வியாப்தனான
விஷ்வாதார = உலகத்திற்கு ஆதாரமானவனான
வித்யாதீஷ = வித்யைக்கு அதிபதியான ரமாதேவியின் தலைவனான
அல்லது
விஷ்வாதார வித்யாதீஷ = உலகத்திற்கு ஆதாரமான வித்யைக்கு தலைவனான
விதிஜனக = பிரம்மதேவரின் தந்தையான ஸ்ரீபரமாத்மன்
ப்ரதிதிவஸ = தினந்தோறும்
சேதனரொளகெ = ஜீவர்களில் இருந்து
ப்ராக்ருத புருஷ நந்ததலி = சாமான்யரான பஞ்சபூத சரீரங்களைக் கொண்ட புருஷனைப் போல
நியம்ய = நண்பனைப் போல அவனுக்குக் கட்டுப்பட்டவனைப் போல
நியாமக = அதிபதிகளில் இருந்து, ஆணைகளை பிறப்பிப்பவனைப் போலவும்
சந்தெய்ப = மக்களுக்கு சமாதானம் அளிக்கிறான்.

வேத ஸ்வரூபளான, துர்கா ரூபியான ரமாதேவியும்கூட யாரின் குணரூப ஸ்வரூபங்களை முழுமையாக அறிவதில்லையோ, யார் தனக்கு ஒப்புமை இல்லாதவனோ, உத்பத்தி சூன்யனோ, ஆனந்த ஸ்வரூபனோ, நாசம் இல்லாதவனோ, அனைத்து இடங்களிலும் வியாப்தனோ, உலகத்திற்கு ஆதாரமானவனோ, அனைத்து வித்யைக்கும் தலைவனோ, பிரம்மனின் தந்தை என்று அழைத்துக் கொள்பவனோ, அத்தகைய ஸ்ரீபரமாத்மன், ப்ரக்ருதி சம்பந்தமான, மூன்று குணங்களுக்கும் சம்பந்தமான ஜீவர்களின் ப்ராக்ருத தேகத்தில், தானும் ப்ராக்ருத ரூபத்தைக் கொண்டு இருந்தவாறு, ஒருவனுள் இருந்து ஆணையைப் பிறப்பிக்கிறான், இன்னொருவனில் இருந்து அதை நிறைவேற்றுகிறான். இப்படி அரசாட்சி செய்பவர்களில் இருந்து ஆணையைப் பிறப்பித்து, மகிழ்ச்சியைக் கொடுக்கிறான். மற்றவர்களில் இருந்து அந்த ஆணையை நிறைவேற்றி, பரிசுகளைப் பெறவைத்து, மகிழ்ச்சியைக் கொடுக்கிறான்.

**மன விஷயதொளகி3ரிஸி விஷயவ**
**மனதொளகெ3 நெலெகொ3ளிஸி பலு னூ**
**தனவு சுஸமீசீன விது3பாதேயவெந்த3ருபி1 |**
**கனஸிலாத3ரு தன்ன பாத3த3**
**நெனெவனீயதெ3 சர்வரொளகி3**
**த்தனுப4விசுவனு ஸ்தூ2லவிஷயவ விஷ்வனெந்தெ3னிஸி ||15**

மன = மனதினை
விஷயதொளகெ = பிடித்தவற்றையே கேட்க வேண்டும், அழகானவற்றையே பார்க்க வேண்டும், சுவையானவற்றையே சுவைக்க வேண்டும் என்னும் விஷய சுகங்களில்
இரிஸி = இறக்கி
விஷயவ = அந்த விஷய சுகங்களை

மனதொளகெ = மனதில்
நெலெகொளிஸி = நிலைநிறுத்தி
இது = இந்த விஷய சுகங்கள்
பலுனூதனவு = மிகவும் புதியதாக இருக்கின்றன
சுசமீசீனவாதுது = மிகச் சிறந்தவை
உபாதேயவு = இதனால் சீக்கிரத்தில் சுகம் உண்டாகிறது
எந்தருபி = என்று ஜீவர்களுக்கு தெரியப்படுத்தி
கனஸிலாதரு = கனவிலாவது
தன்ன பாதத நெனெவனு = தன் பாதங்களை நினைப்பவர்களை
ஈயதெ = கொடுக்காமல்
சர்வரொளகித்து = அனைத்து பிராணிகளிலும் இருந்து
விஷ்வனெந்து = விஸ்வ என்று
எனிஸி = அழைக்கப்படுபவன்
ஸ்தூலவிஷயவ = ஸ்தூலமான விஷய போகங்களை அனுபவிப்பான்

சாத்விகர்களின் மனதை மட்டும் தன் பாதாரவிந்த ஸ்மரணையில் நிறுத்தி, விஷய சுகங்கள் தற்காலிகமானவை என்று சொல்லி, அவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறான் ஸ்ரீபரமாத்மன். ராஜஸ தாமஸ மக்களை அப்படி செய்வதில்லை. அவர்களுக்கு எப்படி அருள்கிறான் என்பதையே இந்த பத்யத்தில் சொல்கிறார் தாசராயர்.

மனதினை விஷய சுகங்களில் நிலைநிறுத்துகிறான். அதாவது, சுவையான உணவுகளையே உண்ண வேண்டும். ஸ்த்ரீயர்களின் போகங்களை அனுபவிக்க வேண்டும் என்னும் விஷய சுகங்களில் அவர்கள் மனதினை வைத்து, இவை எப்போதும் புதியது, இவற்றையே நாம் எப்போதும் அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை விதைத்து, அதையே திடமாக்கி, ஜாக்ர அவஸ்தையில் அதாவது அவர்கள் விழித்திருக்கும்போது பகவத் ஸ்மரணையே வராமல், கனவில் கூட தன் பாதாரவிந்தங்களின் ஸ்மரணையைக் கொடுக்காமல், விஷ்வ என்று அழைத்துக் கொண்டு அனைத்து இடங்களிலும் இருந்து, ஸ்தூலமான சுகங்களை தான் அனுபவிக்கிறான்.

ஸ்வநிர்மிதேஷு நிர்விஷ்ணோ புங்க்தே பூதேஷு தத்குர்ணா - பிராணிகளில் தான் இருந்து அந்த தேகத்திற்கு சம்பந்தப்பட்ட சுகங்களை மட்டும் அனுபவிக்கிறான் என்னும் பாகவத வாக்கியமே இதற்கு ஆதாரமாக இருக்கிறது.

**தோ1த3க1னு தானாகி மனமொத3**
**லாத3 க1ரணதொளித்து3 விஷயவ**
**நைது3வனு நிஜபூர்ண சுக2மய க்ராஹ்ய க்ராஹக1னு |**
**வேத3வேத்3யனு திளியத3வனோ**
**பா1தி3 பு4ஞ்சிஸுதெ1ல்லரொளகா3**
**ஹ்லாத3 ப3டு3வனு ப4க்தவத்ஸல பா4க்யஸம்ப1ன்ன ||16**

தோதகனு = எதையும் தீர்மானிப்பவன்
தானாகி = தானே ஆன
மனமொதலாத = மனது முதலான
கரணதொளித்து = இந்திரியங்களில் இருந்துகொண்டு
விஷயவனு = விஷய சுகங்களை
ஐதுவனு = (பரமாத்மன் தானே) அவற்றைப் பெறுகிறான்
நிஜபூர்ண சுகமய = பூர்ணானந்த ஸ்வரூபன் (ஆனாலும்)

க்ராஹ்யக்ராஹகனு = கந்த ரஸ முதலான வஸ்துகளில் இருந்து, க்ராஹ்ய என்று பெயர் பெறுகிறான், மூக்கு, நாக்கு ஆகிய இந்திரியங்களில் இருந்து க்ராஹக என்று பெயர் பெறுகிறான்.
பாக்யசம்பன்ன = ஷட்குணைஸ்வர்யங்களைக் கொண்டவனான, பக்தவத்ஸலனான ஸ்ரீபரமாத்மன்
திளியதவனோபாதியலி = ஒன்றும் தெரியாதவனைப் போல
புஞ்சிசுத = அவரவர தேகங்களில் சுகங்களை போகித்தவாறு
எல்லரொளகு = அனைவரின் தேகங்களிலும் இருந்து மகிழ்ச்சியடைகிறான்.

ஸ்ரீபரமாத்மன், மனம் முதலான இந்திரியங்களில் இருந்து, ஜீவர்களுக்கு விஷயாதிகளில் ஆசையை உருவாக்கி செய்யும் செயல்கள் என்ன?

ஸ்ரீபரமாத்மன், மனம் முதலான இந்திரியங்களில் இருந்து, அதாவது, கண்களில் இருந்து, ரூபங்களை பார்ப்பது, காதுகளில் இருந்து சத்தத்தைக் கேட்பது, மூக்கில் இருந்து வாசனையை ஸ்வாசிப்பது ஆகிய செயல்களை செய்கிறான். நாக்கினில் இருந்து ருசியை ஏற்றுக் கொள்கிறான். தோல் சர்மங்களில் இருந்து, குளிர் வெயில் ஆகியவற்றை உணர்கிறான். மேலும், கண் காது போன்ற இந்திரியங்களின் அபிமானிகளான தேவதைகளில் இருந்து பார்ப்பது, கேட்பது, உண்பது, ஜீர்ணிப்பது, குளிர் வெயில்களை உணர்வது என அந்தந்த செயல்களை செய்கிறான். இதன் பொருள் என்னவெனில்: கண் முதலான அபிமானி தேவதைகளில் இருந்து பார்ப்பதற்கும், கேட்பதற்கும் தீர்மானிக்கிறான். கண் முதலான இந்திரியங்களில் இருந்து ரூப, சப்தங்களை ஏற்றுக்கொள்கிறான் என்று அறியவேண்டும்.

க்ராஹ்ய க்ராஹக என்றால்: கண்களால் பார்க்கத் தகுதியானவை அழகான வஸ்துகள். இதற்கு க்ராஹ்ய என்று பெயர். ரூபங்களை பார்ப்பவை கண் முதலான இந்திரியங்கள். ஸ்ரீபரமாத்மன் தானே க்ராஹ்ய ரூபியாகவும், க்ராஹக ரூபியாகவும் இருக்கிறான். இப்படி, தத்வாபிமானி தேவதைகளில் இருந்து, க்ராஹ்ய வஸ்துகளை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லி, இந்திரியங்களில் இருந்து அவற்றை ஏற்றுக்கொண்டு, விஷய சுகங்களை அனுபவிக்கிறான். அவனோ, எப்போதும், பூர்ணானந்த ஸ்வரூபன். ஒருவரில் இருந்து ஆனந்தத்தை ஏற்றுக்கொள்வது அவனுக்கு பெரிய விஷயமில்லை. வேதங்களால் புகழப்படுபவன். ஆறு நற்குணங்களால் நிரம்பியவன். ஆனாலும், ஜீவர்களில் இருந்து, ஒன்றும் தெரியாதவனைப் போல, அந்தந்த தேகங்கள் ஏற்கும் சுகங்களை ஏற்று மகிழ்ச்சியடைகிறான்.

தனக்கு சுக அனுபவங்களின் விருப்பமே இல்லாவிட்டால், ஸ்ரீபரமாத்மன், ஜீவர்களில் இருந்து அந்த சுகங்களை ஏன் அனுபவிக்க வேண்டும்? அதாவது, அவன் பக்தவத்ஸலன் ஆகையால், ஜீவர்களை மேம்படுத்துவதற்காக (உத்தரிப்பதற்காக) தான் அவற்றை ஏற்றுக்கொள்கிறான். பாகவத 7ம் ஸ்கந்தத்தில், இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

நைவாத்மன: ப்ரபுரயம் நிஜலாபபூர்ணோ மானஞ்சனாதவிதுஷ: கருணோவ்ருணீதே |
யத்யஜ்ஜனோ பகவதே விததீதமானம் தச்சாத்மனே ப்ரதிமுகஸ்ய யதாமுகஸ்ரீ: ||

இந்த ஸ்லோகத்தை ஏற்கனவே ஒரு இடத்தில் உதாரணமாகப் பார்த்திருக்கிறோம். ஆனாலும், பேசும் விஷயத்திற்கு சம்பந்தப்பட்டிருப்பதால் மறுபடி இங்கே பார்க்கலாம். ஸ்ரீபரமாத்மனுக்கு தன் விருப்பத்தினாலேயே தனக்கு பூர்ணமான சுகம் இருக்கிறதே தவிர, ரமாதேவியர் மூலமாகக்கூட தனக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. அப்படி இருந்தாலும், தகுதியானவர்களில் இருந்து பூஜைகளை செய்வித்து, ஜீவர்களில் இருந்து அதை ஏற்றுக்கொள்கிறான். அது எதற்கு என்றால்,

அவன் கருணைக்கடல் ஆகையால், பக்தர்களின் பூஜையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால், பக்தர்களுக்கு திருப்தி ஆவதில்லை. அவர்களின் நலனுக்காகவே தான் அவற்றை ஏற்றுக்கொள்கிறான். நம் முகத்தின் அலங்காரத்தைப் பார்த்து மகிழவேண்டும் என்றால், அதை கண்ணாடியில் பார்த்து மகிழவேண்டுமே தவிர, நம் முகம் நமக்குத் தெரிவதில்லை. ஆனால், கண்ணாடியில் தெரியும் முகத்தின் பிரதிபிம்பத்திற்கு அலங்காரம் செய்வது சாத்தியமில்லை. ஆகையால், நம் முகத்திற்குத் தேவையான அலங்காரம் செய்துகொண்டு, கண்ணாடியில் அதைப் பார்த்து மகிழ்வதைப் போல, பிம்பனான பரமாத்மன் பூஜையை ஏற்றுக்கொண்டால் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது என்பதே இந்த ஸ்லோகத்தின் கருத்து.

மரங்களின் வேருக்கு நீர் இறைத்தால், அதன் கிளைகள் வளர்வதைப் போல், நம் தேகத்தின் இருந்து பரமாத்மன் சுகங்களை அனுபவித்தால், அது ஜீவனுக்கு திருப்தி ஆகிறது. இல்லையெனில், ஜீவன் சுகத்தைப் பெறுவதில்லை. ஆகையாலேயே, ஸ்ரீபரமாத்மன் தேகங்களில் இருந்து விஷய சுகங்களை அனுபவித்து, ஜீவனை திருப்திப்படுத்துகிறான் என்று அறியவேண்டும்.

**நித்ய நிக$^{3}$மாதீ$^{1}$த$^{1}$ நிர்கு$^{3}$ண**
**ப்$^{4}$ருத்$^{1}$யவத்ஸல ப$^{4}$யவினாஷன**
**சத்யகா$^{1}$ம ஷரண்ய ஷாமல கோ$^{1}$மலாங்க$^{3}$ சுகி$^{2}$ |**
**மத்த$^{1}$னந்த$^{3}$தி$^{3}$ மர்த்யரொளஹொர**
**கெ$^{3}$த்த$^{1}$னோடலு சுத்து$^{1}$தி$^{1}$ப்பனு**
**அத்யதி$^{4}$க$^{1}$ சந்த்ருப்த$^{1}$ த்ரிஜகத்$^{1}$வியாப்த$^{1}$ பரமாத்ம ||17**

நித்ய நிகமாதீத = நித்யமான வேதங்கள் கூட விளக்குவதற்கு சாத்தியமில்லாத குணரூபங்களைக் கொண்டவன்.
நிர்குண = சத்வரஜஸ்தமோ குணங்களுக்குக் கட்டுப்படாதவன்
ப்ருத்யவத்ஸல = பக்தர்களில் அன்பு கொண்டவன்
பயவினாஷன = பக்தர்களின் பயங்களைப் போக்குபவன்
சத்யகாம = உண்மையான விருப்பம் கொண்டவன்
ஷரண்ய = வேண்டுவதற்கு அருகதை கொண்டவன்
ஷாமலகோமலாங்க = கருப்பு வர்ணத்தைக் கொண்ட அழகான தேகத்தைக் கொண்டவன்
சுகி = சுக ஸ்வரூபன்
மத்தனந்ததி = மத்யபானங்களைக் குடித்து, சுயநினைவு இல்லாமல், பயமில்லாமல் சுற்றுபவனைப் போல
மர்த்யர = மனுஷ்யாதி பிராணிகளின்
ஒளஹொரகெ = உள்ளே மற்றும் வெளியே
யித்தனோடலு = எங்கு பார்த்தாலும்
இப்பனு = இருக்கிறான்
அதி = மிகவும்
அதிக = அதிகமாக
சந்த்ருப்த = எப்போதும் திருப்தியாகவே இருக்கிறான்
த்ரிஜகத் வியாப்த = மூன்று உலகங்களிலும் வியாப்தனாக இருக்கிறான்
பரமாப்த = பக்தர்களுக்கு நண்பனானவன்.

ஸ்ரீபரமாத்மன், நித்யமான வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதைவிட அதிக குணரூபங்களைக் கொண்டவன். சத்யரஜஸ்தமோ என்னும் ப்ராக்ருத குணங்கள் அற்றவன். தன் பக்தர்களில் அதிக அன்பினைக் கொண்டவன். பக்தர்களுக்கு வரும் பயங்களை பரிகரிப்பவன். அவனின் சங்கல்பங்கள் என்றும் வீணாவதில்லை. சரணடைவதற்கு தகுதியுள்ளவன். கருமை நிறத்தவன். அழகான அங்கங்களைக் கொண்டவன். நித்யானந்த ஸ்வரூபன். எப்போதும் திருப்தியுடன் இருப்பவன்.

மூன்று உலகங்களின் உள்ளேயும் வெளியேயும் வியாப்தனாக இருப்பவன். பக்தர்களுக்கு நட்பானவன். மத்யபானங்களைக் குடித்தவர்கள், எப்படி மெய்மறந்து, சுய நினைவில்லாமல், பயமில்லாமல் சுற்றுவரோ, அதைப்போல, அனைத்து பிராணிகளின் உள்ளே, வெளியே மற்றும் அதன் சுற்றிலும் எங்கு பார்த்தாலும் அங்கு இருப்பவன். சந்திரமுகி என்னும் உதாரணத்தில், சந்திரனின் ஒளியை மட்டும் எப்படி உவமையாக எடுத்துக்கொள்கிறோமோ அப்படி, இங்கு மத்யபான உதாரணத்தில் இருக்கும் பயமில்லாமை என்னும் குணத்தை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**ப[1]வி ஹரின்மணி வித்[3]ருமத[1] ச**
**ச்சவிக[3]ளந்த[3]தி[3] ராஜிசுத[1] மா**
**த[4]வ நிரந்தர தேவ தானவ மானவரொளித்து |**
**த்ரிவிதகு[3]ண கர்ம ஸ்வபா[4]வவ**
**பவனமுக தேவாந்தராத்மக[1]**
**திவஸ திவஸதி வ்யக்த[1]மாடு[3]த[1] அவரொளித்து[3]ணிப[1] ||18**

பவி = வைரம்
ஹரின்மணி = நீலமணி
வித்ரும = பவளம்
சச்சவிகளந்ததி = மிகச்சிறந்த மணிகளைப் போல
ராஜிஸுவ = ஒளிர்ந்தவாறு
மாதவ = ஸ்ரீரமாபதி
நிரந்தர = எப்போதும்
தேவமானவதானவரொளித்து = தேவதைகளில், மனிதர்களில், தானவர்களில் இருந்து
த்ரிவித = மூன்று விதமான
குண = சத்வ ரஜஸ் தமோ என்னும் குணங்கள்
கர்ம ஸ்வபாவவ = மூன்று வித குணங்களின் ஸ்வபாவமான மூன்று வித கர்மங்களை
பவனமுக தேவாந்தராத்மக = வாயுதேவரில் தொடங்கி அனைத்து தத்வாபிமானி தேவதைகளில் அந்தர்யாமியாக இருந்து
திவசதிவசதி = தினந்தோறும்
வ்யக்திமாடுத = நிலைத்திருந்து
அவரொளித்து = த்ரிவித ஜீவர்களிலும், அந்தந்த தேவதைகளிலும் இருந்து
உணிப = த்ரிவித ஜீவர்களுக்கு சுக துக்கங்களின் கலவையான சுக துக்கங்களைக் கொடுக்கிறான்.

ஸ்ரீபரமாத்மன், சாத்விகர்களுக்கு வைரத்தைப் போல ஒளிபொருந்திய, ராஜசர்களுக்கு கருப்பு சேர்ந்த நீலமணி போலவும், தாமசர்களுக்கு பவளத்தைப் போலவும், இப்படி சிறந்த ஒளியுடன் ஒளிர்ந்தவாறு, தினந்தோறும் சாத்விகரான தேவதைகளிலும், ராஜஸரான மனிதர்களிலும், தாமசர்களான தானவர்களிலும் இருந்து, சாத்விகர்களால் சத்கர்மங்களையும், ராஜசர்களால் இருவித கர்மங்களையும், தாமசர்களால் கெட்ட செயல்களையும், அவரவர்களின் சுபாவத்திற்கேற்ப செய்வித்து, வாயுதேவர் முதலான தத்வாபிமானி தேவதைகளுக்குள் அவரவர் ரூபியாகவே இருந்து, தினந்தோறும் அவரவர்களின் ஸ்வபாவிக கர்மங்களை செய்வித்தவாறு, சாத்விகர்களுக்கு சுகங்களை, ராஜசர்களுக்கு சுகதுக்கங்களின் கலவையையும், தாமசர்களுக்கு துக்கங்களையும் கொடுக்கிறான். (அவர்களின் அனுபவத்திற்குக் கொண்டு வருகிறான்).

இதில், பவி, ஹரின்மணி, வித்ரும என்றால் வைரம், நீலமணி, பவளம் என்னும் மூன்று வர்ணங்களை, சாத்விக, ராஜஸ, தாமஸர்களுக்கு ஒப்பிட்டால்,

பாகவதாதிகளில் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு வேறுபாடு வருகிறது. அது எப்படியெனில், பாகவத 10ம் ஸ்கந்தத்தில்:

ஸத்வந்த்ரிலோகஸ்திதயே ஸ்வமாயயாபிபர்தி ஷுக்லங்கலு வர்ணமாத்மன: |
ஸர்காய ரக்தம் ரஜஸோப ப்ரும்ஹிதம் க்ருஷ்ணாந்துவர்ணம் தமஸாஜனாத்யயே ||

என்னும் ஸ்லோகத்தில், உலகத்தை காப்பாற்றுவதற்காக, நீ சத்வ குணத்தை பிரதிபலிக்கும் வெண்மை நிறத்தை ஏற்றாய். ஸ்ருஷ்டி செய்யும் காலத்தில், ரக்த வர்ணத்தை ஏற்றாய். மக்களை அழிக்கும் காலத்தில் தமோ குணத்தை பிரதிபலிக்கும் கருப்பு வர்ணத்தை ஏற்றாய் - என்கிறார். இதிலிருந்து ரஜோ குணரூபம் ரக்த வர்ணம் என்றும், தமோ குணரூபம் கருப்பு வர்ணம் என்றும் தெளிவாகிறது. தாசராயரின் வாக்கியத்திலிருந்து, சாத்விக ரூபம் வைரம் என்றும், ராஜ ரூபம் நீலமணி என்றும், தாமஸ ரூபம் பவள வர்ணம் என்றும் தெரிகிறது. இங்கு சொல்லப்பட்டிருக்கும் நீல வர்ணம் என்பது கருப்பு வர்ணத்திற்கும் பொருந்துகிறது. எப்படியெனில், ஸ்ரீகிருஷ்ணன் சில இடங்களில் கருப்பு வர்ணன் என்றும் சில இடங்களில் நீல வர்ணன் என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறான். சில சமயங்களில் கூந்தலை வர்ணிக்கும்போது 'நீலகுந்தல' என்று சொல்லியிருப்பதால் கிருஷ்ண வர்ணத்திற்கு நீலம் என்றும் பெயருண்டு என்பது தெளிவாகிறது.

ஆக, தாசரின் வாக்கியத்திலிருந்து, வெண்மை, கருப்பு, சிவப்பு ஆகிய வர்ணங்களை வரிசையாக சொல்லி, தேவ, மானவ, தானவ என்று சொல்லியிருப்பதால், பாகவதாதி கிரந்தங்களில் சொல்லியிருப்பதற்கு வேறுபாடு தெரிகிறது. ஆகவே இந்த பத்யத்தில் 'தேவ மானவ தானவ' என்பதற்கு பதில் 'தேவ தானவ மானவ' என்று இருக்கலாம் என்று நினைக்கிறோம். அப்படி இருந்தால், சாத்விக, தாமஸ, ராஜஸ என்னும் வரிசையை வைத்துக்கொண்டால், மேற்சொன்ன பாகவத ஸ்லோகத்திற்கு பொருந்துகிறது. இதே விதமாகவே, உத்தம அதம மத்யம என்று நிர்ணயங்களில் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

**அணு மஹத்தினொளிப்ப க$^4$ன பர**
**மணு வினொளக$^3$டகி$^3$சுவ சூக்ஷ்மவ**
**முணுகி$^3$சுவ தே$^1$லிசுவ ஸ்தூ$^2$லக$^3$ளிவன மாயவிது$^3$ |**
**த$^3$னுஜ ரக்க$^1$ஸரெல்ல ரிவனொளு**
**முனிது$^3$ மாடுவதே$^3$னுலூக$^2$ல**
**வனிகெ$^1$க$^3$ளு தா$^4$ன்யகள ஹணிவந்ததலி சம்ஹரிப ||19**

அணு = மிகவும் சிறிய பொருட்களில் அதைவிட சிறியதாகவும்
மஹத்தினொளு = மிகப்பெரிய பொருட்களில் அதைவிட பெரியதாகவும், அதில் அந்த பொருட்களின் உருவமாகவும்
இப்ப = இருக்கிறான்
கன = பெரிய பொருட்களை
பரமணுவினொளகெ = மிகச்சிறிய பொருட்களின் உள்ளே
அடகிஸுவ = அடங்கியிருக்கிறான்
சூக்ஷ்மவ = மிகச்சிறிய பொருட்களை
முணுகிசுவ = நீரில் மூழ்கடிக்கும்
ஸ்தூலகள = மிகப்பெரிய பொருட்களை
தேலிசுவ = மிதக்க வைக்கும்
இது = இந்த அபாரமான சக்தி
அவன = ஸ்ரீபரமாத்மனின்
தனுஜரக்கஸரெல்லரு = தைத்ய அசுரர்கள் அனைவரும் சேர்ந்து
இவனொளு = இந்த பரமாத்மனில்

முனிது = த்வேஷம் செய்து ஆவதென்ன?
உலூகவனிகெகளு = மிகப்பெரிய பாத்திரங்கள்
தான்யகள = அரிசி முதலான தானியங்களை
ஹணிவந்ததலி = உமியைப் பிரித்து தானியங்களை மட்டும் வைத்துக் கொள்வதைப் போல
சம்ஹரிப = தேகங்களை அழித்து, ஜீவர்களை மட்டும் வைத்துக் கொள்கிறான்.

மிகச்சிறந்த சக்தி பரமாத்மனுடையது என்றும், ஜீவனுக்கும் பரமாத்மனுக்கும் எப்போதும் பேதம் இருக்கிறது என்றும் இந்த பத்யத்தில் தாசராயர் சொல்லியவாறு, ஜீவ பரமாத்மனின் பேதத்தை தெரிவிக்கும் வேத அர்த்தங்களை இங்கு விவரிக்கிறார்.

பரமாத்மன் மிகச்சிறந்த சக்தி உடையவன். எப்படியெனில்: 'அணோரணீயான் மஹதோ மஹீயான்' என்னும் வேத மந்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் போல, மிகவும் சிறிய பொருட்களில் அதைவிட சிறியதாகவும், மிகப்பெரிய பொருட்களில் அதைவிட பெரியதாகவும் இருந்து அதை காக்கிறான். பாகவத 3ம் ஸ்கந்தத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

சரமஸ்து விஷேஷாணா மனோகாஸம்யுதஸ்யுய: |
பரமாணு: ஸவிக்ஞே யோன்ருணா மைக்யப்ரமோயத: ||
ஸதஏவபதார்த்தஸ்ய ஸ்வரூபாவஸ்திதஸ்யயத் |
கைவல்யம் பரம மஹானவிசேஷோ நிரந்தர: ||

இதன் பொருள் என்னவெனில்: ஏதேனும் ஒரு பொருளை, உதாரணத்திற்கு ஒரு தலைமுடியை முடியும்வரைக்கும் பிரித்து, அதை துண்டு துண்டாக வெட்டி, அதைவிட சிறியதாக முடி இருக்கமுடியாது என்று ஆக்கியபிறகு, அதையே பரமாணு என்று சொல்லலாம். அத்தகைய பரமாணு வஸ்துவில் அதைவிட சிறியதாக பரமாத்மன் இருக்கிறான். அவ்வளவு சூக்ஷ்ம ரூபியானாலும், ஸ்ரீபரமாத்மன், சங்கு சக்கர கதா பத்மங்களை நான்கு கரங்களிலும் ஏந்தியும், பீதாம்பரதாரியாகவும், கிரீட குண்டலங்களை தரித்தும், ஸ்ரீலட்சுமிதேவியின் இருப்பிடமான ஸ்ரீவத்ஸங்களுடனும், கௌஸ்துபாபரணத்துடனும், வனமாலையை தரித்திருக்கிறான். ஸ்ரீலட்சுமிதேவி அந்த பரமத்மனின் வக்ஷஸ்தலத்தில் நிலைத்திருக்கிறாள். ஸ்ரீலட்சுமிதேவி பரமாணுரூபியான பரமாத்மனின் வக்ஷஸ்தலத்தில் மிகவும் சூக்ஷ்ம ரூபத்தில் இருக்கிறாள் என்றால், பரமாத்மனைவிட சிறிய ரூபமாக லட்சுமிதேவிக்கு சொல்லவேண்டுமே தவிர, பரமாத்மனுக்கு எப்படி சொல்லலாம் என்றால்; பரமாத்மன் தன் விருப்பத்தின்படியே லட்சுமிதேவிக்கு இத்தகைய சூக்ஷ்ம ரூபத்தைக் கொடுத்து, தன் வக்ஷஸ்தலத்தில் வைத்துக்கொண்டிருக்கிறான் ஆகையால், அதுவே பரமாத்மனின் சாமர்த்தியம் ஆகையால், அ-ஸ்வதந்த்ரளான லட்சுமிதேவியை அணுரூபி என்று சொல்ல முடியாது என்று அறியவேண்டும்.

இதைப் போலவே, அனைத்தையும்விட மிகப்பெரியதான பொருட்களைவிட, பெரியதாக, அந்த பெரிய பொருட்களை தன்னில் அடக்கிக்கொண்டு, தானே அனைத்தையும்விட பெரியவன் என்று சொல்லி, அதனால் கைவல்யன் என்று பெயர் பெறுகிறான். அவனைவிட பெரியதான பொருள் வேறெதுவும் இல்லை என்று அர்த்தம். இதே அர்த்தத்தையே தாசராயர் இங்கு சொல்லியிருக்கிறார்.

மேலும், மிகப்பெரிய பொருட்களை பரமாணுவில் அடக்குகிறான். பிரளய காலத்தில், ஆலயிலையில் ஒரு குழந்தையைப் போல படுத்திருக்கும்போது, மார்க்கண்டேயர் அக்குழந்தையின் மூக்கு துவாரத்தில் நுழைந்து, பிரம்மாண்டத்தின் அனைத்து வஸ்துகளையும் பார்க்கிறார். கிருஷ்ணாவதாரத்தில், கிருஷ்ணன் மண்

தின்றான் என்று நினைத்து, யசோதை அவனை வாய் திறக்கச் சொல்லி கேட்க, அவன் வாயில், மொத்த உலகத்தையும் கண்டு, வியப்படைந்தாள் என்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபரமாத்மன், பரமாணு வஸ்துகளில் பரமாணுவாக இருந்தாலும், அந்த பரமாத்மனின் வயிற்றில் மிகப்பெரியதான பிரபஞ்சமே அடங்கியிருக்கிறது. ஆகையாலேயே, தாசராயர் 'கனபரமாணு வினொளகடடிசுவ' என்கிறார்.

சிறிய பொருட்களை தண்ணீரில் மூழ்கடிக்கிறான். பெரிய பொருட்களை மிதக்க வைக்கிறான். சிறிய பொருட்களான ராகி ஆகியவை தண்ணீரில் மூழ்கிவிடும். பெரியதான கப்பல்கள் மிதக்கின்றன. இவை அனைத்தும் அவனின் மாயை என்றே அறியவேண்டும். தானியங்களை உரலில் போட்டு, உலக்கையால் குத்தினால், உமிகள் பிரிந்து தானியங்கள் மட்டும் எப்படி தனியாக வருகின்றனவோ, அதுபோலவே, பரமாத்மன் தன்னை த்வேஷிக்கும் அசுர ராக்ஷசர்களின் தேகங்களை அழித்து, ஜீவர்களை பிரித்தெடுக்கிறான். இதனால், மூன்றுவித ஜீவர்களும் அனாதி காலத்திலிருந்தே பரமாத்மனிடமிருந்து வேறுபட்டிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. இந்த விஷயத்தில் பாகவத 10ம் ஸ்கந்தத்தின், ஸ்ருதிகீதா தாத்பர்யத்தில், ஸ்ருதியை உதாரணம் காட்டியிருப்பர். அது எப்படியெனில்:

அபேதமேக மேகோஸ்மி நி:ஷ்ணாடபித்வாகி மூதித்ரய:கரந்தி |
களேன பர்ஷான் ப்ரதிஹன்மிபூரி கிம்மானிந்தந்தெ ஷத்ரவோனிந்த்ரா: ||
(ரிக்வேதம் 8-1-6)

இது ஸ்ரீபரமாத்மனின் வாக்கியம். இந்த உலகம் முழுக்க என்னுடன் போர் புரியவந்தால், நான் மட்டும் அதை எதிர்த்து நிற்பேன். இப்படிப்பட்ட உலகங்கள் இரண்டு என்னுடன் போர் புரிந்தாலும், நானே ஜெயிப்பேன். இத்தகைய உலகங்கள், மூன்று அல்லது அதைவிட அதிகம் ஆகட்டும், என்னை எதுவும் செய்யமுடியாது. உரலில் உலக்கையினால் குத்தி, தானியங்களை பிரித்தெடுப்பதைப் போல, அவர்களின் தேகங்களை நான் பிரித்தெடுக்கிறேன். உமி தனியாக வருவதைப் போல, அவர்களின் ஜீவன்களை பிரிக்கிறேன். அவர்கள் என்னை தூஷிக்கின்றனர்? தோஷங்கள் அற்றவனான என்னை என்ன சொல்லி தூஷிப்பர்? தோஷங்கள் இல்லையென்றாலும், ஏதோ ஒன்றை சொல்லி குற்றம் சாட்டுவர். ஆகையால் 'அனிந்த்ரா' சக்தி இல்லாதவர்கள் என்று ஸ்ருதி சொல்கிறது.

இந்த ஸ்ருதியை, ஸ்ருதிகீதையில் 16வது ஸ்லோக 'நஹிபரமஸ்ய' என்னும் ஸ்லோகத்தில் - 'அபரிமிதா த்ருவாஸ்தனுப்ய தோயதிஸர்வனஹி ஸஷாஷ்யதீதி நிகமோப்ரவ தேசததா' - என்னும் வாக்கியத்திற்கு ஸ்ரீமதாசார்யர் தாத்பர்யத்தில் உதாரணம் கொடுத்திருக்கிறார். ஜீவர்கள் அனாதி காலத்திலிருந்து, வாயுதேவரின் அதீனத்தில், ஸ்வரூப தேகங்களைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் உனக்கு கட்டுப்பட்டவர்களே. தற்போது மேலே சொன்ன 'அபேதம்' என்னும் ஸ்ருதியும் இதையே சொல்கிறது. இந்த வாக்கியத்தினாலும், இந்த ஸ்ருதி வாக்கியத்தினாலும், ஜீவர்கள் அனாதி காலத்திலிருந்தும், இருக்கின்றனர். அவர்களின் தேகங்களை மட்டும் நாசம் செய்கிறேன் என்று சொன்னதால், ஜீவர்கள் வேறு பரமாத்மன் வேறு என்று தெரிய வருகிறது.

**தே³வ மானவ தா³னவரு யெ**
**ந்தீ³வத³தி³ ஆவாக³ இப்ப¹ரு**
**மூவரொளகி³வகி³ல்ல ஸ்னோஹோதா³ஸீன த்³வேஷ |**
**ஜீவ ரதி⁴காரானுசாரத**
**லீவ சுக² சம்சார து³க்கவ**
**தானுணதெ அவரவரிகு³ணிசுவ நிர்க³தாஷனனு ||20**

தேவமானவ தானவரு = தேவதைகள், மனிதர்கள் மற்றும் தைத்யர்கள்
எந்து ஈ விததலி = இந்த விதமாக
இப்பரு = இருக்கிறார்கள்
மூவரொளு = இந்த மூன்று வகையானவர்களில்
இவகெ = இந்த பரமாத்மனுக்கு
ஸ்னேஹ = தேவதைகளில் நட்பாகட்டும்
உதாசீன = மனிதர்களில் உதாசீனமாகட்டும்
த்வேஷா = தானவர்களில் த்வேஷம் ஆகட்டும், இல்லை
ஜீவர = த்ரிவித ஜீவர்களின்
அதிகாரானுசாரதலி = யோக்யதைக்கேற்ப
சுக = தேவதைகளுக்கு சுகங்களை
சம்சார = மனிதர்களுக்கு கலவையான சுக துக்கங்களை
துக்கவ = தைத்யர்களுக்கு நித்ய துக்கத்தை
தா = தான்
உணதலெ = கொடுக்காமல்
அவரவரிகெ = அவரவர்களுக்கு
உணிசுவ = கொடுக்கிறான்
நிர்கத = இல்லாமல்
அஷனனு = ஆகாரம் உள்ளவன்

த்ரிவிதா ஜீவஸங்காஸ்து தேவமானுஷ தானவா: |
தத்ர தேவாமுக்தி யோக்யா: மானுஷேஷோத்தமஸ்ததா ||
மத்யமா மானுஷாயேது ஸ்ருதியோக்யாஸ்ததைவஹி |
அதமா நிரயான்யைவ தானவாஸ்து தமோலயா: ||
முக்திர்னித்யா தமஸ்சைவ நாவ்ருத்தி: புர்னரேதயோ: ||
தேவானாம் நிரயோனாஸ்தி தமஸ்சாபி கதஞ்சன: |
நாசுராணாம் ததா முக்தி: கதாசித்கேனசித்க்வசித் ||
மானுஷாணாம் மத்யமானாம் நசைதத்வ்யமவாப்யதே ||
(மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் 1-86-89)

ஜீவராசிகளில் தேவதைகள் என்றும், மனிதர்கள் என்றும், அசுரர்கள் என்றும் மூன்று வகைகள் உள்ளன. இதில் தேவதைகள் அனைவரும் மனுஷோத்தமர்கள் முக்தி யோக்யர்கள் ஆவர். மனிதர்களில் மத்யமர் எப்போதும் நித்ய சம்சாரிகள். மனிதர்களில் அதமர் நரகத்தை அனுபவிப்பவர்கள் ஆவர். தானவர்கள் அனைவரும் தமோயோக்யர்கள் ஆவர். இதில் முக்திக்கு சென்றவர்களுக்கும், தமஸ்ஸிற்கு சென்றவர்களுக்கும் மறுபிறவி இல்லை. தேவதைகளுக்கு நரகமோ, தமஸ்ஸோ என்றும் இல்லை. அசுரர்களுக்கு, எந்த சாதனைகளை செய்தாலும், எந்த காலத்திலும் முக்தி கிடையாது. மனிதர்களில் மத்யமர்களுக்கு முக்தியோ, தமஸ்ஸோ கிடையாது. இந்த அபிப்பிராயத்தையே தாசராயர் இந்த பத்யத்தில் சொல்லியிருக்கிறார்.

இப்படி தேவ மனித தானவ என்னும் மூன்று வித ஜீவராசிகளில், தேவதைகளில் பரமாத்மனுக்கு நட்போ, மனிதர்களில் உதாசீனமோ, தானவர்களில் த்வேஷமோ இல்லை. அனைவரையும் சமமாகவே பாவிக்கிறான். அப்படியெனில் 'இந்த்ரஸ்யார்த்தெ கதம் தைத்யானவதீத்விஷமோயதா' என்னும் பாகவத 7ம் ஸ்கந்தத்தில் பரமாத்மன் அனைவருக்கும் சமமானவன். அன்பானவன். இப்படியிருக்கையில், இந்திரன் மேல் இருக்கும் அன்பினால், தைத்யர்களைக் கொன்றது எதற்காக? என்று பரிக்ஷித் ராஜன் கேட்க, சுகாசார்யர் இப்படியாக அதற்கு பதில் சொல்கிறார்.

தேஷகால குணாம்ஸ்சைவ பக்தாதீனப்யவேக்ஷ்யது |

யோக்யதாஞ்ச ததா கர்ம சம இத்யபிதீயதே ||

என்னும் பாகவத தாத்பர்யத்தின் வசனத்தின்படி, தேச, கால, குணங்கள் ஆகியன, அவரவர்களின் கர்ம, யோக்யதை, இவற்றை அனுசரித்து அவரவர் செய்யும் பக்தி த்வேஷாதிகளுக்கேற்ப பலன்களைக் கொடுப்பதற்கு சமம் என்று பெயர். பக்தி செய்பவருக்கும், த்வேஷம் செய்பவருக்கும் ஒரே பலன்களைக் கொடுப்பதற்கு சமம் என்று பெயரில்லை என்கிறார். ஆகையால், பஜிப்பவர்க்கு அவர்களது பக்திக்கு தக்கவாறு பலன்களை, த்வேஷிப்பவர்க்கு அவர்களது த்வேஷத்திற்குத் தக்கவாறு பலன்களை கொடுப்பதற்கு சமம் என்று பெயர்.

தேவதைகள் பரமாத்மனை ஆராதனை செய்வதால் அவர்களுக்கு சுகங்களைக் கொடுக்கிறான். தைத்யர்கள் த்வேஷம் செய்வதால், அவர்களுக்கு துக்க பலன்களைக் கொடுக்கிறான் என்று அர்த்தம். இதையே இன்னும் விளக்கமாக சொல்கிறார்.

த்ரிவித ஜீவர்களின் அதிகாரத்திற்கேற்ப, தேவதைகளுக்கும் மனுஷ்யோத்தமர்களுக்கும், நித்ய சுகமயமான முக்தியையும், மானவ மத்யமர்களுக்கு நித்ய சம்சாரிக உலகத்தையும், தானவர்களுக்கு நித்ய துக்கமயமான தமஸ்ஸினையும் கொடுத்து, அதை அவர்கள் ஏற்குமாறு செய்கிறார். ஆகாரங்களை ஏற்காத பரமாத்மன், த்ரிவித ஜீவர்களிலும் இருந்து, அவர்களுக்கு சம்பந்தப்படாமல், சுகதுக்கங்களின் சம்பந்தம் இல்லாதிருக்கிறான்.

ஆனால், இதே சந்தியில் முன்னர் 'தோதகனு தானாகி' என்னும் பத்யத்தில் 'கரணதொளித்து விஷயவனைதுவனு திளியதவனோபாதி புஞ்சிஸுத' ஆகிய பத்யங்களில், பரமாத்மன் ஜீவர்களில் இருந்து சுகங்களை அனுபவிக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இங்கு பரஸ்பரம் வேறுபாடு வரவில்லையா? என்றால் அதற்கான தீர்வு பின்வருமாறு. ஜீவர்கள் தம் கர்மங்களை செய்தவாறு புண்ய சாதனங்களை செய்திருக்கும்போது, தம்முடைய சஞ்சித புண்ணியங்களை அனுபவிக்கின்றனர். அந்த ஜீவர்களுக்காக தானும் அந்த சுகங்களை பரமாத்மன் அனுபவிக்கிறான் என்பது முன்னர் பார்த்த பத்யத்தின் அபிப்பிராயம். இந்த பத்யத்தில், முக்தர் ஆனபிறகு, சுகமயமான ஸ்வரூபமுள்ள ஜீவர்களுக்கு சுகங்களைக் கொடுப்பது மட்டுமல்லாமல், தான் அதை ஏற்றுக்கொள்வதில்லை என்கிறார். இதனால் இதில் வேறுபாடு எதுவும் இல்லை என்று அறியவேண்டும்.

**எல்லி கே$^{1}$ளிதரல்லி நோடித**
**ரல்லி பே$^{3}$டித$^{3}$ரல்லி நீடித$^{3}$**
**ரல்லி ஓடித$^{3}$ரல்லி ஆடித$^{3}$ரல்லே இருதி$^{1}$ஹனு |**
**ப$^{3}$ல்லித$^{3}$ரிக$^{3}$தி$^{1}$ பல்லித$^{3}$னு சரி**
**யில்ல இவகா$^{3}$வல்லி நோடலு**
**கு$^{2}$ல்ல மானவரொல்லன ப்ரதி$^{1}$மல்ல ஜகக்கெ$^{1}$ல்ல ||21**

எல்லி கேளிதரு = எந்த இடத்தில் கதா ஸ்ரவணம் கேட்டுக் கொண்டிருந்தாலும்
எல்லி நோடிதரு = எந்த சல-அசல பிரதிமைகளில் பார்த்துக் கொண்டிருந்தாலும்
எல்லி பேடிதரு = எந்த பிரம்ம ருத்ராதி தேவதைகளை ஆராதனை செய்து அவர்களை வேண்டினாலும்
எல்லி நீடிதரு = பிரம்ம ருத்ராதிகள் யாரின் தவங்களை மெச்சி வரங்களைக் கொடுத்தாலும்
எல்லி ஓடிதரு = சம்சார சாகரத்தின் பிரச்னைகளை தாங்கமுடியாமல் எங்கு ஓடினாலும்
எல்லி ஆடிதரு = எந்த இடத்தில் பரமாத்மனின் நாமோச்சாரணை செய்து கொண்டிருந்தாலும் அல்லது பகவத் கதைகளை கேட்டுக் கொண்டிருந்தாலும்

அல்லி இருதிஹனு = அங்கு இருக்கிறான்
பல்லிதரிகெ = அறிந்தவர்களுக்கு
அதிபல்லிதனு = மிகவும் தெரிந்தவன்
ஆவல்லி நோடலு = எந்த விதத்தில் பார்த்தாலும் / இந்த உலகத்தில் எங்கு பார்த்தாலும்
இவகெ = இந்த பரமாத்மனுக்கு
சரியில்ல = சமம் இல்லை
குல்லமானவர = கர்வம், பொறாமைகளால் பூரணமான பக்தி இல்லாதவர்களின் / படாடோபமாக பூஜிப்பவர்களின் பூஜைகளை
ஒல்லனு = ஏற்றுக்கொள்வதில்லை
ஜகக்கெல்ல = அனைத்து உலகங்களிலும்
அப்ரதிமல்ல = யாராலும் வெல்லப்பட முடியாதவன்.

ஸ்ரீபரமாத்மனின் கதையைக் கேட்பவர்கள், எந்த இடத்தில் அமர்ந்து அதைக் கேட்டாலும், அங்கு பரமாத்மனும் கேட்பவர்களில் இருந்து, அவனும் கேட்டுக் கொண்டிருக்கிறான். திடமான பக்தியுடன் பரமாத்மனையே நம்பி அவன் கதையைக் கேட்பவர்களுக்கு அங்கேயே தரிசனம் அளிக்கிறான். ஜனக மகாராஜா, தான் பாகவத சப்தாஹம் கேட்பதற்காக கங்கை நதிக்கரையில் ஒரு அழகான பந்தலைக் கட்டி அங்கு ஒரு மனத்துடன் நின்று கதையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த பந்தலில் ஆயிரக்கணக்கானவர்கள் நின்று கதையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சனத்குமாரர் புராணத்தை சொல்லிக் கொண்டிருந்தனர். அப்படி கேட்பவர்களின் த்ருடபக்தியை சோதிப்பதற்காக, ஸ்ரீபரமாத்மன் திடீரென்று அந்த பந்தலுக்கு தீ பிடிக்குமாறு செய்தார். தீயைக் கண்டவுடன், அங்கு அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் பயந்தவாறு அனைத்து திசைகளிலும் ஓடத் துவங்கினர். சனத்குமாரர், மற்றும் கேட்டுக் கொண்டிருந்த ஜனக மகாராஜா இருவர் மட்டுமே அங்கு இருந்தனர்.

மக்கள், ராஜனைக் குறித்து - 'ஹே ராஜனே, பந்தலில் தீ பிடித்திருக்கிறது. உடனடியாக எழுந்து வந்துவிடவும்' - என்றனர். சனத்குமாரரை அவரின் உபன்யாசத்தை நிறுத்துமாறு கூறினர். ஆனால் அந்த இருவரும் இந்த கூக்குரல்களை கேட்காமலேயே அமர்ந்திருந்தனர். சனத்குமாரர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்க, ராஜனோ அதை கேட்டவாறே இருந்தான். நெருப்பில் மண்டபம் முழுக்க எரிந்து போயிற்று. அந்த நெருப்பில், சனத்குமாரர் மற்றும் ஜனக மகாராஜா இருவரும் எரிந்து போயினர் என்று மக்கள் நினைத்தனர். சிறிது நேரத்தில் நெருப்பு அடங்கியது. அப்போது அங்கு வந்து பார்த்த மக்கள், இந்த இருவரும் அப்படியே அமர்ந்திருக்க, புராணம் நடந்து கொண்டிருந்ததைக் கண்டனர்.

அதைக் கண்டு வருந்திய மக்கள், நாம் அநியாயமாக புராணத்தைக் கேட்காமல் ஓடிவிட்டோம், எங்கு கதா ஸ்ரவணம் நடக்கிறதோ, அங்கு பரமாத்மன் கண்டிப்பாக இருந்தே இருக்கிறான். அத்தகைய பரமாத்மனின் சன்னிதானத்தில் நெருப்பு என்ன செய்துவிட முடியும்? நமக்கு இது தோன்றவில்லையே? ராஜன் திடபக்தி உள்ளவன். அவனை நெருப்பு எதுவும் செய்யவில்லை என்று நினைத்தனர். 18 புராணங்களில் ஒன்றான பிரம்மவைவர்த்த என்னும் புராணத்தில் இந்த கதையை சொல்லியிருக்கின்றனர். ஜனகராஜன் சாட்சாத்தாக அங்கு பரமாத்மனை கண்டான். மற்றும் ஸ்ரீபரமாத்மன் எங்கு பார்த்தாலும் இருக்கிறான். சுகாசார்யர் முதலான ரிஷிகள், எந்த இடத்தில் எந்த பொருட்களில் பார்த்தாலும் அவை அனைத்தையும் பகவத் ஸ்வரூபமாகவே பார்த்தனர். ஆகையால், எங்கு பார்த்தாலும் அங்கு அவன் இருக்கிறான் என்றனர்.

எங்கு வேண்டினாலும் அங்கு இருக்கிறான். அதாவது, பாணாசுரன் ஈஸ்வரனையும், ராவணன் பிரம்மனையும், மற்றும் சிலர் பார்வதி முதலானவர்களையும் வேண்ட,

ஸ்ரீபரமாத்மன், பிரம்மாதி தேவதைகளில் தத்ரூபத்தினால் மகிழ்ச்சியடைந்து வரங்களைக் கொடுக்கிறான். பிரம்மாதிகளே வரங்களைக் கொடுக்கின்றனர் என்று புராணங்களில் சொல்லப்பட்டிருந்தாலும், பரமாத்மனே தத்ரூபியாகி இருக்கிறான் என்பதற்கு என்ன ஆதாரம்?

தேன வினா த்ருணமபி ந சலதி - பரமாத்மன் இல்லாமல் பிரம்மாதிகளுக்கு அசையக்கூட சக்தி இருக்காது என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதே ஆதாரத்தின்படி, பரமாத்மனே அவர்களின் உள்ளிருந்து வரங்களைக் கொடுக்கிறான் என்று தெரிகிறது. மேலும் பக்தியில் எங்கு வேண்டினாலும் அங்கேயே தரிசனம் அளிக்கிறான் என்னும் இன்னொரு அர்த்தமும் இருக்கிறது. த்ருவன் காட்டினில் தவம் செய்து வேண்டிக்கொள்ள, அவனுக்கு அங்கேயே தரிசனம் அளித்தான்.

உடல் ஊனமான கூர்மதாஸன், ஆஷாட சுத்த ஏகாதசியன்று, பண்டரிபுரத்து பாண்டுரங்கனை தரிசனம் செய்யமுடியாமல் போய்விட்டதே என்று வருந்த, பாண்டுரங்கன் அவன் இருந்த இடத்திற்கே வந்து நின்றான். புண்டலீகனுக்காக ஆற்றங்கரையிலேயே தரிசனம் அளித்தான். இப்படி பல உதாரணங்கள் இருக்கின்றன. எந்த இடத்தில் இருந்தாலும் மக்கள் பக்தியுடன், இலையையோ, புஷ்பத்தையோ, நீரையோ, பழங்களையோ சமர்ப்பித்தால் அவற்றை அங்கேயே ஏற்றுக்கொள்கிறான்.

எங்கு ஓடினாலும் அங்கு இருக்கிறான். அதாவது, பாகவத 10ம் ஸ்கந்தத்தில் :

மர்த்யோ ம்ருத்யுவ்யாளபீத: பலார்ய லோகான்ஸர்வான்னிர்பயம் நாத்யகர்ப்ப |
த்வத்பாதாப்ஜம் ப்ராப்யயத்ருச்சயாத்ய ஸ்வஸ்த:ஷேதே ம்ருத்யுரஸ்மாதபைதி ||

மரணம் என்னும் பாம்பிற்கு பயந்து மனிதன் இந்த உலகத்தில் எங்கு ஓடினாலும் அங்கு அவனுக்கு மரணம் கண்டிப்பாக உண்டு. அதுவே உன் பாதாரவிந்தங்களில் சேர்ந்தால், அப்போது மரணம் அவர்களை விடுகிறது. அப்போது மனிதன் பயமில்லாமல் நிம்மதியாக தூங்குகிறான். இப்படி மரணத்திற்கு பயந்து, மனிதன் எங்கு ஓடினாலும் ம்ருத்யு ரூபியாக அங்கங்கு பரமாத்மன் கண்டிப்பாக இருக்கிறான். அந்த பரமாத்மனையே நம்பினால் அந்த பயம் தேவையற்றதாக ஆகிறது.

எல்லி ஆடிதரல்லி இருதிஹனு - ஆடிதரெ என்றால் சொன்னால் என்று பொருள். விளையாடு என்னும் இன்னொரு பொருளும் உண்டு. இங்கு இந்த அர்த்தங்களும் சரியாக பொருந்துகின்றன. சிறு குழந்தைகள் மழலைச் சொற்கள் பேசியவாறு விளையாடினால், அந்த குழந்தைகளில் நிலைத்திருந்து பரமாத்மனே விளையாடுகிறான். சக்குபாய் தன் சிறிய வயதில், பொம்மைகளை வைத்து விளையாடும்போது, பாண்டுரங்கனின் பிரதிமையை வைத்து விளையாடி, அவனை வணங்குவதே விளையாட்டு என்று நினைத்து விளையாடினால், அவருக்கு பாண்டுரங்கன் எதிரிலேயே நின்றிருப்பதைப் போல தெரிந்ததாம். ஆடிதரே என்னும் சொல்லுக்கு 'சொன்னால்' என்ற பொருளில், பிரகலாதன் தன் தந்தையைக் குறித்து - 'இந்தத் தூணிலும் பரமாத்மன் இருக்கிறான்' - என்று கூற, 'சத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்' உண்மையான பக்தனான பிரகலாதனின் வாக்கியத்தை உண்மையாக்குவதற்காக அந்த தூணிலிருந்தே வெளிவந்தான் பரமாத்மன்.

பல்லிதரகதி பல்லிதனு - வேதங்களின் அபிமானியான ரமாதேவி மற்றும் பிரம்மதேவருக்கு பல்லவர்கள் என்று பெயர். ஆனாலும், பகவத் விஷயங்களை முழுமையாக யாரும் அறிய மாட்டார்கள். பரமாத்மனோ, இவர்கள் அனைவரின் ஸ்வரூபங்களையும் நன்றாக அறிவான். இந்த உலகத்தில் எங்கு பார்த்தாலும்

இவனுக்கு சமமானவர்கள் யாரும் இல்லை. நான், எனது என்னும் கர்வத்துடன், படாடோபத்துடன் செய்யும் பூஜைகளை அவன் ஏற்றுக் கொள்வதில்லை.

**த1ப்த1லோஹவு நோள்ப1 ஜனரிகெ3**
**சப்த1ஜிஹ்வன தெ1ரதி3 தோ1ர்பு1து3**
**லுப்த1பா1வக1 லோஹ கா1ம்பு3து3 பூ1ர்வதோ3பா1தி3 |**
**ஸப்த1வாஹன நிகி2ல ஜனரோ**
**ள் வியாப்தனாதுத3ரிந்த3 சர்வரு**
**ஆப்த1ராகி3ஹரெல்ல கா1லதி3 ஹித1வ கை1கொ1ண்டு3 ||22**

தப்தலோஹவு = சூடான இரும்பு
நோள்ப ஜனரிகெ = பார்க்கும் மக்களுக்கு
சப்தஜிஹ்வன தெரதி = ஏழு நாக்குகளுள்ள அந்த நெருப்பில்
தோர்புது = தெரியும்
லுப்தபாவக = நெருப்பு தணிந்தபிறகு
லோஹ = அந்த இரும்பு
பூர்வதோபாதி = முதலில் இருந்ததைப் போலவே இரும்பாக
காம்புது = தெரிகிறது (அது போலவே)
சப்தவாஹன = ஏழு குதிரைகளைக் கட்டிய ரதத்தைக் கொண்ட சூர்ய ரூபியான உருக்ரம நாமக ஸ்ரீபரமாத்மன்
நிகிளஜனரொளு = அனைத்து மக்களில் இருந்து
வ்யாப்தனாதுதரிந்த = வியாப்தனாக இருக்கும் காரணத்தினாலேயே
சர்வரு = அனைத்து மக்களும்
எல்லகாலதி = அனைத்து காலங்களிலும்
ஹிதவ கைகொண்டு = ஒருவருக்கொருவர் உதவிகளை செய்தவாறு
ஆப்தராகிஹரு = மனைவி, மக்கள், உற்றார், உறவினர் என்று அன்பாக இருக்கின்றனர்.

ஆஸ்யத்வயம் ஸுதாம்ரோஷ்டம் ஸப்தஜிஹ்வா சமன்விதம் |
தக்ஷிணாஸ்யே சதுர்ஜிஹ்வாதி ஸ்ரோவ்யே வாமவக்த்ரகே ||

சப்தஜிஹ்வன என்றால் அக்னி என்று பொருள். அக்னிரூபத்தை வர்ணிக்கும் இந்த வேத மந்திரத்தில், அக்னிதேவருக்கு இரு முகங்கள், ஏழு நாக்குகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. வலது முகத்தில் நான்கு நாக்குகள்; இடது முகத்தில் மூன்று நாக்குகள் உள்ளன.

காய்ச்சிய இரும்பைப் பார்ப்பவர்களுக்கு அது நெருப்புத் துண்டு போலவே தெரியும். அதுவே ஆறிப்போனால், அது வெறும் இரும்புதான். அதுபோலவே, ஸ்ரீபரமாத்மன் அனைவரின் தேகத்தில் வியாப்தனாக இருப்பதால், மக்கள் அனைவரும் தனக்கு வேண்டியவர்கள் என்று நினைத்து, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து, உதவி பெற்று வாழ்கின்றனர். பரமாத்மன் ஒருவருடைய தேகத்தில் இல்லையென்றால் அவன், ஆறிப்போன இரும்பு போல, அதாவது பிணம் போல, யாருக்கும் வேண்டாததாகிறான். மனைவியாளவனும்கூட பிணத்தைப் பார்க்க பயப்படுவாள். ஆகையால், மனிதர்கள் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் நடந்து கொள்வது, அவர்களுக்குள் பரமாத்மன் இருப்பதாலேயே என்று அறியவேண்டும்.

**வாரித3னு மளெகெ3ரெயெ பெளெதி3ஹ**
**பூ4ருஹங்க3ள சித்ரப2லரஸ**
**பே3ரே பே3ரிப்ப1ந்தெ1 ப3ஹுவித4 ஜீவரொளகி3த்து3 |**
**மாரமணனவரவர யோக்யதெ1**
**மீரத3லெ கு3ண க1ர்மக1ள அனு**

**சார நடெசுவ தே³வனிகெ³ வைஷம்ய வெல்லிஹுதோ³ ||23**

வாரிதனு = மேகம்
மளெகெரெயெ = மழை பொழிந்தால்
பெளெதிஹ = விளைந்திருக்கும்
பூருஹங்கள = மரங்களின்
சித்ரபலரச = விதவிதமான பழங்கள் மற்றும் அவற்றின் சாறுகள்
பேரேபேரிப்பந்தெ = வெவ்வேறாக இருப்பதைப் போல
பஹுவித ஜீவரொளகித்து = அனைத்துவித ஜீவர்களிலும் இருந்து
மாரமண = லட்சுமிபதி
அவரவர யோக்யதெ மீரதலெ = அவரவர்களின் தகுதிக்கேற்ப
குண கர்மகள அனுசார = அவர்களின் குண, கர்மங்களுக்கேற்ப
நடெசுவ = பலன்களைக் கொடுப்பான்
தேவனுக்கு = ஸ்ரீஹரிக்கு
வைஷம்யவெல்லிஹுதோ = பாரபட்சம் எங்கிருக்கிறது? (இல்லை என்று பொருள்).

மேகங்கள் அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரி மழையைப் பொழிகிறது. ஆனால், அந்த நீரினால் விளைந்த மரங்களில் காய்க்கும் காய், பழம், மற்றும் அவற்றின் சாறு வெவ்வேறு விதமாக இருக்கின்றன. சில இனிப்பு, சில கசப்பு என வெவ்வேறாக இருக்கிறது. இதற்கு அந்த மரத்தின் ஸ்வரூபமே காரணமே தவிர, மண், நீர் இவையெல்லாம் எப்படி காரணம் ஆகாதோ, அப்படியே, ஸ்ரீபரமாத்மன், சாத்விகாதி மூன்றுவித ஜீவர்களிலும் இருந்து, அவரவர்களின் தகுதியை மீறாமல் (அதற்கேற்ப), சாத்விகர் மூலமாக சத்வ கர்மங்களையும், ராஜசர் மூலமாக பலவிதமான கலவையான (மிஸ்ர) கர்மங்களையும், தாமசர் மூலமாக தன்னில் த்வேஷங்களை உருவாக்கி, அந்தந்த கர்மங்களுக்கேற்ப பலன்களைக் கொடுக்கிறார். முக்கியமாக, ஜீவர்களின் சத்வாதி கர்மங்கள், கர்மபலன்கள், இவற்றிற்கேற்ப கர்மங்களை செய்து, பலன்களைக் கொடுக்கிறாரே தவிர, தனக்கு இவன் வேண்டியவன், இவன் வேண்டாதவன் என்னும் பாரபட்சத்தினால் பலன்களைக் கொடுப்பதில்லை. இதிலிருந்து பரமாத்மனுக்கு பாரபட்சம் இல்லை என்று தெரிகிறது.

**வாரிஜாப்த¹ன கி¹ரண மணிக³ள**
**ஸேரி தத்த¹த்வர்ணகளனு வி**
**கா¹ரகை³ஸதெ³ நோள்ப¹ரிகெ³ க¹ங்கொ³ளிசுவந்த³த³லி |**
**மாரமண லோக¹த்ரயதொ³ளிஹ**
**மூருவித³ ஜீவரொளகி³த்து³ வி**
**ஹார மாடு³வனவர யோக்யதெ¹ க¹ர்மவனுஸரிஸி ||24**

வாரிஜாப்தன = தாமரைக்கு இஷ்டமான சூரியனின்
கிரண மணிகள = கிரணங்கள், சிகப்பு, பச்சை, நீலம் முதலான வண்ணங்களைக் கொண்ட ரத்னங்களின்
ஸேரி = மேல் விழுந்து
தத்தத்வர்ணகளனு = அந்தந்த ரத்னங்களின் வர்ணங்களுக்கேற்ப
விகாரகைசதெ = நிறங்களின் வித்தியாசங்களை செய்யாமல் (பார்க்காமல்)
நோள்பரிகெ = பார்க்கும் மனிதர்களுக்கு
கங்கொளிசுவந்ததலி = பளபளவென்று தெரிவதைப் போல
மாரமண = லட்சுமிபதியானவன்
லோகத்ரயதொளிஹ = மூன்று உலகங்களிலும் இருக்கும்
மூருவித ஜீவரொளகித்து = சாத்விக முதலான மூன்று வித ஜீவர்களிலும் இருந்து
அவர = அந்தந்த ஜீவர்களின்
கர்மவ = தகுதியை அனுசரித்து (அதற்கேற்ப)

விஹார மாடுவனு = நிலைத்திருப்பான் / சஞ்சரிப்பான்.

சூரியனின் கதிர்கள், சிகப்பு, நீல, பச்சை முதலான ரத்னங்களில் எந்தவித வித்தியாசமும் பார்க்காமல் விழுந்து, அந்தந்த ரத்னங்களின் நிறத்தை எப்படி மேம்படுத்திக் காட்டுகிறதோ, அது எப்படி பார்க்கும் மக்களுக்கு பளபளவென்று தெரிகிறதோ, அதுபோல, லட்சுமிபதியான பரமாத்மனும், சாத்விகாதி மூன்று வித ஜீவர்களுக்குள்ளும் இருந்து, அந்தந்த ஜீவர்களின் தகுதிக்கேற்ப, அவர்களில் நிலைத்திருப்பான் / சஞ்சரிப்பான்.

ஜலவ னப$^{1}$ஹரிசுவ க$^{3}$ளிகெ$^{3}$ ப$^{3}$
ட்ட$^{1}$லனுளிது$^{3}$ ஜைக$^{4}$ண்டெ கை$^{1}$பி$^{1}$டி$^{3}$
தெ$^{3}$ளெது$^{3}$ ஹொடெவந்த$^{3}$த$^{3}$லி சந்த$^{1}$த$^{1}$ க$^{1}$ர்த்ரு தா$^{1}$னாகி$^{3}$ |
ஹலத$^{4}$ரானுஜ புண்ய பாபத
ப$^{2}$லக$^{3}$ளனு தேவாசுரர க$^{3}$ண
தொளு விபா$^{4}$க$^{3}$வ மாடி உணிசுத சாக்ஷியாகிப்ப ||25

ஜலவனபஹரிசுவ = நீர் பிடிக்கும்
களிகெ பட்டலு = நாழிகையைக் குறிக்கும் கிண்ணம் (பாத்திரம்)
உளிது = விட்டு
ஜைகண்டெ = ஜாங்கட வாத்தியத்தை
கைபிடிதெளெது = கை பிடித்து தன்னிடம் இழுக்கும்
ஹொடெவந்ததி = அடிப்பதைப் போல
ஸந்தத = எப்போதும்
தானு = ஸ்ரீபரமாத்மன்
கர்த்ரு = செய்பவனாக
ஹலதரானுஜ = பலராமனின் தம்பியான ஸ்ரீபரமாத்மன்
புண்யபாபத பலகளனு = அவரவர்களின் புண்ணிய பாவங்களின் பலன்களை
தேவாசுரர கணதொளு = தேவதைத்யர்களின் குழுவில்
விபாகவமாடி = பிரித்து
உணிசுத = கொடுப்பான்
சாக்ஷியாகிப்ப = அதற்கு தானே சாட்சியாகவும் இருப்பான்.

கடிகாரம் இல்லாத அந்த காலத்தில், காலத்தைக் கண்டுபிடிப்பதற்காக 4 அங்குல அகலம், 4 அங்குல ஆழமும், அடியில் ஒரு சிறிய துளை கொண்ட ஒரு பாத்திரத்தை (அதன் பெயரே 'களிகெ பட்டலு' - நாழிகையை சொல்லும் பாத்திரம்) வேறொரு பெரிய நீருள்ள பாத்திரத்தில் மூழ்குமாறு செய்வர். அந்த துளையுள்ள பாத்திரம் எப்போது முழுமையாக நீரில் மூழ்குகிறதோ, அப்போது ஒரு நாழிகை ஆகிவிட்டது என்று பொருள்.

இந்த பாத்திரத்தை செய்யும் விதத்தை பாகவதத்தில் இப்படி சொல்லியிருக்கின்றனர்.

த்வாதஷார்த்த பலோன்யானஞ் சதுர்பிச்ஷ துரங்குலை: ||
ஸ்வர்ணமாப்யை: க்ருதச்சித்ரம் யாவத் ப்ருஸ்தம் ஜலம்பிபேத் ||

ஆருபலகாளு என்றால் 18 தோலா (1 தோலா = 11.66கிராம்) அரிசி பிடிக்கும் ஒரு பித்தளை அல்லது தாமிர பாத்திரம். அதன் நடுவில் 4 அங்குல நீளத்திற்கு ஒரு துளையைப் போட்டு அந்த பாத்திரத்தை மேலிருந்து பிடிப்பதற்கு ஒரு கயிறு கட்டவேண்டும். ஒரு பெரிய பாத்திரத்தில் நீர் நிரப்பி, அதில் இந்த பாத்திரத்தை விட்டால், நடுவில் இருக்கும் துவாரத்தின் மூலமாக இதில் நீர் நிரம்பும். துளையுள்ள பாத்திரம் முழுதாக முழுகிவிட்டால், ஒரு நாழிகை ஆகிவிட்டது

என்று பொருள். இப்படி ஒரு நாழிகை முடிந்தவுடன், பக்கத்தில் இருக்கும் நேரம் காப்பாளர், 1,2,3 என்று நாழிகைகளுக்கேற்ப ஜாங்கடையில் சத்தம் செய்து நேரத்தை தெரிவிப்பார். இப்படி நீர் நிரம்புகிறது என்பதை அந்த காப்பாளருக்குத் தெரியுமே தவிர, அந்த பாத்திரத்திற்கு தெரிவதில்லை. அப்படியே அந்த பாத்திரம் முழுகியபிறகு, மறுபடி அதை வெளியில் எடுத்து, நீரைக் கொட்டிவிட்டு, மறுபடி அந்த பெரிய பாத்திரத்தில் வைப்பார்.

ஜீவர்களின் விஷயத்தில் பரமாத்மனும் இந்த நேரம் காப்பாளரைப் போல இருப்பான். பெரிய பாத்திரத்தில் இருக்கும் நீரே, புண்ணிய பாவங்கள். ஜீவர்களின் ஸ்வபாவத்தை அறிந்து, அவர்களின் ஸ்தூல தேகத்தை ஸ்ருஷ்டித்து, பாத்திரத்து நடுவில் துளை போட்டு, அதில் நீர் நிரம்புவதைப்போல, பரமாத்மனும் ஜீவர்களின் ஸ்தூல தேகத்தில் அவர்களுக்கு சிறிது ஸ்வாதந்த்ர்யம் என்னும் துளையைக் கொடுத்திருக்கிறார். அதனால், சிறிது ஆசை மட்டும் தோன்றுகிறது.

பாத்திரம் தானாகவே நீரை நிரப்பினாலும், பாதுகாப்பாளர் அதன் அருகில் அமர்ந்து அது எவ்வளவு நீர் கொண்டிருக்கிறது என்பதை அறிவானோ, அது போல, ஜீவனும் அஸ்வதந்த்ரனாக பரமாத்மனால் அருளப்பட்டு, தேகத்தில் அவன் அளித்த அல்ப ஸ்வாதந்த்ர்யத்தால், தன் கர்மபலன்களுக்கு ஏற்ப, புண்ணிய பாவங்களை ஏற்றுக்கொள்கிறான். பாத்திரம் நிரம்பிவிட்டது என்பதை அறியும் காப்பாளர், ஜாங்கடவை அடிப்பது போல, பரமாத்மன், ஜீவர்களின் சாதனை முடிந்துவிட்டது என்பதை அறிந்து, அவர்களின் தகுதிக்கேற்ப பலன்களைக் கொடுக்கிறார்.

ஜாங்கடையில் எவ்வளவு முறை சத்தம் வருகிறது என்பதை வைத்து நேரத்தை மனிதர்கள் அறிவதைப் போல, ஜீவர்கள் தத்தம் புண்ணிய பாவ கர்ம பலன்களை அனுபவிக்கின்றனர். இப்படி நேரத்தை தெரிவிக்கும் காப்பாளர், அதற்கு எப்படி சாட்சியாக இருக்கிறாரோ, அதுபோலவே பரமாத்மனும், பலன்களை தேவ தைத்யர்களுக்கு பிரித்துக்கொடுத்து, தான் அதற்கு சாட்சியாக இருக்கிறார்.

**பொ$^1$ந்தி$^3$கொ$^1$ண்டி$^3$ஹ சர்வரொளு ச**
**ம்ப$^3$ந்த வாக$^3$தெ சக$^1$லக$^1$ர்மவ**
**ரந்த$^3$த$^3$லி தா$^1$ மாடி மாடிஸி தத்ப$^2$லக$^3$ளுணதெ$^3$ |**
**கு$^1$ந்த$^3$தெ$^3$ அணு மஹத்தெ$^1$னிப க$^3$ட$^1$**
**மந்தி$^3$ரதி$^3$ சர்வத்ர து$^1$ம்பி$^3$ஹ**
**பா$^3$ந்த$^3$ளத$^3$ தெ$^1$ரனந்தெ$^1$ இருதிப்பனு ரமாரமண ||26**

ரமாரமண = லட்சுமிபதியான பரமாத்மன்
சர்வரொளு = அனைத்து பிராணிகளிலும்
சம்பந்தவாகதெ = ஸ்தூலதேக சம்பந்தம் இல்லாமல்
சகல கர்மவ = அனைத்து கர்மங்களையும்
அவரந்ததலி = அந்த பிராணி செய்வதைப் போல தானும் செய்து, செய்வித்து
தத்பலகள = அந்த கர்மங்களின் பலன்களை
உணதே = தான் அனுபவிக்காமல்
அணுமஹத்தெனிப = சிறியதும், பெரியதுமான
கடமந்திரதி = குடம், பாத்திரம் ஆகியவற்றின் உள்ளே வெளியேயும்
சர்வத்ர = அனைத்து இடங்களிலும்
தும்பிஹ = நிலைத்திருக்கும்
பாந்தளத தெரனந்தெ = ஆகாயத்தைப் போல
இருதிப்பனு = இருக்கிறான்

ஸ்ரீபரமாத்மன், அனைத்து பிராணிகளிலும், அவர்களின் தேக இந்திரியங்களின் சம்பந்தம் இல்லாமல், ஜீவர்களிலும் இந்திரியங்களிலும், அவர்களின் ஸ்தூல

தேகத்தில் வியாப்தனாக இருந்து, அவரவர்கள் செய்யும் கர்மங்களை அவர்களைப் போல தானே செய்து, அவர்களிடமிருந்து செய்வித்து, அந்த பலன்களை தான் உண்ணாமல், அவர்களுக்கே கொடுப்பான். சிறிய குடமோ, பெரிய குடமோ, அவற்றின் உள்ளே முழுவதுமாக ஆகாயம் எப்படி நிரம்பியிருக்கிறதோ அப்படியே ஸ்ரீபரமாத்மன் சூக்ஷ்மரான (சிறியவர்) ஜீவர்களிலும், பெரியவர்களின் ஜீவர்களிலும், தனக்கும் அதற்கும் சம்பந்தப்படாமல் (நிர்லிப்தனாக) வியாபித்திருக்கிறார்.

**கா$^{1}$த$^{3}$க$^{1}$ப்பிண ஹிடி$^{3}$து$^{3}$ ப$^{3}$டி$^{3}$யலு**
**வேத$^{3}$னெயு லோஹக$^{3}$ளிக$^{3}$ல்லதெ$^{3}$**
**ஆதுதே$^{1}$னை அனலகா$^{3}$வ்யதெ ஏனமாடித$^{3}$ரு |**
**ஆதிதே$^{3}$வனு சர்வஜீவர**
**கா$^{1}$து கொண்டிஹனொளஹொரகெ$^{3}$ து:**
**க்கா$^{2}$திக$^{3}$ளு சம்பந்தவாகுவவேனு சின்மயகெ$^{3}$ ||27**

காதகப்பிண = நெருப்பில் நன்றாக காய்ச்சிய இரும்பினை
ஹிடிது படியலு = பிடித்து அடித்தால்
வேதனெயு = அந்த அடியின் வலி, அந்த இரும்புக்கு மட்டுமே வலிக்கும்
ஏனு மாடிதரு = என்ன செய்தாலும்
அனலகெ = நெருப்புக்கு
ஆதுதேனை = என்ன ஆகப்போகிறது? (ஒன்றும் ஆகாது என்று பொருள்).
ஆதிதேவன் = அனாதி காலத்திலிருந்தும் இருக்கும் ஸ்ரீபரமாத்மன்
சர்வஜீவர = அனைத்து ஜீவர்களின் உள்ளே வெளியே
காதுகொண்டிஹ = காத்துக் கொண்டிருக்கிறான்
சின்மயகெ = சிதானந்த ஸ்வரூபனான ஸ்ரீபரமாத்மனுக்கு
துக்காதிகள சம்பந்தவு = தேக சம்பந்தமான துக்கங்களின் சம்பந்தம்
ஆகுவுதேனை = என்றைக்கும் ஆகாது (வராது).

இரும்பை நீளமாக்க வேண்டுமெனில், அதனை நன்கு காய்ச்சி அடிப்பர். அப்போது அந்த அடியானது, அந்த இரும்பிற்கு வலிக்குமே தவிர, அதற்குள் இருக்கும் அந்த நெருப்பிற்கு ஒன்றும் / எதுவும் ஆகாது. அதுபோலவே, பரமாத்மனும் அனைத்து ஜீவர்களின் உள்ளே வெளியே வியாப்தனாக இருந்தாலும், அவர்களுக்கு சம்பந்தப்படாமல், ஜீவர்களின் தேகங்களுக்கு ஆகும் துக்காதிகள், அந்த தேகத்தில் இருக்கும் பரமாத்மனுக்கு சம்பந்தப்படுவதில்லை.

**மளல மனெகளமாடி$^{3}$ மக்களு**
**கெலவு காலதொ$^{3}$ளாடி$^{3}$ மோத$^{3}$தி$^{3}$**
**து$^{1}$ளிது$^{3}$ கெ$^{1}$டிசுவ தெ$^{1}$ரதி$^{3}$ லகு$^{1}$மீரமண லோககள |**
**ஹலவு பகெயலி நிர்மிசுவ, நி**
**ஸ்சலனு தானாகி$^{3}$த்து$^{3}$ சலஹுவ**
**எலருணிய வோல் னுங்குவவகெல்லிஹுதோ$^{3}$ சுக$^{2}$து$^{3}$க்க ||28**

மளல = மண் அல்லது மண்ணினால்
மனெகள மாடி = வீடுகளை செய்து
மக்கள் = குழந்தைகள்
கெலவுகாலதலாடி = சிறிது நேரம் விளையாடிவிட்டு
மோததி = மகிழ்ச்சியுடன்
துளிது கெடிசுவ தெரதி = அதை எட்டி உதைத்து உடைத்து விடுவதைப் போல
லகுமிரமண = ஸ்ரீபரமாத்மன்
லோககள = உலகங்களை
ஹலவுபகெயலி = பற்பல விதங்களில்
நிர்மிசுவ = ஸ்ருஷ்டித்து

நிஷ்சலனு தானாகி = அ-ஸ்திரமான ஜடங்களில் ஸ்திரமாக தான் இருந்து
சலஹுவ = அனைத்தையும் காப்பாற்றுவான்
எலருணியவோல் = காற்றை உண்ணும் பாம்பு, தன் முட்டைகளை தானே உண்ணுவதைப் போல
நுங்குவவகெ = உண்ணும் பரமாத்மனுக்கு
சுகதுக்க = தேகங்களில் இருக்கும் சுக துக்கங்கள்
எல்லிஹதோ = எங்கு இருக்கும்? (இருக்கவே இருக்காது என்று பொருள்).

குழந்தைகள் விளையாடுவதற்காக மணலில் வீடு கட்டி சிறிது நேரம் மகிழ்ச்சியுடன் அதனுடன் விளையாடிவிட்டு, பிறகு தங்கள் கால்களிலேயே அதை எட்டி உதைத்து, அந்த மணல் வீட்டை இடித்துவிடுவார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அந்த வீடு கட்டும்போதும் மகிழ்ச்சியே, விளையாடும்போதும் மகிழ்ச்சியே, அதை இடிக்கும்போதும் மகிழ்ச்சியே. அதை கட்டும்போது, கட்டவேண்டுமே என்கிற ஆயாசம் இல்லை. அதை இடிக்கும்போது துக்கமும் இல்லை. அதுபோல, பரமாத்மனும் தன் லீலைகளால் கஜ துரகாதி 84 லட்ச யோனிகளில் அபரிமித ஜீவராசிகளை ஸ்ருஷ்டிக்கிறான். அதாவது, யானை குதிரை மனுஷ்யாதி ஸ்தூல சரீரங்களை ஜீவர்களின் லிங்க சரீரங்களின் மேல், ஒரு உறையாக ஸ்ருஷ்டிக்கிறான். அந்த தேகங்களில் அவர்களைப் போல இருந்து, கர்மங்களை செய்து, செய்வித்து, விளையாட்டினைப் போலவே அனைவரையும் காப்பாற்றுகிறான்.

கட்டிய வீட்டினை குழந்தைகள் இடிப்பதைப்போல, விளையாட்டினைப் போல அந்த சரீரங்களை தானே அழிக்கிறான். பூர்ணானந்த ஸ்வரூபனான ஸ்ரீபரமாத்மனுக்கு ஸ்ருஷ்டிப்பதால் மகிழ்ச்சியோ, நாசம் செய்வதால் வருத்தமோ இருப்பதில்லை. இதற்கு தாசராயர் இன்னொரு உவமையையும் கொடுக்கிறார். பாம்பு, தான் இடும் தன் முட்டைகளை, தானே தின்றுவிடுவதைப் போல, அப்போது அதற்கு சுக துக்கங்கள் எப்படி இல்லையோ, அதுபோல, ஸ்ரீபரமாத்மன் ஸ்ருஷ்டிக்கும்போதும், அழிக்கும்போதும், தான் அதற்கு சம்பந்தப்படாமல், அதாவது சுக துக்கங்களால் பாதிக்கப்படாமல் இருக்கிறான்.

**வேஷ பா4ஷெக3ளிந்த3 ஜனர சு**
**தோ1ஷகை3சுவ நட1புருஷனோ**
**ல் தோ3ஷதூ3ரனு லோக1தொ3ளு ப4ஹுரூப மாதி1னலி |**
**தோ3ஷிசுவனவரவர மனதபி4**
**லாஷெக3ள பூரயிஸுத1னுதி3ன**
**போ1ஷிசுவ பூ1தா1த்ம பூர்ணானந்த3 ஞானமய ||29**

வேஷபாஷெகளிந்த = நாடகங்களில் ராம, கிருஷ்ண வேடங்களைப் போட்டு, தன் நடிப்பினாலும், வசனங்களாலும்
ஜனர = பார்த்துக் கொண்டிருக்கும் மக்களின்
ப்ரமோஷகைசுவ = மனதை ஈர்க்கும்
நடபுருஷனோல் = வேடம் போடும் மனிதர்களுக்கு
தோஷதூரனு = தோஷங்கள் இல்லாதவனான
பூதாத்ம = பவித்ரமான ஆத்மனைக் கொண்ட
பூர்ணானந்த ஞானமய = பூர்ணானந்தஞான ஸ்வரூபியான ஸ்ரீபரமாத்மன்
லோகதொளு = இந்த உலகத்தில்
பஹுரூப = பற்பல ரூபங்களை தரித்து. அதாவது ராம கிருஷ்ணாதி பல ரூபங்களை தரித்து, நடிப்பவர்களிலும், ரிஷிமுனிவர்களிலும் அந்தர்யாமியாக இருந்து பிம்பக்ரியைகளை நடத்தி.
மாதினலி = அந்தந்த ஜீவர்களின் தகுதிக்கேற்ப அவரவர்களில் நடவடிக்கைகளை செய்து

தோஷிசுவனு = மகிழ்விக்கிறான்.
அவரவர = அந்தந்த மக்களின்
மனதபிலாஷெகள = மனதில் இருக்கும் விருப்பங்களை
பூரைசுவ போஷிசுவ = நிறைவேற்றி அருள்வான்

நாடகங்களில் ராம கிருஷ்ணாதி வேடங்களை தரித்து, நாடகங்களில் நடிக்கும்போது, பார்ப்பவர்களுக்கு அவர்கள் ராம கிருஷ்ணர்களைப் போலவே தோன்றுவதைப் போல, அவர்களின் மனதை ஈர்த்துவிடுவதைப்போல, தோஷங்கள் அற்றவனும், மங்களாத்மகனும், பூர்ணானந்த ஞானஸ்வரூபனும் ஆன ஸ்ரீபரமாத்மன், ராமகிருஷ்ணாதி ப்ராக்ருத ரூபங்களை தரித்து, கௌஸல்யா முதலானவர்களுக்கு இவன் என் மகன் என்று தோன்றுவதைப்போல, தன் பேச்சு நடவடிக்கைகளால் அவர்களை மகிழ்விப்பதைப்போல, பிம்பரூபத்தினால் அனைத்து பிராணிகளின் அந்தர்யாமியாக இருந்து, ஜீவ-ஜீவர்களுக்கு பரஸ்பரம் சம்பந்தம் இல்லாதிருந்தாலும், தேக சம்பந்தத்தினால் இவள் என் மனைவி, இவன் என் கணவன், இவன் என் மகன் என்று பலவித அபிமானங்களைத் தோற்றுவித்து, ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியாக இருப்பதைப் போல செய்கிறான். ராமகிருஷ்ணாதி ரூபங்களால், தன்னை பஜிப்பவர்களின் இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுகிறான். கணவன் மனைவி இவர்களில் இருந்து, பரஸ்பரம் அவர்களின் இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுகிறான். அனைத்து ஜீவர்களிலும் இருந்து, அவர்களை காப்பாற்றுகிறான்.

**அத4ம மானவனோர்வ மந்த்ரெள**
**ஷத3க3ளனு தா1னரிது3 பா1வக1**
**உத3க1க3ள சம்பந்தவில்லதெ இப்பனதரொளகெ |**
**பது3மஜாண்டோதரனு சர்வர**
**ஹ்ருத3யதொளகி3ரெ கா1ல கு3ண க**
**ர்மத க1லுஷ சம்பந்தவாகுவதே நிரஞ்சனகெ3 ||30**

அதம மானவனோர்வ = அதமனான மனிதன் ஒருவன்.
மந்த்ரெளஷகளனு = மந்திர, மாத்திரைகளை
தானரிது = தான் அறிந்து
பாவக உதககள = நெருப்பு, தண்ணீரின்
சம்பந்தவில்லதெ = சம்பந்தம் இல்லாமல்
அதரொளகெ = அந்த நெருப்பு மற்றும் தண்ணீரில் இருக்கிறான்.
பதுமஜாண்டோதரனு = பிரம்மாண்டத்தையே வயிற்றில் வைத்துக் கொண்டிருக்கும் பரமாத்மன்
சர்வர ஹ்ருதயதொளகிரெ = அனைவரின் இதயத்தில் இருக்கிறான்
காலகுணகர்மத = கிருத த்ரேதாதி யுககாலங்களில், சத்வாதி குணங்களில், புண்ய பாபாதி கர்மங்களில்
அல்லது
கால = வசந்த க்ரீஷ்மாதி காலங்களில், அதற்கேற்ப குணங்கள் என்றால் வெயில், மழை ஆகியவை, கர்மம் என்றால் வெயிலுக்கு குடை பிடிப்பது. விசிறியால் விசிறிக் கொள்வது ஆகியவை.
கலுஷ = அந்தந்த காலத்திற்கேற்ப செய்யும் செயல்களால் வரும் கஷ்டங்கள்
நிரஞ்சனகெ = தோஷங்கள் அற்றவனான ஸ்ரீஹரிக்கு இவை சம்பந்தம் ஆகுமோ? ஆகாது என்று பொருள்.

அதமனான ஒரு மனிதன், மந்திர தந்திரங்களை அறிந்து, அதனால், நெருப்புக்கு நடுவில் போய் நிற்பது, நெருப்பை கையில் பிடிப்பது, நீரில் நிற்பது, அதன் மேல் நடப்பது ஆகியவற்றை மக்களுக்குக் காட்டி, நெருப்பின் சம்பந்தத்தால் ஆகும் சுடுதன்மை, நீரின் சம்பந்தத்தினால் ஆகும் மூழ்கும்தன்மை ஆகியவை

இல்லாதிருப்பான். பிரம்மாண்டத்தையே தன் வயிற்றில் வைத்துக்கொண்டிருக்கும், தோஷங்கள் அற்ற ஸ்ரீபரமாத்மன், அனைத்து ஜீவர்களின் இதயத்தில் இருந்து, சிறியதான பரமாணு முதல் மிகப்பெரிய பதார்த்தங்கள் வரை இருக்கும் காலத்தை படைத்து, பிறந்து, வாழ்ந்து, முதுமையை அடைந்து, இறந்து, இருக்கும்வரை அரசாண்டு, யாகங்களை செய்து, போரில் மூர்ச்சையாகி, தோற்று, வெயிலால் வாடி, தாகத்தால் தவித்து - என அனைத்து கால குண கர்மங்கள், அதனால் வரும் கஷ்டங்கள் இவை அந்த பரமாத்மனுக்கு சம்பந்தம் ஆகுமோ? என்றும் ஆகாது.

**ஒந்து கு$^{3}$ணதொளனந்த கு$^{3}$ணகளு**
**ஒந்து ரூப$^{1}$தொ$^{3}$ளிஹவு லோக$^{1}$க$^{3}$**
**ளொந்து ரூப$^{1}$தி த$^{4}$ரிஸி த$^{1}$த்த$^{1}$த்தர்த்த$^{3}$ தொளஹொரகெ |**
**பா$^{3}$ந்த$^{3}$ளத$^{3}$ வோலித்து$^{1}$ ப$^{3}$ஹு பெச**
**ரிந்த க$^{1}$ரெசுத$^{1}$ பூர்ணஞானா**
**நந்தமய பரிபரி விஹாரவ மாடி$^{3}$ மாடி$^{3}$சுவ ||31**

ஒந்து குணதொளு = பரமாத்மனுக்கு இருக்கும் அனேக குணங்களில் ஒரு குணத்தில்
ஒந்து ரூபதொளு = பரமாத்மனுக்கு இருக்கும் அனேக ரூபங்களில் ஒரு ரூபத்தில்
லோககளு = அனந்த லோகங்கள்
இஹவு = இருக்கிறது. அந்த லோகங்களை
ஒந்து ரூபதி தரிஸி = ஒரு ரூபத்தால் தாரணை செய்து
தத்கத பதார்த்ததொளஹொரகெ = அனைத்து பிராணிகளின் உள்ளே மற்றும் வெளியே
பாந்தளதவோலித்து = ஆகாயத்தைப் போல வியாப்தனாக இருந்து
பஹுபெசரிந்த = அனந்தானந்த நாமங்களால்
கரெசுத = அழைத்துக் கொள்ளப்படும்
பூர்ணா ஞானானந்தமய = பூர்ண ஞானானந்த ஸ்வரூபனான ஸ்ரீபரமாத்மன்
பரிபரிய விஹாரவமாடி = பற்பல விதங்களில் சஞ்சரித்து
மாடிசுவ = அனைவரின் உள்ளேயும் இருந்து செயல்களை செய்கிறான்.

ஸ்ரீபரமாத்மனிடம் இருக்கும் அனந்தானந்த குணங்களில் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த ஒரு குணத்தில் அனந்தானந்த குணரூபங்கள் அடங்கியிருக்கின்றன. அதில் இருக்கும் ஒரு ரூபத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த ரூபத்தில் அனந்தானந்த லோகங்கள் காணப்படுகின்றன. அந்த லோகங்களை ஒரு ரூபத்தால் தரித்து, அ லோகங்களில் இருகும் அனைத்து பதார்த்தங்களின் உள்ளேயும் வெளியேயும் அனைத்து இடங்களிலும் ஆகாயம் வியாபித்திருப்பதைப் போல, நிர்லிப்தனாக, ஸ்வயம் பூர்ணானந்த ஞானமயனாக இருந்தாலும், அனைத்து பதார்த்தங்களின் நாமத்தினால் பற்பல விதங்களாக வடிவெடுத்து செயல்களை செய்விக்கிறான்.

அதாவது, மனிதர்களில் மனிதனின் வடிவத்தில் இருந்து, மனித நாமத்தை தரித்து, யானை குதிரைகளில், யானை குதிரைகளின் வடிவில் இருந்து, நாமத்தைப் பெற்று, மனிதர்களுக்கு வாகனங்களாக இருக்கிறான். மனிதர்களாக அமர்கிறான். யானை குதிரைகளில் இருந்து அவர்களை தூக்கிக் கொள்கிறான். மனிதர்களை யானை குதிரைகளின் மேல் அமரச் செய்கிறான். இப்படி பற்பல வித காரியங்களை, பிராணிகளில் இருந்து தானும் செய்து அவர்களாலும் செய்விக்கிறான்.

**எல்லரொளு தானிப்ப தன்னொள**
**கெ$^{3}$ல்லரனு த$^{3}$ரிசிஹனு அப்ரதி$^{1}$**
**மல்ல மன்மதஜனக ஜக$^{3}$தா$^{3}$த்யந்த$^{3}$ மத்$^{3}$யகள |**
**ப$^{3}$ல்ல, ப$^{4}$ஹுகு$^{3}$ணப$^{3}$ரித தா$^{3}$னவ**

**தல்லண ஜகன்னாதவிட்டல**
**சொல்லனாலிஸி ஸ்தம்பதிந்தலி பந்த பகு[1]தனிகெ[3] ||32**

அப்ரதிமல்ல = ஒப்புமையில்லாத வீரனான
மன்மதஜனக = மன்மதனின் தந்தையான
தானவதல்லண = தானவர்களைக் கொல்பவனான
ஜகன்னாதவிட்டல = ஜகன்னாத தாசராயரின் இதய கமலத்தில் இருக்கும் பிம்பரூபியான ஸ்ரீஜகன்னாத விட்டலன்
எல்லரொளு = அனைத்து பிராணிகளிலும்
தானிப்ப = தான் இருக்கிறான்
தன்னொளகெ எல்லரனு தரிசிதனு = தன்னில் அனைத்தையும் / அனைவரையும் அடக்கியிருக்கிறான்
ஜகதாத்யந்த மத்யகள = உலகத்தின் ஆதி, அந்த்ய, மத்யங்கள் என எல்லா பாகங்களையும்
பல்ல = அறிந்தவன்
பஹுகுணபரித = அனந்தகுண பரிபூர்ணன்
பகுதனிகெ = பக்தனுக்கு அருள்வதற்காக
சொல்லலாலிஸி = பிரகலாதன் தன் தந்தைக்கு, இந்தத் தூணிலும் பகவந்தன் இருக்கிறான் என்று சொல்லியதைக் கேட்டு
கம்பதிந்த பந்த = அந்தத் தூணிலிருந்து நரசிம்ம ரூபத்தில் வந்தான்
(அத்தகைய நரசிம்ம ரூபி பரமாத்மனை நான் வணங்குகிறேன்).

’எல்லரொளு தானிப்ப தன்னொளகெல்லரனு தரிசிஹனு’ என்று இந்த சந்தியின் கடைசி பத்யத்தில் சொல்லியிருக்கிறார் தாசராயர். பரமாத்மனை உபாசனை செய்து வருபவர்கள், இறுதிக்காலத்திலும் இப்படியே உபாசனை செய்து, சத்கதியை அடைவார்கள் என்று சொல்வதற்காக இந்த பத்யத்தில் இப்படி சொல்லியிருக்கிறார்.

பாகவத மூன்றாம் ஸ்கந்தத்தில், கர்தமன் தன் இறுதிக்காலத்தில் செய்த தியானத்தை விளக்கும்போது:

ஆத்மானம் சர்வபூதேஷு பகவந்தமவஸ்திதம் |
அபஷ்யத்சர்வ பூதானி பகவத்யபிஜாத்மனி ||
வாசுதேவே பகவதி சர்வக்ஞே ப்ரத்யகாத்மனி பரேண பக்திபாவேனலப்யாத்மா முக்தபந்தன: |
இச்சாத்வேஷ விஹீனேன சர்வத்ர சமசேதஸா |
பகவத்பக்தி யோகேன ப்ராப்தே பாகவதீம் கதிம் ||

அனைத்து பிராணிகளிலும் அந்த பகவந்தன் இருப்பதையும், அந்த பகவந்தனில் அனைத்து பிராணிகளும் இருக்கின்றன என்பதையும், அந்த பரமாத்மன் தம்முள் இருக்கிறான் என்பதையும் தியான யோகத்தின் மூலமாக அறிந்தார். இப்படி, சர்வக்ஞனான, தமக்குள் பின்னனாக இருக்கும் வாசுதேவ நாமக ஸ்ரீபரமாத்மனிடம் பக்தி கொண்டு, அந்த பகவத் ஸ்வரூபத்தை அறிந்து, பந்தங்களிலிருந்து முக்தராகி, ஆசை த்வேஷம் ஆகியவற்றை விட்டு, அனைத்து இடங்களிலும் நிலைத்திருக்கும் பகவந்தனின் ரூபங்களில் அறிவை வைத்து, இதன் மூலம் பரமாத்மனின் லோகத்தை அடைந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், பரமாத்மனை அனைவரிடமும், அனைவரிடத்தில் பரமாத்மனையும், அதே பரமாத்மனை தனக்குள்ளும் இருக்கிறார் என்பதை அறியவேண்டும் என்று இந்த பதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தனக்கு சமம் என்று யாருமே இல்லாத, மன்மதனின் தந்தையான, இந்த உலகத்தில் ஆதி, அந்தம், மத்யம் என அனைத்து காலங்களிலும் இருக்கக்கூடிய, அந்த அனைத்து காலங்களையும் நன்கு அறிந்தவனான, மற்றும்
என்னபஷ்யந்தி பஷ்யந்தம் சக்ஷுர்யஸ்யனரிஷ்யதி |
தம்பூத நிலயம் தேவம் சுபர்ணமுபதாவத ||

என்னும் பாகவத வசனத்திற்கேற்ப, அனேக சூரியர்களை ஒரே நேரத்தில் பார்த்தாலும், பரமாத்மனின் கண்களுக்கு கூச்சம் ஏற்படாது. பிறர் ஒரே ஒரு சூரியனைக்கூட நேராக பார்க்கமுடியாதவர்களாக இருக்கின்றனர். சூரியன் பரமாத்மனை பார்க்க வேண்டுமென்றாலும், கூச்சத்தில் தன் கண்களை மூடிக்கொள்கிறான். பரமாத்மன் அனேக கோடி சூர்யர்களின் ஒளியைக் கொண்டிருக்கிறான் என்பது பொருள். மேலும் அனந்த குணங்களைக் கொண்டவன். தானவர்களைக் கொல்பவன்.

தாசராயரின் உபாஸ்ய மூர்த்தி, நரசிம்ம தேவர் ஆனதால், சந்தியின் இறுதி பத்யத்தில் நரசிம்மனையே போற்றுகிறார். தன் பிம்பமூர்த்தியான ஜகன்னாதவிட்டலன், தன் பக்தனான பிரகலாதன், தன்னுடைய தந்தைக்குக் கூறிய வசனம்: 'க்வாஸௌ யதி சர்வத்ர கஸ்மாத் ஸ்தம்பேன த்ருஷ்யதே'.

ஹிரண்யகசிபு: உன்னுடைய கடவுள் எங்கும் இருக்கிறான் என்று சொல்கிறாயே, அவன் எங்கு இருக்கிறான்?.

பிரகலாதன், அவன் அனைத்து இடங்களிலும் இருக்கிறான்.

ஹிரண்யகசிபு: எல்லா இடங்களிலும் இருக்கிறான் என்றால் இந்தத் தூணில் ஏன் இல்லை?

பிரகலாதன்: ஹே ஸ்தம்பனே! (என்றால் ஜடப்பொருளின் அரசனே என்று பொருள்). எல்லா இடங்களிலும் பகவந்தன் இருக்கிறான் என்றபிறகு, ஜடமான கம்பத்திலும் இருந்தே இருக்கிறான் என்பதால், அதை நிரூபிப்பதற்காக 'ஹே ஸ்தம்பனே' என்று அழைக்கிறான்.

ஹிரண்யகசிபு: இப்போதே நான் உன்னை இந்த கதையால் அடிக்கிறேன். உன் ஸ்ரீஹரி இருப்பது உண்மையானால், வந்து உன்னை காப்பாற்றட்டும்.

என்று ஹிரண்யகசிபு பிரகலாதனை அடிக்க வரும்போது 'சத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்' உண்மையான பக்தனான பிரகலாதனின் வாக்கியத்தை உண்மையாக்குவதற்கு அந்த கம்பத்திலிருந்தே ஸ்ரீஹரி, நரசிம்ம ரூபத்தினால் வெளிவந்தான் -- என்னும் பாகவத வாக்கியத்தை தாசராயர் இங்கு குறிப்பிடுகிறார்.

இத்தகைய கருணைக்கடலான ஸ்ரீபரமாத்மனை நான் வணங்குகிறேன் என்று பொருள். இந்த சந்தி முழுக்க, பரமாத்மனின் வியாப்தியையே வர்ணித்திருப்பதால், இந்த கடைசி பத்யத்திலும் அந்த வியாப்தியையே சொல்லி, பகவன் மகிமையைக் கொண்டாடி, சந்தியை முடிக்கிறார் தாசராயர்.

வியாப்தி சந்தி இங்கு முடிவுற்றது.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து. ***